# டாடா

இ. கே. நடேச சர்மா, B.O.L.

# டாடா

ஆசிரியர் :

இ. கே. நடேச் சர்மா, B. O. L.

(Lecturer in Tamil, Loyola College, Madras)

புத்தக நிலையம்

தெப்பக்குளம் :: திருச்சிராப்பள்ளி

1944

44283 X8:wM39
N44

## பதிப்புரை

எளிய நிலைமையிலே பிறந்து, சொந்த உழைப்பினுலேயே முன்னுக்குவந்த பெரியோர்கள் பலர். அவர்களுள் ஸ்ரீ ஜாம்ஸெட்ஜி டாடாவும் ஒருவர். அவர் தம்முடைய சலியாத உழைப்பினுல் தமக்குப் பெருமை ஏற்படுத்திக் கொண்டதுமல்லாமல் இந்தியாவுக்கும் பெருமை உண்டாக்கியிருக்கிருர். இன்று அவரை வணிகமன்னர் என்று பாரததேசம் முழுவதும் புகழுகிறது.

அவருடைய முன்னேற்றத்துக்குக் காரணம் என்ன என்பதையும் அவருடைய குணுதிசயங்களையும் இன்றைய இளைஞர்கள் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமன்ருே? அந் நோக்கத்தை ஆதாரமாகக்கொண்டே இந் நூலை வெளியிட்டிருக்கின்ருேம். அழகிய, இனிய தமிழில் இந் நூலை எழுதியளித்த ஸ்ரீ இ. கே. நடேச சர்மா அவர்களுக்கு எங்கள் நன்றி உரியதாகுக.

புத்தக நிலையம்

சக்தி பிரஸ் லிமிடெட்,
(சாந்தி பிரஸ்) சென்னை

# நான் முகம்

நம் நாடு விவசாய நாடு. ஆதலின், பயிர்த் தொழில் அதன் உயிர்த் தொழில். வர்த்தகமும் கைத் தொழிலும் அதன் இரு கண்கள். இந்தியா, இவ்விரண்டினும் போதியமுன்னேற்றம் அடையாத காரணத்தால், செல்வ வளம் குன்றி வறுமையால் வாடுகின்றது. இத்துறைகளை வளர்ப்பவரே இக் காலத்து இந் நாட்டுக்கு உண்மைத்தொண்டு புரிபவராவர். இத்தகைய பெரியோர்களுள் தலையாயவர் நம் டாடா.

இந்தியாவின் பழங் கைத்தொழில்களைப் புதுப்பித்தல், புத்தம்புதிய ஆலைத் தொழில்களைத் தோற்றுவித்தல், கூரிய அறிவு படைத்த இளைஞர்பால் கல்வியறிவும் கலையறிவும் பெருகும்படி செய்வித்தல் என்னும் மூன்றனையும் தம் முக்கிய நோக்கமாகக் கொண்டு, உடல் பொருள் ஆவி மூன்றனையும தம் தாய்நாட்டுக்கு அர்ப்பணம் செய்த வள்ளலாகிய இவ் வாணிபமன்னரின் வரலாறு நம் நாட்டு மக்கள் அனைவரும் படித்து இன்புற வேண்டுவது ஒன்று. அம்மட்டோடு நில்லாமல், அவர் சென்ற வழியைப் பின்பற்றும் பேறு பெற்றோரே இந் நாட்டில் பிறந்த பயனைப் பெற்றோராவர்.

இந் நூலைக் கல்லூரிமாணுக்கர் பிறருதவியின்றிப் படித்தல் வேண்டும் என்பது என் கருத்தாகலின், இஃது இயன்றவரை எளிய நடையில் எழுதப்பெற்றுள்ளது. இச் சிறுநூலில் காணுங் குறைகளை அறிஞர் பொறுக்க.

சென்னை,
16-8-'44

ஆக்கியோன்

# உள்ளுறை

| | பக்கம் |
|---|---|
| பிறப்பும் வளர்ப்பும் ... | 1 |
| முதலனுபவங்கள் ... | 12 |
| எம்ப்ரெஸ் மில்ஸ் ... | 18 |
| இன்னுஞ் சில ஆலைகள் ... | 31 |
| தாஜ்மஹால் ஹோடல் ... | 44 |
| போட்டியும் தோல்வியும் ... | 52 |
| பட்டுத்தொழில் ... | 61 |
| இந்திய விஞ்ஞானக்கலை ஆராய்ச்சிக்கழகம் | 69 |
| இரும்பும் எஃகும் ... | 85 |
| நீர்மின்சாரத் திட்டம் ... | 99 |
| குடும்பவாழ்க்கை ... | 108 |
| இறுதிக்காலம் ... | 118 |
| நற்பண்புகள் ... | 126 |

# 1. பிறப்பும் வளர்ப்பும்

கெய்க்வாரின் ஆட்சிக்குட்பட்ட பரோடா சம்ஸ்தானத்தில் சூரத் நகருக்குச் சுமார் இருபது மைலுக் கப்பால் நவ்சாரி என்ரெரு சிறிய கிராமமுளது. அனேக நூற்ருண்டுகளாக அங்கே ஸொராஸ்டிரியர்கள் (Zoroastrians) வசித்துவந்தனர். அதிலும், முக்கியமாக, மேற்கிந்தியாவில் பார்சிக்காரர்களின் புரோகித வம்சத்தினர், நவ்சாரியைத் தமது தலைநகரமாகக் கொண்டிருந்தனர்.

தலைமுறை தலைமுறையாக இந்தப் புரோகித வகுப்பினர் உலகப்பற்றற்ற சந்நியாசிகளைப் போல் எளிய வாழ்க்கையையே நடத்திவந்தனர். பூசை செய்வதிலும் பிரார்த்தனையிலுமாக அவர்கள் காலங் கழித்துவந்தனர். அவர்களுடைய தூய வெண்மையான உடையைக் கண்ட அனைவரும் அவர்களிடம் வணக்கமும் மரியாதையும் கொண்டிருந்தனர்.

ஆனல், அப் புரோகித வம்சத்திற் பிறந்த நஸ்ஸர்வான்ஜி டாடா ஆசையற்ற துறவியல்லர். சிறு வயது தொடங்கி வியாபாரத்தின் முக்கிய அம்சங்களை அவர் கற்றுக்கொண்டார்; முதலில் நவ்சாரியில் ஒரு ரொக்கக்கடையில் காரியம் பார்த்து வந்தார்; பின்னர்க் குடும்பத்துடன் பம்பாய் நகரை

யடைந்தார்; பம்பாயிலிருக்கும்போது, சாமான்கள் கிடைக்குமிடம், சாமான்கள் விற்கக்கூடிய இடம் எல்லாம் அவர் அறிந்துகொண்டார். படிப்பில்லா விட்டாலும் நஸ்ஸர்வான்ஜி மிகவும் கெட்டிக்காரர்; சுயபுத்தியுள்ளவர்; இங்ஙனம் சில நாட்கள் செட்டுங் கட்டுமாயிருந்து அவசியமான நிதி திரட்டிப் பெரிய வர்த்தகத் துறையிலிறங்கினர்.

நஸ்ஸர்வான்ஜி சிறு குழந்தையா யிருந்த போது விநோதமான சம்பவமொன்று நடந்தது. ஒரு ஜோஸியன் நஸ்ஸர்வான்ஜியைப் பார்த்து, "இவன் ஏழுமாடி வைத்த வீடு கட்டுவான்; பலமுறை தேசசஞ்சாரம் செய்வான்; பெரிய பணக்காரனு வான்" என்று சொன்னனும். அச் சமயம் அங்கே யிருந்த சிறுவர்களெல்லாம் அதைக் கேட்டுக் கலீ ரெனக் கைகொட்டி நகைத்தனராம். ஆனல், அவன் கூறிய மொழியனைத்தும் இறுதியில் உண்மையா யின. பம்பாயில் வியாபாரத்தில் அதிக லாபம் கிடைக்க வழியிருந்தது. நஸ்ஸர்வான்ஜி பணம் சம்பாதித்து வேண்டிய அளவு சேகரித்தவுடன், கோட்டை ஜில்லாவில் ஏழு மாடி வைத்த பெரிய வீடொன்றைக் கட்டினர்; பிற்காலத்தில் சீனு, ஜப்பான் முதலிய நாடுகளிலும் பிரயாணம் செய்தார்.

1839-ம் ஆண்டில், நஸ்ஸர்வான்ஜிக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அப்போது அவர்க்கு வயது பதினேழு. அக் குழந்தை தாயார் வீடாகிய நவ்சாரி

யிலே பிறந்தது. அக்குழவியின் பெயர்தான் ஜாம்ஸெட்ஜி என்பது. குலாசாரப்படி குழந்தைக்கு மத சம்பந்தமான பாடங்களெல்லாம் கற்பிக்கப் பட்டன. நாளடைவில் 'புரோகிதர்' என்று பிறரால் அழைக்கவும் பெற்ருர். நவ்சாரியி லிருந்த பழைய பள்ளிக்கூடத்தில் எழுதப் படிக்கவும் அவர் கற்றுக் கொண்டார். சிறு கிராமத்தில் என்னதான் அதிக மாகக் கற்றுக்கொள்ள முடியும்? ஆகையால் அவர் கற்றுக் கொண்டவையெல்லாம் மிகச் சொற்பமே.

பதின்மூன்ரும் வயதில் ஜாம்ஸெட்ஜி தம் தகப்பனருடன் பம்பாய் சென்ருர். அடுத்தவருஷம் அவர் 'எல்பின்ஸ்டன்' (Elphinstone) பள்ளிக்கூடத் திற் சேர்ந்தபின்னரே அவருடைய படிப்பாரம்பமா யிற்று என்னலாம். 1856-ம் ஆண்டில் கலாசாலையில் சேர்ந்து தமது கெட்டிக்காரத்தனத்தால் சம்பளமில் லாமல் படித்து வந்தார். அப்பொழுதுதான் ஜாம் ஸெட்ஜியின் மேதை வெளியாயிற்று. அசாத்திய உழைப்பு, புத்திகூர்மை முதலிய அரிய குணங்கள் மேம்பட்டுத் தோன்றின. அவருக்குப் படிப்பிலேயே ஒரு தீவிரமான ஆசையுண்டாயிற்று.

கலாசாலையிற் படிக்கையில் ஜாம்ஸெட்ஜி சிறி தும் வீண் பேச்சுப் பேசிக் காலம்கழிக்கமாட்டார். ஆகையால், அவருக்கு அப்பொழுது நண்பர்கள் சிலரே. ராமகிருஷ்ண பண்டார்க்கார், தின்ஷா

வாச்சா முதலிய பெரியார்களே அவருடைய நட்புக்குப் பாத்திரர்களாயிருந்தனர்.

1858-ம் ஆண்டில் ஜாம்ஸெட்ஜி, டாடா பட்டம் பெற்றார்; கலாசாலையினின்றும் வெளியேறினார். வியாபாரத் துறையி லீடுபடவேண்டு மென்ற எண்ணம் அப்பொழுது அவருக்கு இல்லை. உபாத்தியாயராகவோ வக்கீலாகவோ இருக்க வேண்டுமென்று அவர் நினைத்திருந்தார். ஆனால், அவருடைய அதிர்ஷ்டவசத்தினாலோ இந்தியாவின் புண்ணிய வசத்தாலோ டாடா வியாபாரத் துறையிலீடுபடும்படியாயிற்று. சிறிதுகாலம் ஒரு வக்கீலிட மிருந்த அவர், அதைவிட்டு 1859-ம் வருஷம் தகப்பனாருடன் வியாபாரத்தில் ஈடுபடலானார்.

அவர்களுடைய குலாசாரப்படி ஜாம்ஸெட்ஜிக்குப் பாலியத்திலேயே விவாகம் நடந்தேறியது. புரோகித வம்சத்தைச் சேர்ந்த கர்ஸட்ஜி டாபூ (Cursetji Daboo)என்பவருக்குப் புத்திரியான ஹீராபாய் என்பவரே அவருக்கு மனைவியாக வாய்த்தார். ஹீராபாய் தெய்வபக்தியும், தருமசிந்தனையும் நிறைந்தவர். பிற்காலத்தில் ஜாம்ஸெட்ஜி செய்த தான தர்மங்களுக்கு ஹீராபாயும் பொறுப்பாளியா யிருந்தாரென்பதில் சிறிதும் ஐயமில்லை. இந்தப் பாலிய விவாகத்தின் பயனாய், ஜாம்ஸெட்ஜிக்கு இருபதாவது வயதிலேயே ஓர் ஆண் குழந்தை பிறந்தது.

ஜாம்ஸெட்ஜி டாடா தம் தந்தையாரின் 'நஸ்ஸர் வான்ஜி அண்டு கலியாண்தாஸ்' என்னும் கம்பெனியில் தொழில் கற்றுக்கொண்டார்; அங்கிருந்தபடி அவருடைய தகப்பனரின் மேற்பார்வையில் சாமான்களைப்பற்றியும், விலைவாசிகளைப்பற்றியும் நன்ருய்த் தெரிந்துகொண்டார். அவருடைய கலாசாலைப் படிப்பு அவருக்கு மிக்க உதவியாயிருந்தது. பிறர் பல நாட்கள் கஷ்டப்பட்டுக் கற்கவேண்டிய வியாபாரத் தந்திரங்களை ஜாம்ஸெட்ஜி சில நாட்களிலேயே கற்றுக்கொண்டார்; நாணயமாற்றின் நுட்பங்களை அறிந்தார்; இந்தியாவுக்கும் சீனவுக்குமுள்ள வியாபார சம்பந்தங்களையும் நன்குணர்ந்தார்; அதன் பயனய்த் தந்தையாரின் சீன வியாபாரத்தைக் கவனிக்கும் ஆற்றலையும் பெற்ருர்.

1859-ம் வருஷம் டிசம்பர் மாதம் 'ஜாம்ஸெட்ஜி அண்டு ஆர்டேஷீர்' (Jamsetji & Ardeshir) என்ற பெயருடன் ஹாங்காங் (Hong Kong) என்ற நகரில் ஒரு கிளைக்கம்பெனி ஸ்தாபிக்கப்பட்டது. அக் கம்பெனியின் முதலாளிகள், நஸ்ஸர்வான்ஜி, கலியாண்தாஸ், பிரேம்சந்த் ராய்ச்சந்த் முதலியவராவர். அவர்கள் பருத்தி, ஒபியம் (Opium) ஆகிய இரண்டு பண்டங்களிலுமே முக்கியமாக வியாபாரம் செய்தார்கள். இந்தியாவிலிருந்து அவ்விரண்டையும் சீனவுக்கு அனுப்பி விற்று, அவற்றிற்குப் பதிலாகச் சீனவிலிருந்து தேயிலை, பட்டு, கற்பூரம் முதலிய சாமான்களை இந்தியாவுக் கனுப்பி வர்த்தகம் செய்தனர். அந்த

வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைத்தது. ஜாம்ஸெட்ஜி சீனுவுக்குச் சென்ற சில மாதங்களுக்கெல்லாம் ஷாங்கை (Shanghai) என்னும் நகரில் வேருெரு கிளை ஆபீஸ் ஸ்தாபித்தார்; சீனுவி லிருக்கும்பொழுது கீழ்த்தேச வியாபார வர்த்தமானங்களையெல்லாம் நன்ருய்த் தெரிந்துகொண்டார்.

1863-ம் வருஷம் சீனுவைவிட்டு ஜாம்ஸெட்ஜி பம்பாய் வந்து சேர்ந்தார். அப்பொழுது பம்பாய் வர்த்தகத்தில் பெரிய அமளி யேற்பட்டிருந்தது. உலகில் பருத்தி கிடைக்கும் தேசங்கள் மூன்று. ஒன்று அமெரிக்கா; மற்ருென்று ஈஜிப்ட் (Egypt) மூன்ருவது இந்தியா. அமெரிக்கப் பருத்தியே எல்லாவற்றிலும் உயர்ந்தது. லங்காஷயர் ஆலைகளில் அமெரிக்கப் பருத்தியையே உபயோகிப்பது வழக்கம். ஜாம்ஸெட்ஜி சீனுவிலிருந்து பம்பாய் வந்தடைந்த காலத்தில், வட அமெரிக்காவில் உள்நாட்டுச் சண்டை (Civil war) நடந்துகொண்டிருந்தது. தென்பாகத்தினருக்கும் பிரஸிடெண்டு லிங்கன் (President Lincoln) தலைமையிலுள்ள வடபாகத்தினருக்கும் தீவிரமான யுத்தம் நடந்தது. பிரஸிடெண்டு லிங்கன் அடிமை வாழ்வை அகற்றவேண்டுமென்று போராடினுர். தென்பாகத்தினர், அக்கருத்துக்கு மாறுபட்டனர். பருத்தி உற்பத்தியாவதெல்லாம் தென்பாகத்தில்தான். லங்காஷயர் தொழிலாளிகள் பிரஸிடெண்ட் லிங்கனிடம் அநுதாபம்

கொண்டிருந்தனர். ஆகையால், அவர்கள் லிங்கனுக்கு விரோதிகளான தென்பாகத்தினரிடமிருந்து பருத்தி வாங்கக் கூடாதென்று தீர்மானித்தனர். அத்தீர்மானத்தின் பயனாய் இந்தியப் பருத்தி வர்த்தகம் என்றுமில்லாத உன்னத பதவியை யடைந்தது. இந்தியப் பருத்தி வியாபாரிகளுக்குக் கனவிலும் கருத முடியாத லாபமேற்பட்டது.

அதிக லாபத்தை யடைந்த இந்திய வியாபாரிகளுக்குத் தலைகால் தெரியவில்லை. வந்த லாபத்தையெல்லாம் பத்திரமாய் வைத்துக்கொள்ளாமல் அதிக ஆசை படைத்தவர்களாகிப் பத்திரமற்ற பல வழிகளில் பணத்தைப் போட்டனர். அவர்களுள் பிரேம்சந்த் ராய்ச்சந்தும் ஒருவர். இரண்டுமடங்கு வியாபாரமும் அதிக லாபமும் பருத்தி வியாபாரத்திலிருந்தனவல்லவா? அப்பொழுது பிரேம்சந்த் ராய்ச்சந்த் பருத்தித் தரகராய்ச் (Cotton Broker) சில நாட்களிலிருந்து வெற்றி வெறிகொண்டு பணத்தைப் பல வியாபாரங்களிலும், பாங்கிகளிலுமாகப் போட்டு வைத்தார். "ஏஷியாடிக் பாங்கிங் கார்ப்பொரேஷன்" (Asiatic Banking Corporation) என்ற பாங்கி அவருடையதாகும்.

பிரேம்சந்த் ராய்ச்சந்து, 'நஸ்ஸர்வான்ஜி அண்டு கலியாண்தாஸ்' என்ற கம்பெனியின் சொந்தக்காரர்களுள் ஒருவர். ஆகவே அவருக்கும் நஸ்ஸர்

வான்ஜி டாடாவுக்கும் அதிக சம்பந்தமுண்டு. ஜாம் ஷெட்ஜி பம்பாய் வந்தடைந்த சில நாட்களுக் கெல்லாம் பிரேம்சந்த், தமது கம்பெனியின் கிளை யொன்றை லண்டனில் ஸ்தாபிக்கத் தீர்மானித்தார். அந்த ஆபீஸுக்கு ஜாம்ஷெட்ஜியையே அனுப்பும் படி ஏற்பாடாகியிருந்தது.

ஜாம்ஷெட்ஜி லண்டனுக்குப் போகுமுன் நடந்த ஒரு சம்பவத்தைப்பற்றி இங்கே குறிப்பிடவேண்டும். ஏனென்ருல் அச்சம்பவம் டாடாவுக்கு நல்லறிவு கொளுத்தியது; மேலும் அவருடைய மனோவன்மை யையும் வெளிப்படுத்தியது. இந்தியரின் கவுரவத்திற் குப் பங்கம் நேரிட்ட போதெல்லாம் டாடாவின் ஆத் திரம் கரைகடந்து சென்றதற்கு அன்றைய சம்ப வமே ஒரு காரணமாயிருக்கலாம்.

இளவரசரின் கலியாணத்தை உத்தேசித்து ஒரு கொண்டாட்டம் நடைபெற்றது. அதற்குப் பிரேம் சந்த் ராய்ச்சந்து, ஜாம்ஷெட்ஜி, அவர் மகன் டோராப்ஜி முதலியவர்கள் போயிருந்தனர். வாண வேடிக்கை நடந்துகொண்டிருந்தது. நடுவில் பிரேம் சந்து எழுந்து ஒரு நண்பருடன் பேசச்சென்ருர். அச் சமயம் ஓர் ஆங்கில உத்தியோகஸ்தர் சில ஆங் கில ஸ்திரீகளுக்கு இடந்தேடி வந்தார். பிரேம்சந்த் உட்கார்ந்திருந்த நாற்காலி காலியாயிருந்ததால் அதை அங்கிருந்து அவர் எடுத்துச்செல்ல எத்தனித் தார். அது பிரத்தியேகமான இடமென்றும் அதை,

எவரும் எடுக்கக்கூடாதென்றும் சொல்லி ஜாம் ஸெட்ஜி தடுத்தார். அந்த ஆங்கிலேயருக்கு மிகுந்த கோப முண்டாயிற்று. "என்னைத் தடுக்க நீயார்? உன்னை இப்பொழுதே சிறையில் அடைப்பேன்" என்று பயமுறுத்தினர். அக்காலத்திய இந்தியர், ஆங்கிலேயருக்கு அஞ்சுவது வழக்கம். டாடாவும் அவ்வாறு அஞ்சுவாரென்று அந்த ஆங்கிலேயர் எண்ணினர் போலும்! அதனல் டாடாவுக்கு கோபமுண்டாயிற்றே யன்றிப் பயமுண்டாகவில்லை. நாற்காலியை விட முடியாதென்று கண்டிப்பாய் மறுத்துவிட்டார். டாடா இன்னரென்பதை யறிந்ததும், அந்த ஆங்கிலேயர் சிறிது பின்வாங்கினர். கடைசியில் டாடாவினிடம் மன்னிப்பும் கேட்டுக்கொண்டார். சுயமரியாதையையும், சுதேச மரியாதையையும் டாடா என்றும் விட்டுக்கொடுக்க மாட்டார்.

1864-ம் ஆண்டின் தொடக்கத்தில் ஜாம்ஸெட்ஜி இங்கிலாந்துக்குப் பிரயாணமானர். போகும் பொழுது தம்முடன் அநேக உண்டியற் சீட்டுக்களைக் கொண்டுபோனர். அவைகளையெல்லாம் பணமாக மாற்றிக்கொள்ளலா மென்று அவர் நம்பியிருந்தார். ஆனல், அவர் கடலிலிருக்கும்போது, தாம் கொண்டு போகும் சீட்டுக்களில் முக்காற்பங்கு செல்லாதவை யென்று தெரிந்துகொண்டார். பிரேம்சந்த் ராய்ச்சந்தின் பணமெல்லாம் போய்விட்டது. அவருடைய கம்பெனியோ அழிந்துவிட்டது. புதியதொரு தேசத்தில் கையில் யாதொரு ரொக்கமுமின்றி ஜாம்ஸெட்ஜி

வந்திறங்கினர். அவருடைய வயதுள்ள எவரும் அந்தச் சமயத்தில் மனமுடைந்து போயிருப்பர். ஆனல் டாடாவோ தமது அஞ்சா நெஞ்சத்தினுலும் புத்தி கூர்மையினுலும் அந்த ஆபத்தான நிலைமையிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டார்.

அவருடைய கம்பெனிக்கு நாணயம் செல்ல வேண்டுமானல் யோக்கியதையும் சூட்சும புத்தியுமுடைய ஒருவர் அவசியம் வேண்டும். அப்பொழுது தான் மற்ற வியாபாரிகளுக்கு ஜாம்ஸெட்ஜியின் கம்பெனியில் நம்பிக்கையுண்டாகும். ஆகவே, டாடா தாமே, கடன் கொடுத்தவரிடத்திலும், பாங்குக்காரர்களிடத்திலும் உள்ள நிலைமையை உள்ளபடியே எடுத்துரைத்தார். கடன் கொடுத்தவர்கள் அவருடைய சாதுரியமான பேச்சையும் நற்குணங்களையும் கண்டு, அவரைப் பூரணமாக நம்பினர்கள்.

ஜாம்ஸெட்ஜி இங்கிலாந்திலிருந்த காலத்தில் பருத்தி வியாபார சம்பந்தமாக அடிக்கடி லங்காஷயர் சென்ருர். அப்பொழுது பருத்தி வர்த்தகத்தைப் பற்றியும் ஆலைகளைப்பற்றியும் சிறிதளவு தெரிந்து கொண்டார். இங்கிலாந்தில் தம் வேலை முடிந்ததும் இந்தியாவுக்குத் திரும்பிவந்தார். அப்பொழுது பிரேம்சந்த் ராய்ச்சந்து வியாபாரத்தில் தாங்கமுடியாத நஷ்டமடைந்திருந்தார். நஸ்ஸர்வான்ஜி முழுமையும் அழியவில்லை. மீதியாயிருந்த சிறு தொகையைத் தந்தையும் மகனுமாக ஒழுங்காய்க் காப்பாற்

றிக்கொண்டு நற்காலத்தை எதிர்பார்த்தபடி மூன்று வருஷகாலமாகக் கஷ்டப்பட்டார்கள். இதன் காரணமாக ஜாம்ஸெட்ஜி பெரியதொரு படிப்பினைக் கற்ருர். வியாபாரத் துறையில் எப்பொழுதும் எதையும் ஆராய்ச்சி செய்து நிதானமாய் ஆழ்ந்து ஆலோசனை செய்யவேண்டுமென்று அவர் கண்கூடாகக் கண்டுகொண்டார். இந்தப் பாடத்தை டாடா என்றும் மறக்காமல் பழக்கத்திற் கொண்டுவந்ததனுலேயே, பிற்காலத்தில் வர்த்தகத்தில் வெற்றிபெற்ருர்.

## 2. முதலனுபவங்கள்

இன்பமும் துன்பமும் கலந்தது வாழ்க்கை. அது போலவே, வாணிகத்திலும் லாபமும் உண்டு; நஷ்டமும் உண்டு. நற்காலத்தை எதிர்பார்த்திருந்த நஸ்ஸர்வான்ஜியை லாபம் தரக்கூடிய ஒரு அரிய சந்தர்ப்பம் வந்தடைந்தது.

அபிஸீனியாவின் அரசனுக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்கும் மனஸ்தாப மேற்பட்டிருந்தது. ஆதலால், அந்த அரசன் பிரிட்டிஷ் குடிகளுட்சிலரை அக்கிரமமாகச் சிறைப்படுத்தினன். எவ்வளவோ நயமாகக் கேட்டும் அந்தக் கைதிகளை விடுதலைசெய்ய மறுத்துவிட்டான். வேறு வழியின்மையால், ஆங்கிலேயர் அபிஸீனியாவின்மேல் யுத்தம் தொடங்கத் தீர்மானித்தனர். அந்த யுத்தத்திற்கு இந்தியப்போர் வீரர் சென்றனர். இந்தியப் போர்வீரர்களுக்குத் தேவையான உணவுப்பொருள்களையும் ஆடைகளையும்பற்றி நஸ்ஸர்வான்ஜி டாடாவுக்கு அதிகப் பரிசயமுண்டு. அதனல், அபிஸீனியச் சண்டையில் நஸ்ஸர்வான்ஜி சேனைகளுக்கு வேண்டிய உணவு, உடை முதலியவற்றைக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டார். அத்தொழிற்குத் துணையாகச் சில கூட்டாளிகளையும் தம்மூடன் சேர்த்துக் கொண்டார். சேனைத்தலை

வர் ஒரு வருடத்திற்கு வேண்டிய உணவுப் பொருள் களை வாங்கிக்கொண்டார். அதன்பயனுக நஸ்ஸர் வான்ஜிக்கும் மற்ற கூட்டாளிகளுக்கும் பெருவாரி யான லாபம் கிடைத்தது. டாடா வம்சம் மீண்டும் செல்வச் சிறப்புடன் விளங்கிற்று.

இந்த லாபத்தில் ஜாம்ஸெட்ஜிக்கும் ஒரு பங்கு கிடைத்தது. இங்கிலாந்திலிருந்தபோது அவர் அடிக் கடி மான்செஸ்டரைப் பார்வையிட்டிருக்கிருர். அந் நாள்தொட்டுப் பருத்தி ஆலை ஒன்றைத் தாம் நிறுவ வேண்டுமென்று அவர் மனத்தில் ஓர் எண்ணம் குடிகொண்டிருந்தது. அதற்குத் தகுந்த சந்தர்ப்பம் 1869-ம் வருடத்தில் ஏற்பட்டது. சிஞ்ச்பூக்ளி (Chinch Poogly) யென்றவிடத்தில் எண்ணெய் பிழியும் ஆலை யொன்றிருந்தது. அந்த ஆலையின் சொந்தக்காரர் ஏராளமான நஷ்ட மடைந்தவர். அதனுல் அவர்தம் செல்வமனைத்தையும் இழந்தார். ஜாம்ஸெட்ஜி அந்த ஆலையை வாங்கி அதைப் பருத்தி ஆலையாக மாற்றி ஞர். அந்த ஆலைக்கு அலெக்ஸாண்டிரியா (Alexandria) மில் என்று புதுப்பெயரிட்டு, அதன் விஷயங் களை யெல்லாம் டாடாவே மேற்பார்த்து வந்தார். சீக்கிரத்தில் நல்ல லாபம் கிடைத்தது. ஆனுல் டாடா அதை நீண்ட காலம் நடத்தவில்லை. அவர் இரண்டு வருஷத்திற்கெல்லாம் கேசவ்ஜி நாய்க் என்பாருக்கு அலெக்ஸாண்டிரியா மில்லை நல்ல விலைக்கு விற்று விட்டார். இதனுல் டாடாவுக்கு மேன்மேலும் நல்ல அனுபவமும் ஊக்கமும் உண்டாயின.

ஜாம்ஸெட்ஜியின் மனம் எப்பொழுதும் பெரிய துறைகளிலேயே சென்றுகொண்டிருந்தது. ஆனல் பெரியதொழிலில் ஈடுபடுமுன் லங்காஷயரில் அனுஷ்டிக்கும் முறையை நன்ருய்க் கற்கவேண்டுமென்று அவர் தீர்மானித்தார். புதியவழியில் நடத்தப்படும் யந்திரங்களின் சூட்சுமங்களை அறிய வேண்டுமென்பது அவர்தம் பேரவா. தம் அறிவைப் பெருக்கிக் கொள்ளும்பொருட்டு அவர் மறுபடியும் இங்கிலாந்து செல்லவேண்டுமென்று தீர்மானித்தார். ஆனல் இச்சமயம் இங்கிலாந்திற்கு நேர் மார்க்கமாகச் செல்ல அவருக்கு இஷ்டமில்லை. ஈஜிப்ட், ஸிரியா, பாலஸ்தீன், துருக்கி, ருஷியா முதலிய நாடுகளைக் கடந்து செல்லும் ஒரு மார்க்கத்தின் மூலமாய்ச் செல்ல அவர் ஆவல் கொண்டார்.

1873-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 26-உ டாடா பம்பாயை விட்டுப் புறப்பட்டார். அவருடன் ஒரு பார்ஸி நண்பரும் சென்ருர். இருவருமாகக் கைரோ (Cairo) அலெக்ஸாண்டிரியா (Alexandria) முதலிய நகரங்களைக் கண்டு ஆனந்தமடைந்தனர். இந்தப் பிரயாணத்தின்போது டாடா தினசரிக் குறிப்புக்கள் எழுதிவந்தார். அக்குறிப்புக்களுட் சில நகைச்சுவை யுடையன. சில அவர்தம் ரஸிகத்தன்மையை வெளியிட்டன. பல அவர்தம் கூரிய மதித்திறத்தை வெளிக்காட்டின. போகும்வழியில் டாடா பல்வகைப் பட்சிகளையும், மரங்களையும், செடிகொடிகளையும், கம்பளம்போல் விரிக்கப்பட்டிருந்த பசும்புற்றரைகளை •

யும், வானத்தின் வனப்பையுங் கண்டு குதூகலமடைந்தார். அப்பொழுதும் அவர் இந்தியாவை மறக்கவில்லை. அங்கே தாம் கண்ட சில செடிகளையும், மரங்களையும் இந்தியாவிற் பயிர்செய்து பார்க்கவேண்டுமென்று அவர் ஆசை கொண்டார். பிறதேசத்தில் தாம்கண்ட புதிய பொருள்களையெல்லாம் தம் தாய்-நாட்டின்கண் உற்பத்தி செய்யவேண்டுமென்ற உயர்கருத்து டாடாவின் நெஞ்சைவிட்டு என்றும் பிரிந்ததேயில்லை.

இந்தப் பிரயாணத்தின்போது ஜாம்ஸெட்ஜியின் இன்னொரு அருமையான குணம் வெளியாயிற்று. அவர் இங்ஙனம் எல்லா நகரங்களையும் கடந்து முடிவில் ஜெரூஸலேம் (Jerusalem) என்ற நகரை அடைந்தார். அங்கே ஸிரியன் கிறிஸ்தவப் பெண்களின் பள்ளிக் கூடத்திற்காகச் சிலர் நிதி திரட்டிக் கொண்டிருந்தனர். அந் நிதிக்கு ஜாம்ஸெட்ஜியும் தம்மாலியன்ற பொருளுதவி செய்தார். கிறிஸ்தவர்களின் பள்ளிக்கூடத்திற்குக் கிறிஸ்தவர் அல்லாத நாம் ஏன் உதவி செய்யவேண்டுமென்று அவர் நினைக்கவில்லை. கல்வியறிவைப் பரப்பும் விஷயத்தில் ஜாதி மதம் பார்ப்பது தவறென்பது டாடாவின் கொள்கையாகும்.

கடைசியாக டாடா இங்கிலாந்து சேர்ந்தார். இங்கேயுள்ள பற்பல புதிய யந்திரங்களையும் புதிய முறைகளையும் நேரிலேயே தெரிந்துகொண்டு 1874-ம்

வருட ஆரம்பத்தில் மறுபடியும் தனது தாய் நாட்டை யடைந்தார். பிரயாணத்தின் பயனாக அவருடைய நோக்கம் விசாலமடைந்தது, அவருடைய பிற்காலத் திட்டத்திற்கு இந்தப் பிரயாணம் மிகவும் அவசியமான தென்று சொல்லலாம். விஞ்ஞான நூல்களை அடிப்படையாகக் கொண்டு புதிய புதிய ஆலைகளைஏற்படுத்தியே தீரவேண்டுமென்னும் தீர்மானத்துடன் அவர் பம்பாயில் வந்திறங்கினார். பம்பாய் வந்தவுடன் பருத்தி உற்பத்தியாகு மிடங்களெல்லாவற்றையும் பற்றி அவர் ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தார். ஆனால் உடனே அவர் எந்தக் காரியத்தையும் செய்யவில்லை.

நிற்க ; அபிஸீனிய யுத்தத்தின் பயனாய்த் தான் அடைந்த லாபத்தைக் கொண்டு நஸ்ஸர்வான்ஜி - டாடா அத்தொழிலிலிருந்தே விலகிக் கொண்டார். சில நாட்களுக்கெல்லாம் அவருக்கே நோய்கண்டது. நோய் சிறிது சௌகரியமானவுடன் சீனா, ஜப்பான் முதலிய நாடுகளுக்குப் பிரயாணமானார். புத்துயிர் பெற்று வளர்ச்சியடைந்துகொண்டிருந்த அக்காலத்திய ஜப்பானுக்குச் சென்ற முதல் இந்தியப் பிரயாணி நஸ்ஸர்வான்ஜியே யாவார்.

வெளி நாட்டுப் பிரயாணத்தி லிருந்து வந்த நஸ்ஸர்வான்ஜி பம்பாயில் நண்பர்களுடன் விநோதமாகப் பொழுதுபோக்குவதற்கு ஒருசிறிய சங்கமேற்படுத்திக்கொண்டு வாழ்ந்து வந்தார். இங்ஙனம் சில

நாட்கள் கழிந்ததும் டாடா தம் பிறந்த இடமாகிய நவ்சாரிக்கே சென்று தம் இறுதிக் காலத்தைக் கடவுள் வழிபாட்டில் கழித்துவந்தார். தம் புத்திருடைய பெருமைமையையும், அவருடைய செல்வாக்கையும் இருந்து பார்க்கும் பாக்கிய மில்லாமல், நஸ்ஸர்வான்ஜி டாடா அறுபத்துநான்காவது வயதில், 1886-ம் வருடம் ஜனவரி மாதம் இருபத்தொன்பதாம் தேதி, பூத வுடலை நீத்துப் புகழுடம்பை எய்தினர்.

நஸ்ஸர்வான்ஜி இந்தியாவிற்குப் பெரியதொரு தானம் செய்துவிட்டுச் சென்ருர். அவர் பணத்தையோ வேறு எந்தப் பொருளையோ தேசத்திற்கு விட்டுச் செல்லவில்லை யென்பது உண்மை. ஆனல், இந்தியாவை உலகி லுள்ள மற்றத் தேசங்களுக்குள் ஒரு முக்கிய தேச மாக்கி, அதற்குப் பெருமையைத் தந்த தம் தவப் புதல்வராகிய ஜாம்ஸெட்ஜியை அளித்ததே ஒரு பெரிய தான மாயிற்று!

## 4. எம்ப்ரெஸ் மில்ஸ்

1851-ம் ஆண்டு கோவாஸ்ஜி நாநாபாய் டாவார் (Cowasji Nanabhay Davar) என்பவர் பம்பாயில் முதல்முதலாக ஒரு பருத்தி ஆலையை நிறுவினர். சுமார் இருபது ஆண்டுகளில் பன்னிரண்டு, பதின்மூன்று ஆலைகள் ஒன்றன்பின் ஒன்ருகத் தோன்றின. அவைகளெல்லாம் அனேகமாய்ப் பார்ஸிக்காரர்களுக்கே சொந்தமானவை. அந்த ஆலைத் தொழில் நாளுக்குநாள் சிறிது சிறிதாய் வளர்ந்து கொண்டே வந்தது.

இந்தியாவிலே அபரிமிதமான பருத்தி விளைந்து கவனிப்பா ரின்றிக் கிடந்தது. அப் பருத்தியைப் பயன்படுத்திப் பல வழியில் நெசவுத்தொழிலைச் செய்யலாம். ஆனல், அப்படி நெசவு செய்வதற்கு யாரும் முன் வராதது மிகவும் வருந்தத் தக்கதாகும். பருத்திச்செடியைச் சரியாய்ப் பயிரிடக்கூட எவருமில்லை. இந்த நிலைமையில் வெளிநாடுகளிலிருந்து இந்தியாவிற்கு ஆயிரக்கணக்கான துணிப்பொதிகள் இறக்குமதி யாயின. கைத்தறிகளினல் இந் நாட்டிலேயே நெய்த துணிகள் போதிய அளவுக்கில்லை.

ஜாம்ஸெட்ஜி டாடா பருத்தி ஆலையின்பேரில் விருப்பங் கொண்டு, அந்த ஆலைகளின் வேலைமுறைகளைக் கற்றுக்கொள்வதிலேயே பல ஆண்டுகள்



எம்ப்ரெஸ் மில்ஸ்

கழித்தா ரன்றோ? அவர் பம்பாயில் ஆலைகளை ஏற்படுத்தத் தீர்மானித்த காலத்தில், அந் நகரத்தில் சுமார் பதினைந்து ஆலைகள் ஓடிக்கொண்டிருந்தன. ஆனால், அவைகளெல்லாம் மிகமிகப் பிற்போக்கான நிலைமையி லிருந்தன. எந்திரங்களெல்லாம் பழைய காலத்து எந்திரங்கள். கட்டிடங்கள் ஆலைகளுக்குச் சிறிதும் தகுதியற்றவை. கட்டிடங்களிற் போதிய காற்றோட்ட மில்லை. வேலையாட்கள் ஒழுங்காக வேலைக்கு வருவதில்லை. இஷ்டப்பட்டால் வேலைக்கு வருவதும், பின்னர்த் திடீரென நின்றுவிடுவதுமாக இருந்தார்கள். தொழிலாளர்கட்கு அவர் செய்யுந் தொழிலில் அதிகப் பயிற்சியுமில்லை. தொழிலாளர்கட்கு வேண்டிய வசதிகளு மில்லை.

பருத்திவர்த்தகத்தை உயர்ந்த முறையில் ஒழுங்குடன் நடத்தி வழிகாண்பித்தவர் ஜாம்ஸெட்ஜி டாடா அவர்களே யாவர். சூயஸ்கால்வாயின் வழியாய் மேல்நாட்டிற்கும் கீழ்நாட்டிற்கும் அதிகப் போக்குவரவு ஏற்பட்டது. இந்தியாவிலே எங்கும் இரயில் பாதைகள் போடப்பட்டன. இதனால், வெளிநாட்டு வர்த்தகத்திற்கும், உள்நாட்டு வர்த்தகத்திற்கும் வசதிகள் அதிகமாயின. ஆனால் இந்த வசதிகளையெல்லாம் இந்திய வியாபாரிகள் பயன்படுத்தவில்லை. வழக்கம்போல் நிதானமாகவே அவர்கள் சென்று-கொண்டு, தத்தம் சிறிய வியாபாரத்துடன் திருப்தியடைந்திருந்தார்கள். டாடா இந்திய ஏற்றுமதி இறக்குமதிகளைப் பற்றி நன்றாய் ஆராய்ந்து

பார்த்துப் பருத்தித் தொழிலில் இந்தியா முன்னேற்றமடைவது மிகவும் அவசியமென்று கண்டார். நம் நாட்டுப் பருத்தியை வெளித் தேசங்களுக்கனுப்பி, வெளிநாட்டுத் துணியை வாங்கும் வழக்கத்தை நிறுத்தவும் அவர் தீர்மானித்தார்.

'அலெக்ஸாண்டிரியா மில்லை' விற்றதுமுதல் டாடா தாம் ஏற்படுத்தப் போகும் பெரிய ஆலையைப் பற்றியே எண்ணிக்கொண்டிருந்தார்; கடைசி முறை இங்கிலாந்துக்குச் சென்றுவந்ததுமுதல் அந்த ஆலை தொழில் தொடங்குவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தார்; தமது ஆலையை எங்கே ஸ்தாபிப்பது என்பதைப்பற்றி அவர் தீவிரமாய் ஆலோசனை செய்தார். அப்பொழுது பருத்தி ஆலைகளெல்லாம் பம்பாயிலேயே இருந்தன. ஆனால், பம்பாய் நகரம் பருத்தி பயிராகும் ஜில்லாக்களுக்கு மத்தியி லில்லை. பருத்தியைச் சிறிது தூரத்திலிருந்து கொண்டுவர வேண்டியிருந்தது. அதனால், பருத்தி ஜில்லாக்களுக்கிடையி லிருக்கும் ஒரு நகரத்திலேயே தம் ஆலையை ஏற்படுத்தத் தீர்மானித்தார். மேலும்; ஆலைக்குப் போதுமான நிலக்கரியும், நல்ல தண்ணீர் வசதியும் வேண்டும். சுற்றிலும் துணிகள் விற்கக்கூடிய கடைகளு மிருக்க வேண்டும். இத்தகைய எல்லா வசதிகளும் வாய்ந்த ஓர் இடத்தினைக் கண்டுபிடிக்கும்பொருட்டு டாடா ஊரூராய்ச் சுற்றிக் கொண்டிருந்தார். அவருக்கு மத்திய மாகாணத்திலுள்ள ஜபல்பூர் (Jhabbalpore) மனத்துக்குப் பிடித்ததாகத் தோன்றியது.

அவ்விடத்தி லிருந்த நீர்வீழ்ச்சியின் சக்தியால் ஆலையை நடத்தலா மென் றெண்ணிச் சர்க்காரின் அனுமதியைக் கேட்டார். ஆனால், சில முக்கியமான காரணங்களை முன்னிட்டுச் சர்க்கார் அனுமதி கொடுக்கவில்லை. ஜப்பல்பூரைப் போன்ற வசதி யான மற்றோ ரிடமும் அவருக்குப் புலப்பட்டது. அதுவே நாகபுரி. நாகபுரி மத்திய மாகாணத்தில் ஒரு பருத்தி விளையும் ஜில்லாவி லிருக்கிறது. அங் கிருந்து ஜி. ஐ. பி. ரெயில்வே ஆரம்ப மாவதால், போக்குவரவுக்கு மிக்க வசதிகள் உண்டு. பக்கத்தில் வாரோரா (Warora) நிலக்கரிச் சுரங்கம் வேண்டு மளவு நிலக்கரியைக் கொடுக்கும். சுற்றிலும் பல மைல்களி லுள்ள ஊர்களுக்கு நாகபுரியே பண்டங் கள் விற்பனையாகு மிடமாகும்.

ஆனால், நாகபுரிக் கருகில் வசதியான பெரு-வழிகள் இல்லை; சாமர்த்தியமான தொழிலாளர்கள் கிடைப்பதும் அரிது. டாடா நாகபுரியில் ஆலையை ஸ்தாபனம் செய்வா ரென்று தெரிந்தவுடன், அவரை யெல்லோரும் பரிகசித்தார்கள். அவற்றை யெல் லாம் அவர் பொருட்படுத்தவில்லை. நிலம் குறைந்த விலைக்குக் கிடைத்தபடியால் பத்து ஏக்கர் நிலம் வாங்கினர். அது ஒரு நீர் தேங்கிய சதுப்பு நிலம். டாடா அந் நிலத்தில் மண்ணடித்துப் போதுமான அளவுக்கு மேடாக்கினர்.

ஆலை ஏற்படுத்தியபின்னர், டாடா நாகபுரியி லேயே வசித்து வந்தார். "சென்ட்ரல் இந்தியா

ஸ்பின்னிங், வீவிங் அண்டு மானுபாக்சரிங் கம்பெனி லிமிடெட்" (Central India Spinning, Weaving & Manufacturing Company Ltd.,) என்று பெயர் கொண்ட ஒரு கம்பெனியை டாடா பதிவு செய்தார். அக் கம்பெனிக்கு மூலதனம் 15 லட்சம் ரூபாய். அது 500 ரூபாய் கொண்ட 3000 பங்குகளா லானது. ஜாம்ஸெட்ஜி பிறருடைய உண்மையான யோக்கியதையை யறிந்துகொள்வதில் மிகவும் கெட்டிக்காரர். அக் கம்பெனிக்கு ஒரு சாமர்த்தியசாலியான பொறுப்பாளி தேவை. அந்தப் பதவிக்கு டாடா, பெஸான்ஜி தாதாபாய் (Bezanji Dadabhai) என்னும் ஒருவரைத் தேர்ந்தெடுத்தார். பெஸான்ஜியின் சாமர்த்தியம் பின்னர் வெளியாயிற்று.

1877-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-வ விக்டோரியா, இந்தியாவின் சக்கரவர்த்தினியாய்ப் பிரகடனம் செய்யப்பட்ட அன்று நாகபுரியில் ஆலைகள் ஏற்படுத்தப்பட்டன. அத் தினத்தின் ஞாபகமாக அதற்கு "எம்ப்ரஸ் மில்ஸ்" என்னும் பெயர் இடப்பட்டது. அந்த ஆலைவிஷயத்தில் டாடா ஒரு பெரிய தவறு செய்துவிட்டார். இங்கிலாந்தில் எந்திரம் வாங்குகையில், எளியவிலையில் மோசமான எந்திரத்தை வாங்கிவிட்டார். அதன் காரணமாக ஆலையில் உற்பத்தியான சரக்கெல்லாம் கெட்டுப்போகவே, அந்தக் கம்பெனியின் பங்குகளின் விலை குறைய வாரம்பித்தது. தான் செய்த தவற்றினை டாடா உடனே உணர்ந்

தார்; உயர்ந்த புதிய எந்திரங்களை வாங்கும்பொருட்டு
மறுபடியும் ஐரோப்பாவுக்குச் சென்றார். பாரீஸ்மா
நகரத்தில் நடந்த கண்காட்சியைப் பார்த்துவிட்டு
லங்காஷயர் சென்று, ஜாம்ஸெட்ஜி விலை அதிகமாகக்
கொடுத்து உயர்ந்த எந்திரங்களை வாங்கிவந்தார்.
புதிய எந்திரங்கள் வந்தபின்னர்க் கம்பெனிக்கு நல்ல
லாபம் கிடைத்தது. வந்த லாபத்தில் ஒரு பாகம்
சாமான்களின் மதிப்புக் குறைவுக் (Depreciation)
கென்று எடுத்துவைக்கப்பட்டது. ஆண்டுதோறும்
ஆலைகளின் எந்திரப் பகுதிகள் புதுப்பிக்கப்
பெற்றன.

ஜாம்ஸெட்ஜிக்குத் தொழிலாளிகள் ஒழுங்கா
யமையவில்லையே யென்று பெரிதும் வருத்த மேற்
பட்டது. அப்பொழுது அங்கு இருந்தவர்களெல்
லோரும் சக்தி யற்றவர்களாகவும் வேலைக்குத் தகுதி
யற்றவர்களாயு மிருந்தனர். அவர்கள் பாதி நாள்
வேலைக்கு வருவதேயில்லை. தொழிலாளிகளை ஒழுங்கு-
படுத்த வேண்டி ஜாம்ஸெட்ஜி மிகுந்த முயற்சி
யெடுத்துக்கொண்டார். முதலில் அவர் வேலை
யாட்களுக்கெல்லாம் வீடுகள் கட்டி அவர்களை வர
வழைத்தார். ஆனால், முதலில் அந்த வீடுகளுக்கு
வர எவரும் விரும்பவில்லை. வெளியில் தங்கள் சொந்
தக்காரர்களுடன் சந்தோஷமாய் வாழ்ந்து வருவதே
மேலென்று அவர்கள் எண்ணினார்கள்.

ஆனால், ஜாம்ஸெட்ஜி தொழிலாளிகளைத் திருத்
திச் சரியான வழியிற் கொண்டுவர வேண்டுமென்று

எப்பொழுதும் முயன்றுகொண்டேயிருந்தார். தொழிலாளிகளுக்குக் கம்பெனியிடத்தில் நம்பிக்கையும் வேலையில் ஊக்கமும் ஏற்படுத்தும்பொருட்டு, டாடா ஆண்டுதோறும் பந்தயங்களும் கொண்டாட்டங்களும் வைத்து, திறமையுள்ளவர்கட்குப் பரிசுகளும் வழங்கினார். அதனால், ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு தொழிலாளிகள் திறமையாய் வேலை செய்யலாயினர். வேலையிலிருக்கும்பொழுது மரண மடையுந் தொழிலாளிகளுக்காகவும், கைகால் முடமானவர்களுக்காகவும் ஒரு நிதி ஏற்படுத்தப்பட்டது. இதைத் தவிர மற்றவர்களுக்குப் "பிராவிடென்ட் பண்டு" என்ற ஏம நிதியும் ஏற்பாடாயிற்று.

இங்ஙனம் புதிய புதிய எந்திரங்களினுதவியாலும் தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களினுதவியாலும் 'எம்ப்ரெஸ் மில்' கணக்கற்ற லாபத்தைத் தந்தது. இம்மாதிரி புதிய முயற்சிகளை டாடாவுக்குமுன் எவரும் எடுத்துக்கொண்டதில்லை.

தொழிலாளர்களல்லாத ஏனைய கம்பெனி வேலைக்காரர்களிடத்தும் டாடா அதிக அன்புடன் இருந்தார். எந்திரக் கூறுபாடறிந்தவர்களும், நிர்வாக வேலைக்காரர்களும் கீழ்ப்பதவிகளிலிருந்தே மேற்பதவிக்கு வந்தவர்களாவர். இளைஞர்களைக் கம்பெனியில் சேர்த்துக்கொண்டு அவர்களுக்குத் தொழில் கற்றுக் கொடுக்கவேண்டிய ஏற்பாடுகளையும் டாடா செய்தார். ஒருவர் வேலையினின்றும்

விலகினுல், அவ் வேலைக்கு ஆற்றல் மிக்க இன்னெருவர் காத்துக் கொண்டிருப்பார். கம்பெனியின் வேலைக்காரர்களுக்குத் தனித்தனி வீடுகள் கொடுக்கப்பட்டிருந்தன. வாசகசாலைகள், விளையாடும் இடங்கள் முதலியனவெல்லாம் அங்கங்கே அமைக்கப் பெற்றிருந்தன. தொழில் கற்க வரும் இளைஞர்கள் நன்றாய்ப் படித்தவர்களாயிருந்தால், நல்ல பதவியை யடையும்படியான வசதிகளும் அங்கே யுண்டு. இந்தக் கம்பெனியில் வேலை கற்றுக் கொண்ட எவரும் வேலையில்லாமல் திண்டாடமாட்டார். அவர்களை இந்தியாவிலுள்ள மற்ற ஆலைகளின் சொந்தக்காரர்கள் வேலையி லமர்த்திக் கொள்ளச் சமயம் நோக்கி யிருந்தனர்.

ஆலைகளில் வழுவழுப்பான மெல்லிய உயர்ந்த ஆடைகள் ஆயிரக்கணக்காக நெய்யப்பட்டன. அவைகளில் நாளுக்குநாள் பற்பல நல்ல சீர்திருத்தங்களும் செய்யப்பட்டு வந்தன. அப்பொழுது "எம்ப்ரெஸ் மில்" இந்தியாவி லிருந்த மற்றெல்லா ஆலைகளினு முயர்ந்ததாய் விளங்கியது. ஜாம்ஷெட்ஜி இத்துடன் திருப்தி யடையாமல் பருத்திவாணிகத்தின் அபிவிருத்திக்காக வேண்டிய ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருந்தார். அவரிடம் வியாபார மர்மம் எதுவும் இல்லை. தாம் அறிந்தவற்றையெல்லாம் யார்வந்து கேட்டபோதிலும் ஒளியாமற் கூறுவார். 'இவன் நமக்குப் போட்டியாய் வந்து விட்டா லென்ன செய்வது' என்று அவர் எப்பொழுதும் எண்ணியதே

யில்லை. எங்ஙனமேனும் இந்தியாவின் தொழில்நிலைமை விருத்தியடைந்தாற் போதுமென்று அவர் எண்ணினரே யன்றி, கேவலம் தன்னலத்தைக் கருதி, அறிந்த விஷயங்களை ஒளித்துவைத்துக் கொள்ளமாட்டார். ஒருசமயம், டாடாவின் உண்மையான குணத்தை யறிந்துகொள்ளாத ஒரு போட்டிக் கம்பெனிக்காரர் ஜாம்ஸெட்ஜியிடம் வந்து ஒரு எந்திரம் வாங்குவதைப்பற்றி யோசனை கேட்டார். ஜாம்ஸெட்ஜி யாதொரு தடையு மின்றி உண்மையில் நல்ல எந்திர மொன்றனைத் தேர்ந்து சொன்னர். டாடா தம்மை ஏமாற்றுவதற்காகச் சொல்லுகிரு ரென்று நினைத்த அவ் வர்த்தகர், டாடா சொன்ன எந்திரத்தை வாங்காததால் பெருத்த நஷ்ட மடைந் தனராம். டாடா, வியாபாரத்தில் பொய் சொல்ல வேண்டிய அவசியமே யில்லை யென்று எவர்க்கும் கூறிவந்தார். வியாபாரத்தில் வெற்றி பெறுவதற்கு உண்மையும் ஒழுக்கமும் சுறுசுறுப்பும் புத்தி வன்மையும், தமவும் பிறவும் ஒப்ப நாடுங் குணமும் வேண்டுவன வன்றி, தந்திரமெதுவும் தேவை யில்லை யென்பது ஜாம்ஸெட்ஜியின் உயர்ந்த கருத்தாகும்.

டாடாவின் உழைப்பின் பயனுய் "எம்ப்ரெஸ் மில்" மிக்க அபிவிருத்தி அடைந்து, எல்லா ஆலைகளிலும் தலைசிறந்து விளங்கிற்று. ஆண்டுதோறும் பங்குகளுக்கு நல்ல லாபம் கிடைத்தது; அதனுல் பங்குகளின் விலையும் உயர்ந்தது. முதல் பதினெட்டு ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டிலும் ஏறக்குறைய

நூற்றுக்கு இருபது வீதம் லாபம் கிடைக்கவே, டாடா பெரிய பணக்காரரானர். சிறுத்துக் கிடந்த நாகபுரியின் வியாபாரம் பெருத்து வளர்ந்துகொண்டே வந்தது.

"எம்ப்ரெஸ் மில்" நல்ல நிலைமைக்கு வந்தபின்னர், அதன் காரியாலயமொன்று பம்பாயில் ஸ்தாபிக்கப்பட்டது. டாடா நகர வாழ்க்கையில் மிக்க விருப்பமுள்ளவர். ஆகையால், அவர் நாகபுரியை விட்டுப் பம்பாய்க்கே போய்விட்டார். திரு. பெஸான்ஜீ தாதாபாய் தம்முடைய கூரிய மதி வன்மையினுல் நாகபுரி ஆலைகளை ஒழுங்காய் நடத்திவந்ததனுல், டாடா மனவமைதியுடன் பம்பாயில் வசிப்பது எளிதாயிற்று. மேலும், ஜாம்ஸெட்ஜியின் சொந்தக்காரரான ரடான்ஜீ தாதாபாய் டாடா வென்பவர், குன்ருத ஊக்கத்துடன் ஆலையின் காரியங்களைக் கவனித்துவந்தார்.

அக் காலத்தில் புதுச்சேரியில் உறுதியான சாயந் தோய்த்த, அழகும் வேலைப்பாடும் அமைந்த நல்ல துணிகள் நெய்யப்பெற்றன. அவைகள் ஆப்பிரிக்காவி லுள்ள கினியாப் பிரதேசங்களில் நன்ருக விற்பனை ஆயின. அத் துணிகளின் நிறம் வெண்ணீலம். அம்மாதிரியான நிறம் வேறு எங்கும் அமைவதில்லை. மேலும், புதுச்சேரியிலிருந்து அனுப்பப்படும் துணிகளுக்குப் பிரெஞ்சுத் துரைத்தனத்தார் வரி விதிப்பதில்லை. ஆகையால்

புதுச்சேரியிலேயே சில ஆலைக ளேற்படுத்தவேண்டு மென்று டாடா நினைத்தார். உடனே அவர் தம் மூத்த குமாரரான டோராப்ஜியைக் கூப்பிட்டு, "இதோ பார், இந்தப் பம்பாய்க் காரியாலயத்தில் உனக்குப் போதுமான வேலையில்லை. முதலாளியின் பிள்ளை யென்று தினம் வந்து, நாற்காலி தேய இருந்துவிட்டு, வீட்டுக்குப் போவது தக்க தன்று. புதுச்சேரிக்குப் போய் ஆலைகளை ஏற்படுத்தவேண் டிய வழியைப் பார்" என்றார்.

டோராப்ஜி இங்கிலாந்தில் நன்றாய்ப் படித்திருந் தார். இந்தியாவுக்கு வந்தபின்னர் 'பாம்பே கெஸட்' என்ற பத்திரிகையில் பணிசெய்துவந்தார். சில நாட்கள்கூட அவர் வேலையில்லாமல் சும்மா இருந்ததில்லை. ஜாம்ஸெட்ஜி 'யாரா யிருந்தாலும் வேலை யில்லாமற் குந்திக் குந்தித் தின்று அசனத்தொமிசம் செய்தல் கூடாது' என்னும் கொள்கையை முழுமனத்துடன் ஆதரிப்பவர். ஆத லால், தம் புதல்வனை அவர் இங்ஙனம் தொழிலி லீடுபடுத்தியது வியப்பன்று. இந்தியாவில் சில சாதி யினர் உழைப்பின்றி உண்ணுஞ் செயலைக் கண்டு, டாடாவுக்கு மிகுந்த கோப முண்டாவ துண்டு.

டோராப்ஜி புதுச்சேரி சென்று, வேண்டிய ஏற்பாடுகளுடன் ஆலையொன்றை நிறுவினார். அதற் குள் பம்பாயில் டாடாவின் வர்த்தகம் பெருகிவிட்ட படியால், ஜாம்ஸெட்ஜி தம் மகனைப் பம்பாய்க்கே

அழைத்துக்கொண்டார். பின்னர், டாடா, டோராப்ஜியை பெஸான்ஜி தாதாபாயின்கீழ் வேலை கற்றுக் கொள்ள அனுப்பினர்.

"எம்ப்ரெஸ் மில்"லிலிருந்து கிடைத்த லாபம் பெருகிக்கொண்டே வந்தது. பங்காளிகள் போட்ட பணத்துக்குமேல் பல ஆண்டுகளாக லாபம் கிடைக்கவே, அவர்கள் டாடாவிடம் அன்புட னிருந்தனர். "எம்ப்ரெஸ் மில்" முப்பது ஆண்டுகளில் ஏறக் குறைய முப்பத்திரண்டு லட்சம் ரூபாய்களை யீட்டி விட்டது! 500 ரூபாய்க்கு வாங்கின பங்குகள் 1912-ம் ஆண்டில் 7015 ரூபாய் மதிப்பை அடைந்தன வென்றால், இதனை எங்ஙனம் வியந்து கூறுவது! இந்த லாபத்திற்கெல்லாம் முதற்காரணர் டாடாவே என்பதைக் கூறவும் வேண்டுமா? அவர் அவ்வப் பொழுது செய்துவந்த அபிவிருத்திகளும், பின் பற்றிய புது வழிகளும் விரும்பிய பயனை அளித்தன. ஜாம்ஸெட்ஜி இறந்தபின்னும் பெஸான்ஜி தாதாபாயின் மேற்பார்வையில் நாகபுரி ஆலைகள் கோடிக்கணக்கான லாபத்தைத் தந்தனவாம்!

ஜாம்ஸெட்ஜிக்கு எந்தத் துறையாயிருந்தாலும் நூற்றுக்கு நூறு பங்கு லாபம் கிடைக்கும்படியான வழியில் வாணிகத்தை நடத்தலாம் என்ற நம்பிக்கையுண்டு. ஆனல், டாடா லாபத்தைமட்டும் கவனிக்கா-மல், தேசத்தின் நன்மையையும் கவனித்தது பாராட்டிற் குரியதேயாம். அவருக்கு முன்பிருந்த

முதலாளிகள் யாவரும் லாபத்தின்மேலேயே கண்ணு யிருந்தனர். தொழிலாளிகளின் நன்மையை அதிகமாய்க் கவனித்தால் லாபம் குறைந்துவிடு மென்று, அவர்களெல்லாம் ஒரு தப்பான எண்ணம் கொண்டிருந்தனர். தொழிலாளிகள் உடல்வலி யோடும், உளவலியோடும், கைவன்மையோடும், போதுமென்ற மனத்தோடும் இருந்தால்தான் முத லாளிகளுக்கு நன்மையுண் டென்பதை டாடா தம் செயலாலே காட்டினர். 1901-ம் ஆண்டு ஜூலை மாதம் 5-ந் தேதி நாகபுரியில் டாடா செய்த பிரசங் கத்தில் தம் வெற்றிக்குக் காரணங்கள் கூறுகையில், "உண்மை, ஒழுக்கம் இவற்றுடன் கூடிய ஒழுங் கான வியாபார முறைகளாலும், ஒவ்வொரு சிறிய விஷயத்தையும் கூர்ந்து நோக்குவதாலும், சமயம் வாய்த்தபோது அதை நழுவவிடாமல் அச் சம யத்தை நல்ல வழியில் பயன்படுத்திக்கொள்வ தாலும், வியாபாரத்தில் எவரும் வெற்றி பெறலாம்" என்றார். இவைகளே அவருடைய முடிவான வாணி கத் தத்துவங்களாம்.

## 5. இன்னும் சில ஆலைகள்

சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியாவில் சுதேசியம் வளர வாரம்பித்தது. இந்தியா முற்போக் கடையத் தொழிற்பெருக்கம் இன்றியமையாத தென்னுங் கருத்துப் பரவியது. மேல்நாட்டு நாகரிகத்தில்மோகங்கொண்டு ஆங்கிலக்கல்வி கற்ற சிலர் "இந்திய தேசீய காங்கிரஸ்" என்னும் பேரவையை ஏற்படுத்தினர். ஜர்மனி, ஜப்பான் முதலிய நாடுகளின் வளர்ச்சிக்கு வர்த்தகமே காரணமென்று அவர்கள் அறிந்தனர். ஆகவே அவர்கள், "இந்திய நாடு இந்தியர்களுடையது. சுதேசியமே தேசவளர்ச்சிக்குத் தேவை" என்ற கொள்கையைப் பரப்பி வந்தனர்.

ஜாம்ஸெட்ஜி டாடாவும் அக் கொள்கையை ஆதரித்தார். ஆனல், அவர் அமிதமாகப் பேசி ஆரவாரஞ் செய்யாமல், எதுவாயினும் செய்கையாற் காட்டுவார். ஆகையால், டாடா சுதேசி இயக்கத்திற்குத் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்ய எண்ணினர்.

அப்பொழுது இந்திய ஆலைகளில் தடிப்பான முரட்டுத் துணிகளே நெய்யப்பெற்றன. அவைகளெல்லாம் சீனதேசத்தினருக்கும் இந்தியர்களுள் ஏழைகளுக்கும் பயன்பட்டன. மெல்லிய நல்லாடைகளெல்லாம் வெளிநாடுகளிலிருந்தே நம்நாட்டுக்குக்

கடல்வழியே வரல்வேண்டும். இந்த இறக்குமதியை நிறுத்தினல் இந்தியாவிற்குப் பெருத்த லாப மேற்படு மல்லவா? அதற்காக டாடா மெல்லிய துணிகளை இமைப்பொழுதில் நெய்யக்கூடிய ஆலைகளை ஏற்படுத்த எண்ணினர். அந்த ஆலைகளில் இந்தியப் பருத்தியையே உபயோகிக்கவேண்டுமெனவும் அவர் நினைத்தார். இந்தியாவிற்கு வேண்டிய மெல்லிய துணிகள் பெரும்பாலும் லங்காஷயரிலிருந்தே வந்தன. ஆகையால், ஜாம்ஸெட்ஜி லங்காஷயருடன் போட்டியிடக் கச்சை கட்டினர். இந்நோக்கத்துடன் "சுதேசி மில்ஸ் கம்பெனி லிமிடெட்" என்ற கம்பெனியை ஸ்தாபித்தார். பத்துலட்ச ரூபாய் மூலதனத்துடன் 1876-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 13-ந் தேதி அது பதிவு செய்யப்பட்டது.

அடுத்த ஆண்டில் சில சீர்திருத்தங்கள் செய்ய வேண்டியிருந்தன. அதைமுன்னிட்டு மூலதனம் இருபது லட்ச மாக்கப்பெற்றது. அவற்றுள் வசூலிக்கப்பட்டது 15 லட்சமாகும். புதிய ஆலைக்காகச் சிஞ்ச் பூக்ளியில் (Chinch Poogly) நிலமும் வாங்கப்பட்டது. ஆனல், அங்கே ஆலை நிறுவப்படவில்லை.

புதிய ஆலைக்கு வேண்டிய கருவிகளை டாடா வாங்க ஆலோசித்துக்கொண்டிருக்கையில், தரம்ஸி மில் (Dharamsi Mill) என்னும் ஒரு பழைய தொழிற்சாலை விற்பனைக்கு வந்தது. அது 1860-ம் ஆண்டு முதல் குர்ளா வென்னும் இடத்திலிருந்துவந்தது.

அதன் சொந்தக்காரர்களுக்கு லாபத்தை ஒரு நாளும் அது கொடுக்கவில்லை. அதனல் மோசம் போனவர்கள் எத்தனையோ பேர். ஆகையால், தரம்ஸி மில் அதிர்ஷ்ட மில்லாத தென்று எல்லோரும் எண்ணியிருந்தனர். "அந்த ஆலையினல் பலர் அடைந்த நஷ்டத்திற்குக் காரணம் ஆலையன்று; பொறுப்பாளிகளின் முயற்சியின்மையே'' என்று டாடா சொல்லி, அந்த ஆலையை வாங்கத் தீர்மானித்தார். மேலும் 'எம்ப்ரெஸ் மில்'லில் அவர் அடைந்த லாபத்தின் பலனுக, அவருக்குத் தம்முடைய ஆற்றலில் நம்பிக்கை யிருந்தது. பாடுபட்டாற் பயனுண்டு என்பது அவருடைய கொள்கை.

தொழிற்சாலையில் பழைய எந்திரங்கள் பல இருந்தன. அவைகள் ஒழுங்கான நிலைமையி லிருந்தனவா வென்று அவர் பார்த்தார்; மிக மலிவாகக் கிடைப்பதால் வந்ததை விடக்கூடா தென்று இறுதியில் பன்னிரண்டு லட்ச ரூபாய்க்கு அதனை வாங்கினர். புதிதாய் வாங்குவதாயிருந்தால் அவர் அதைப்போல் ஆறு மடங்கு விலை கொடுத்திருக்க வேண்டும். இந்தத் தொழிற்சாலையை வாங்கியபின்னர், சிஞ்ச்பூக்ளியில் அவர் 'சுதேசி மில்ஸ் கம்பெனிக்'காக வாங்கிய நிலத்தை நஷ்டமின்றி விற்ருர். இச் செயல் டாடாவின் மனத்தை ஒருவாறு விளக்கிக் காட்டும்; அவர் மதப்பற் றுள்ளவரா யிருந்த போதிலும், மூடநம்பிக்கை கொண்டவ ரல்லர் என்பது இச் செய்தியிலிருந்து நன்ருய் வெளியாகிறது.

பழைய எந்திரங்களைப் புதிய சுதேசி ஆலைக்குப் பயன்படுத்துவதில் சில இடர்ப்பாடுகளை அவர் கண்டார். . எந்திர நிபுணர்கள் பலரின் சொல்லைக் கேளாமல் டாடா வாங்கிய ஆலைக்கருவிகள் தேய்ந்தும் மழுங்கியும் பழுதுற்றிருந்தன. இவற்றைச் செப்பஞ் செய்யத் தக்க பொறுப்பினர்களும், வேலையாட்களும் தேவையா யிருந்தனர். அதற்காக டாடா நாகபுரி ஆலையில் வேலை செய்துவந்த தேர்ச்சி பெற்ற நிபுணர்களையும், தமக்கு வலக்கைபோ லிருந்த பெஸான்ஜி தாதாபாயையும் வரவழைத்தார்; புரூக்ஸ்பி (Brooksby), ராஸ்கோ (Roscoe) ஆகிய இரு நிபுணர்களையும் சில ஆண்டு வரையில் சுதேசி ஆலைக்கு நியமித்தார். அங்கு எஞ்சின்களும் பாயிலர்களும் (Boiler) பயனற்றவையா யிருந்தன; எந்திரங்களெல்லாம் எவ்வித ஒழுங்குமின்றி நாலாபக்கமும் சிதறிக் கிடந்தன. ஆண்டுக் கணக்காக ஆலைக்கருவிகளையெல்லாம் எவரும் கவனிக்கவில்லை. எல்லாம் சீர்கேடான நிலைமையிலிருந்தன.. சிறிது காலத்தில், டாடாவின் உழைப்பினாலும், வேலையாட்களின் புத்திகூர்மையினாலும், முயற்சியினாலும் இவைகளெல்லாம் புதியனவையாயின; ஒளி பெற்றன. எஞ்சின்கள் ஒழுங்காக முழங்கத் தலைப்பட்டன. கருவிகளைப்போலவே, தொழிலாளிகளும் பயனற்றவர்களா யிருந்தனர். அவர்களிடம் ஒழுங்குமில்லை; அமைதியுமில்லை; தொழிற்பயிற்சியுமில்லை. தொழிற்சாலைக்குள் வருவதும், கூட்டங்கூடி

ஏதாவது செய்துவிட்டு, உள்ள கருவிகளை மெள்ளத் திருடிச் செல்வதும் அவர்களுக்கு வழக்கமா யிருந் தன. மேலும், பம்பாயில் ஆலைகள் பெருகப் பெருக, பணியாட்கள்கூடக் குறைந்துவிட்டனர். நாலாபக்கங்களிலும் சென்று ஆள் திரட்டுவதற்கு டாடா எவ்வளவோ பாடுபட்டார். ஒன்றும் பலிக்க வில்லை. ஆனல், வடமேற்கு எல்லைப்புற மாகாணத் தில் ஆட்கள் நிறைய விருந்தனர். அங்கே அவர் களுக்குத் தினம் சராசரி ஓரணுத்தான் ஊதியம் கிடைத்துவந்தது. ஆலையில் வேலை செய்தால் ஆறணுக் கிடைக்கும். ஆயினும், எல்லைப்புறத்தி லிருந்து தொழிலாளிகள் பம்பாய் வருவதற்குச் சித்த மாக வில்லை. இவ் விஷயத்தைக் குறித்து டாடா அலஹாபாத்தி லிருந்த லெப்டினென்டு கவர்னருக்கு ஒரு விண்ணப்பம் செய்துகொண்டார். “ஆலைகள் பெருகிவிட்டன. அதனுல், ஆட்கள் கிடைத்தல் அரு மையா யிருக்கின்றது. இனிமேல் கிராமங்களி லிருக் கும் மனிதர்களைத் தொழிற்சாலைகளுக் கனுப்ப வேண்டிய ஏற்பாடுகளை அரசாங்கத்தார் கவனிக்க வேண்டும்”. என அதில் டாடா கேட்டிருந்தார்; இதைப்போலவே ஆலைச் சொந்தக்காரர்களின் சங்கத்திற்கும் இன்னெரு கடித மெழுதினர். ஆனல், அவருடைய முயற்சிக்குத் தக்க பயன் அப்பொழுது கிடைக்கவில்லை.

வேலைக்கு வேண்டிய தொழிலாளிகள் கிட்ட வில்லை. எந்திரங்களோ பழையவை. அங்ஙன மிருந்த

போதிலும், திறமையான நிர்வாகத்தின் பலனுய்ச் "சுதேசி மில்" ஒழுங்காய் வேலை செய்துகொண்டிருந்தது. முதல் முதலாக அங்கு நெய்யப்பெற்ற துணிகள் வேண்டும் அளவுக்குச் சிறந்து காணவில்லை. முதலில் ஷாங்கைக்கு அனுப்பிய துணிகளை வாங்குவோர் இல்லை. நூலின் குறைவைப்பற்றிப் பலரிடமிருந்தும் கடிதங்கள் வந்தன. முதல் வருஷ முடிவில் கம்பெனிக்கு 75,000 ரூபாய் நஷ்ட மேற்பட்டது. பங்குகளின் விலை கால்விலைக்கு வந்துவிட்டது. இதனுல், டாடாவின் பெருமையும் குன்றத் தொடங்கியது.

சிக்கலான இந்த நிலைமை ஏற்பட்டபோது, ஜாம்ஸெட்ஜி இங்கிலாந்தி லிருந்தார்; "சுதேசி" ஆலையின் நிலைமையை அறிந்தவுடன், உடனே பம்பாய்க்குத் திரும்பினுர். 'டாடா அண்டு சன்ஸ் கம்பெனி'யின் பெயருக்குத் தீங்கு வரும்போ லிருந்தது. பெயரைக் காத்து மறுபடியும் நம்பிக்கை யுண்டாக்குவதற்காக, டாடா உடனே தம் கைப்பொருளிலிருந்து நஷ்ட ஈடு கொடுத்தார்; தோல்வியில்லாமலிருக்கும்பொருட்டுத் தம் முழுக்கவனத்தையும் செலுத்தி ஆலையில் சீர்திருத்தங்கள் செய்தார். வேலையாட்களிடத்திலும் பொறுப்பாளிகளிடத்திலும் பல மாறுதல்களைச் செய்தார். ஸர். தின்ஷா வாச்சா*வும் இக் காலத்தில்தான் காரியஸ்தராக

---

* இவர் பிற்காலத்தில் டாடாவின் சரித்திரத்தை அழகாக எழுதியவர்.



ஸ்வதேசி மில்ஸ்

நியமிக்கப்பட்டார். சில மாதங்கள் கழிந்தபின், பார்த்தவர் திகைக்கும் வண்ணம் சீர்திருத்தங்கள் ஆலையில் ஏற்பட்டன. இரண்டு ஆண்டுகளில் ஆலை புத்தம்புதிய தாயிற்று. பின்னர், நெய்யப்பெற்ற துணிகள்நேர்த்தியா யிருந்தன. நெசவும்பெருகியது. இவ்வளவு கஷ்ட நிலையிலும் கலங்காம லிருந்த பங்காளிகளுக்கு நல்ல லாபமும் கிடைத்தது.

டாடா தொழிலாளிகளின் நன்மையிலேயே நாட்டங் கொண்டவ ரென்று அறிந்ததும், தொழி லாளிகள் மிகவும் நன்றியுள்ளவர்களாய் வேலை செய்து வந்தனர். முதலாளியும் தொழிலாளியும் ஒத்துழைப்பதே மேலென்று டாடா வற்புறுத்திவந் தார். அவர் நாளடைவில் தொழிலாளிகளுக்கென்று நல்ல தண்ணீர் வசதிக ளேற்படுத்தினர்; வைத்திய சாலையும், கலாசாலையு மமைத்தார்.

சுதேசி ஆலைகளில் நெய்த நூல்களை ஜாவா, புஷ்யர், ஸ்மிர்ணு முதலிய இடங்களில் விற்க ஏற்பாடு களைச் செய்தனர். சிறிது சிறிதாகச் "சுதேசி" ஆலையின் புகழ் எங்கும் பரவிற்று.

நாகபுரி ஆலையில் தாமடைந்த அநுபவத் துடன் நிற்காமல், டாடா எப்பொழுதும் ஆராய்ச்சியி லீடுபட்டிருந்தார்; மெல்லிய நேர்த்தியான நூல் நெய்வதற்குப் போதிய வழிகளைத் தேடிக்கொண் டிருந்தார். எகிப்திலிருந்து தருவித்த பருத்தியைக் கொண்டு 50, 60-ம் நம்பர்களில் (Count)

நூல் நூற்கப் பெற்றது. சில சமயத்தில் 80-ம் நம்பர் நூலும் நூற்கப்பட்டது. எந்த நோக்கத்துடன் இந்த ஆலை ஆரம்பிக்கப்பட்டதோ, அந்த நோக்கம் இனிது நிறைவேறிற்று. இந்தியர்கள் பலரும் "சுதேசி"த் துணியை வாங்கலாயினர்.

எகிப்தில் விளையும் பருத்தி இந்தியப் பருத்தியை விட மேலானது. இந்தியாவில் பயிரிடும் வழியை அபிவிருத்தி செய்தால், எகிப்தின் பருத்தியைப்போலவே இந் நாட்டிலும் பெறலாமென்று டாடா எண்ணினர்; பருத்தியைப் பற்றிய தமது ஆராய்ச்சியையெல்லாம் அவர் ஒரு புத்தக ரூபமாக வெளியிட்டார்; இந்தியாவில் நுண்ணிய இழை தரும் பருத்தியை (Long Staple Cotton) விளைவிக்க முடியுமென்று அப் புத்தகத்தில் விளக்கிக் காட்டி, பல நல்ல வழிகளையும் கூறியிருக்கின்றார். இங்ஙனம் பருத்தியின் விளைவுக்கு டாடா பெரியதோருதவி செய்தார்.

டாடாவுக்கு எப்பொழுதும் இந்தியாவின் வர்த்தகத்தில் அதிகக் கவனமுண்டு. இந்தியாவில் இறக்குமதியான பருத்திப்பொதிகளுக்கு 1894-ம் வருஷம் இந்தியச் சர்க்கார் வரி விதித்தனர். ஜாம்ஸெட்ஜி இவ் வரியை ஆதரித்தார். இந்த வரியினல் லங்காஷயரின் வர்த்தகத்திற்குச் சிறிது தடை யேற்பட்டது. ஆகையால், பிரிட்டிஷ் சர்க்கார் இந்திய உற்பத்திகளுக்கும் உள் நாட்டுவரி (Excise duty) விதிக்க வேண்டுமென்று இந்திய அரசாங்கத்தாரைக் கட்

டாயப் படுத்தினர். இதை யறிந்த இந்தியர்கள் மிக்க அதிருப்தி அடைந்தனர். இது பிரிட்டிஷாரின் பெயருக்கே அவமானத்தை விளைவிக்கக்கூடிய நிகழ்ச்சி யென்று ஆங்கில அறிஞ ரொருவர் எழுதி யிருக்கிறார். டாடாவுக்கு இதனால் மிக்க வருத்த மேற்பட்டது. ஜாம்ஸெட்ஜி ராஜபக்தியும் சாம்ராஜ்ய பக்தியு முள்ளவ ராயினும், சாம்ராஜ்யத்தில் எல்லா நாட்டினரும் சமமானவ ரென்று அவர் நினைத்திருந்தார். ஆகையால், லங்காஷயரின் நலத்தைக் கருதி இந்தியாவின் நன்மையை விட்டுக்கொடுக்க டாடா விரும்பவில்லை.

"இந்திய ஆலைக்காரர்கள் பெருவாரியான லாபத்தை யடைகிறார்கள். ஆகையால் இந்திய உற்பத்திக்கு உள்நாட்டுவரி விதிக்கவேண்டியது அவசியம். அது அநியாய மில்லை" என்று பிரிட்டிஷ் அரசாங்கத்தார் காரணம் கூறினர். 'இந்திய ஆலைத் தொழிலில் அதிக லாபம் இல்லையாதலின், வரி விதிப்பது அநியாயம்' என டாடா விடையளித்தார். இதை விளக்கிக்காட்ட ஒரு விசாரணை நடத்தத் தீர்மானித்தார். 1897-ம் ஆண்டில் விசாரணை தொடங்கிற்று. மிகவும் திறமை வாய்ந்த தம் சிஷ்யரான புர்ஜோர்ஜி பாத்ஷா என்பவரை விசாரணை நடத்த டாடா அனுப்பினார். அவ் விசாரணையின் முடிவுகள் ஒரு புத்தகமாகப் பின்னர் வெளியிடப்பட்டன. புள்ளி விவரங்கள் பொறுமையோடும், தவறுகள் இல்லாமலும் தொகுக்கப்பட் டிருந்தன. அப்

புத்தகத்தில் இந்திய ஆலை முதலாளிகளுக்கு அதிக லாபம் கிடைப்பதில்லையென்பதற்குச் சார்பாகத் தக்க காரணங்கள் காட்டப்பெற்றிருந்தன. மேலும், பருத்திப்பொதிகளுக்கு உள்நாட்டுவரி விதித்தது அநியாய மென்றும் அதிலிருந்து தெரியவந்தது. "எம்ப்ரெஸ் மில்"லைத் தவிர மற்ற முக்கியமான ஆலைகளுக்கெல்லாம் சராசரி நூற்றுக்கு 5 பங்கு லாபமே கிடைத்த தென்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்திய ஆலைகள் எவற்றுக்கும் கிடைக்காத லாபம் "எம்ப்ரெஸ் மில்"லுக்குக் கிடைத்தது. அதற்குக் காரணம் டாடாவின் நிர்வாகத் திறமையே. உள்நாட்டுவரியினுல் டாடாவுக்கு அதிக நஷ்டம் கிடையாது. "சுதேசி" ஆலையின்மேல் அதிகக் கவனம் செலுத்தி ஜாம்ஸெட்ஜி மற்றும் சில மாறுதல்கள் செய்தார்; கடைசியில் குர்ளா தொழிற்சாலையைத் தம் குமாரரான டோராப்ஜியிடம் ஒப்புவித்தார். டோராப்ஜி திறமையுடன் பணி செய்துவந்ததால், "சுதேசி" ஆலையின் வியாபாரம் ஓங்கிக்கொண்டே வந்தது.

ஆனல் "சுதேசி" ஆலையின் நிலைமை முன்னேறும் சமயத்தில், பம்பாயில் "ப்ளேக்" என்னும் பெருவாரி நோய் தோன்றியது. அதன் காரணமாகப் பம்பாயிலுள்ள பல ஆலைகள் வேலையை நிறுத்தின. ஆனல், டாடாவின் "சுதேசி" ஆலை மூடப்படவில்லை.

இந் நிகழ்ச்சி டோராப்ஜி டாடாவின் மனப் பான்மையை யறிவிக்கும் ஒரு நல்ல வாய்ப்பாயிற்று.

1896-ம் ஆண்டு கிறிஸ்துமஸ் காலத்தில் தமது பிறந்த வூரான நவ்ஸாரியில் டாடா குடும்பத்தின ரனைவரும் கூடி விருந்தொன்றை நடத்தினர். அங்கு வந்திருந்தா ரனைவரும் வேடிக்கையாகப் பொழுது போக்கினர்கள். விருந்தில் வேடிக்கைக ளதிகமா யிருந்தன. அதே சமயத்தில் பம்பாயில் 'ப்ளேக்' எமன் உயிரைக் குடித்துக்கொண் டிருந்தது. விருந்து முடிந்ததும் டோராப்ஜி பம்பாய்க்குப் புறப்பட்டார். அச் சயயம் டாடாவின் நண்பர்கள் "பம்பாயில் ப்ளேக் நோய் பரவியிருக்கின்றது. தாங்கள் இப்பொழுது பம்பாய்க்குப் போவது நன் றன்று" என அவரைத் தடுத்தனர். டாடா அவர் களுடைய பேச்சுக்களைக் கேட்கவில்லை. ஜாம்ஸெட் ஜியின் அருமைப் புதல்வரன்றோ! "நானை இங்கு இருந்துவிட்டால், காரியாலயம் என்ன வாகும்? ஆலைதா னென்னவாகும்?" என்று அவர் பதிலளித் தார். முதலாளியே வேலைக்கு வரும்போது தாங்கள் வராம லிருக்கக்கூடா தென்று, குமாஸ்தாக்களும் வேலைக்காரர்களும் தத்தம் வேலையைக் கருத்துடன் செய்துவந்தனர். இவையெல்லாம் ஜாம்ஸெட்ஜி தம் பிள்ளைக்குக் கொடுத்த பயிற்சியின் பயனாகும்.

நிற்க, ஜாம்ஸெட்ஜி அகமதாபாத்தி லுள்ள "அட்வான்ஸ் மில்"லின்பேரில் மூன்று லட்சம்

ரூபாய் கடன் கொடுத்திருந்தார். அந்த ஆலையின் பெயருக்கும், அதன் உண்மை நிலைக்கும் யாதொரு பொருத்தமு மில்லை. பெயர்தான் "அட்வான்ஸ் மில்". முன்னேற்ற முள்ள ஆலை என்பது அதன் பொருள். ஆனால், அங்கே எந்த முன்னேற்றமு மில்லை. பழைய எந்திரங்களும் பிற்போக்கான முறைகளுமே அங்குக் காணப்பட்டன. 1898-ம் ஆண்டு திறமையற்ற நிர்வாகத்தினாலும், டைரக்டர் களின் மனவேற்றுமை காரணமாகவும் ஆலை எளிய நிலைமையி லிருந்தது. தமது பணம் போய்விடப் போகிறதே யென்று பயந்த ஜாம்ஸெட்ஜி, அந்த ஆலையை விற்பனைக்குக் கொணர்ந்து, அதைத் தாமே 2,03,515 ரூபாய்க்கு வாங்கிக்கொண்டார்; 'தரம்ஸி' ஆலையைச் சீர்ப்படுத்தியதுபோல் மிக்க உழைப் புடன் இந்த ஆலையையும் ஒழுங்கான நிலைமைக்குக் கொண்டுவந்தார்; சில ஆண்டுகட்குப்பின் 'அகமதா பாத் அட்வான்ஸ் மில்ஸ் லிமிடெட்' என்ற கம்பெனிக்கு அதை விற்றார். அதன் விற்றவிலை 7,12,000 ரூபாய். இங்ஙனம் சில ஆண்டுகளாக முயன்றதன் பயனாய் 5 லட்சம் ரூபாய்க்குமேல் லாபம் கிடைத்தது.

'அட்வான்ஸ் மில்ஸ்' கம்பெனி 1903-ம் வருஷம் நிறுவப்பெற்றது. அதற்கு மூலதனம் 10,00,000 ரூபாய். அது 2000 பங்குகளாகப் பிரிக்கப்பெற்றது. ஆரம்பத்தில் ஆலையில் 240 தறிகளும், 9640 ஸ்பிண்டில்களு (நூற்கதிர்களும்) மிருந்தன. பத்து

ஆண்டுகளில் அவை 294 தறிகளாகவும் 20,000 ஸ்பிண்டில்களாகவும் பெருகின. பின்னர்ச் சில ஆண்டுகளில் ஆலையில் 600 தறிகளும், 30,162 ஸ்பிண்டில்களும் உண்டாயின! இந்தப் புள்ளிகளிலிருந்து 'அட்வான்ஸ்' ஆலையின் வளர்ச்சியை நாம் அறியலாம். பத்து ஆண்டுகளில் பத்துலட்சம் ரூபாய் லாபமும் கிடைத்தது !!

'அட்வான்ஸ்,' 'சுதேசி' ஆகிய இரண்டு ஆலைகளிலும், தொழிலாளிகளின் நன்மைக்காகப் பல ஏற்பாடுகள் செய்யப்பெற்றன. 'சேவிங்ஸ் பாங்க்' ஒன்று நிறுவினர். நோய்கொண்ட தொழிலாளரின் நன்மைக்காக ஒரு நிதி ஏற்படுத்தப் பட்டது. வாசகசாலை, புத்தகாலயம், ஐக்கிய நாணயச் சங்கம், விளையாடுமிடம் முதலியன ஒன்றன்பின் ஒன்ருக அமைக்கப்பெற்றன.

இவ்வாருக, டாடா, நாகபுரி, குர்ளா, அகமதாபாது முதலிய உயிரற்ற விடங்களுக்குத் தம் முயற்சியால் உயிரளித்துப் புகழ்கொண்டார்; வேலை செய்ய மனமில்லாமல் சோம்பித் திரிந்தவர்களுக்கு வேலை கொடுத்து, அவ்வேலையில் ஊக்கம் பிறக்குமாறு செய்தார்; தமக்கும் கோடிக்கணக்கான லாபத்தைச் சம்பாதித்துக் கொண்டார்.

## 6. தாஜ் மஹால் ஹோடல்

உலகிற் பலர் பொருளீட்டும் முறையினை அறிவர். எனினும், ஈட்டிய பொருளைத் தக்கதொரு வழியில் தமக்கும் பிறர்க்கும் பயன்படுமாறு செலவிடும் வித்தக மறிந்தோர் சிலரே ஆவர். இலட்சமிலட்ச மாய்ச் சம்பாதித்துச் சுயநலமே பெருநலமெனக் கருதி, நிலையற்ற சிற்றின்பங்களைத் துய்த்துக் காலங் கழித்து மண்ணுடன் மாய்ந்த வீணர் பலர். பத்துக் காசு பெறினும் பாங்குடன் வாழ்ந்து, பிறர்க்குரி யாளராய் நிலவுலகில் நிலைத்த புகழை நிறுவியவர் மிகச் சில்ரே. திரண்ட செல்வமும், அகன்ற கல்வி யறிவும், சீரிய ஒழுக்கமும் ஒருங்கே மக்கட் கமைவது மிகவரிது. திரு வேறு; தெள்ளிய ராதலும் வேறன்றோ !

ஜாம்ஸெட்ஜி டாடா தம் நுண்ணறிவால் கோடி கோடியாய்ப் பொருளீட்டினர். ஆனல், அப்பொருளை வீண் செலவு செய்யவில்லை. தாம் அடைந்த செல்வம் தமக்கே உரியது என்று டாடா கனவிலும் கருதிலர்; நம் நாட்டு மக்களிடமிருந்து கிடைத்த செல்வத்தை அவர்கள்பொருட்டுச் செலவிட்டுப் பொதுநலத் தொண்டு ஆற்றுவதே தம் முதற் கடமை என்பதனை உணர்ந்தார். ஆதலின், தம் ஆலைகள்மூலம் வரம் பின்றி ஈட்டிய ஊதிய மனைத்தையும் பொது மக்கட்-குப் பயன்படுமாறு செலவிட்டார். ஆனல், அவர் தனி மனிதன் எவனுக்கும் தானம் கொடுப்பதில்லை.



தாஜ்மஹால் ஹோடல்

சோம்பித் திரியும் பிச்சைக்காரருக்கு இம்மியும் மன மிரங்கார்; சிறிதும் ஈயார்.

டாடா தாம் வாழ்ந்த பம்பாய் நகரை அழகு-படுத்துவதை ஒரு பெருநோக்கமாகக் கொண்டார். அவர் சிறுவரா யிருந்த காலத்தில் பம்பாய் மிக இழி வான நிலைமையி லிருந்தது. குறுகிய சந்துகள் விகார மான தோற்ற மளித்தன. தெருவெல்லாம் தீநாற்றம் வீசும். வீடுகளிலெல்லாம் ஜனநெருக்கம் அதிகம். நல்ல காற்று வீசும் குடியிருப்புக்களை மருந்துக்கும் காண வியலாது. மனிதர்கள் தாம் வசித்த இடத்தி லேயே மாடுகளையும் கட்டிவைப்பர். தோட்டிகள் தங்-கள் வேலையைச் சரியாய்ச் செய்யாததால், தெருக் களில் இரண்டு மூன்றடி உயரத்திற்குப் பல குப்பை மேடுகள் உண்டாயிருந்தன. சுமார் அரைலட்சம் ஜனங்கள் வசிக்கத் தகாத இடங்களில் குடியிருந்து-வந்தனர். அந்தோ, அவர் அளியர்!

ஆனால், இந் நிலைமை நீடித்து நிற்கவில்லை. அமெரிக்க உள்நாட்டு யுத்தத்தின்போழ்து, மிகுந்த லாபமடைந்த ப்ரேம்சந்த் ராய்ச்சந்த் போன்ற செல்வர், அந் நகரைச் சீர்திருத்த முன்வந்தனர். ஹிந்துக்கள், முகம்மதியர், பார்ஸிகள் முதலிய பல மதத்தினரும் அம் முயற்சியி லீடுபட்டனர். இவர்க ளுள் ஜாம்ஸெட்ஜி தலைசிறந்தவ ரென்பதில் எட் டுணையும் ஐயமில்லை.

கடல் அலைகள் பெருகிப்பாய்ந்து தேங்கிய நீர்ப் பரப்புக்கள் பல பம்பாயில் இருந்தன. அவை நோய்க் கிருமிகளுக்குப் பிறப்பிடம். ஆதலின், அவற்றைத் தூர்த்து மேடாக்கும் வேலையில் டாடா ஈடுபட்டார். அவர், தம் செல்வம் பெருகப் பெருகப் பம்பாயில் நிலங்கள் பல வாங்கினார். அங்கு அழகிய சுத்தமான பல கட்டிடங்களை அமைத்து வாடகைக்கு விட்டார். 1890-ம் ஆண்டிலிருந்து வாங்கிய நிலங்களின் அளவு பெருகிக்கொண்டே வந்தது. கடைசியில் பம்பாய் நகரிலேயே அவரினும் மிக்க நிலங்களும் வீடுகளும் படைத்தவர் எவருமிலராயினர். வீடு கட்டுவதிலேயே டாடா தம் காலத்தைப் பெரும்பாலும் செலவிட்டார். ஐரோப்பியர்களுக்கென்று வசதியான கட்டிடங்கள் பல அவரால் கட்டப்பட்டன.

டாடா வெளிநாடுகளிற் பல முறை பிரயாணம் செய்திருக்கிறார். அவர் சென்ற விடங்களிலெல்லாம் பிரயாணிகளுக்கு வசதியான பல விடுதிகள் அமைக்கப் பட்டிருந்தன. அவற்றை (ஹோட்டல்களை) அனுபவித்த டாடா தம் நாட்டுக்கு வரும் பிரயாணிகளுக்குத் தங்கத் தகுந்த விடுதிகள் மிக்க அவசியமென்று கண்டார். தமது நகராகிய பம்பாயிலும் அத் தகையதொன்றினை அமைக்கவேண்டுமென்று ஆசை கொண்டார். புது முறையில் விடுதி ஒன்றை அமைப்பதற்கு எவ்வளவு செலவாகும் என்றும், அதன்மூலம் எவ்வளவு வருமானம் கிடைக்குமென்றும் அவருக்

குத் தெரியாது. அத்தகைய தொழிலில் ஜாம்ஸெட்ஜிக்கு அனுபவம் சிறிதும் இல்லை.

அவர் 1898-ம் ஆண்டில் 'அப்போலோ பந்தரில்' விடுதி ஒன்றைக் கட்டுவதற்காகத் தொண்ணூற்றென்பது வருஷக் குத்தகையில் நிலம் ஒன்று வாங்கினர். அவர் வாங்கிய நிலம் பத்தாயிரம் சதுர கஜப் பரப்புள்ளது. 'தாஜ் மஹால்' என்று வழங்கும் அவ் விடுதியைக் கட்டுகையில், அதை ஒரு ஆங்கிலக் கம்பெனிக்கு விற்றுவிடலா மென்பது அவர் எண்ணம். ஆனல், சரியான விலைக்கு எடுத்துக்கொள்ள எவரும் முன்வரவில்லை,

அதனல், அதைத் தாமே நிறுவிய ஒரு கம்பெனிக்கு மாற்றினர். அதன் பெயர் "டாடா அண்டு ஸன்ஸ்" என்பது. டாடாவே அதற்கு மூலதனமாக இருபத்தைந்திலட்சம் ரூபாய் கொடுத்தார். சில ஆண்டுகளில் கம்பெனியின் மூலதனம் முப்பதிலட்சமாக்கப்பட்டது.

1902-ம் ஆண்டில் அவ் விடுதிக்கு வேண்டிய புது மாதிரியான நுகர்ச்சிப் பொருள்களை வாங்கும்பொருட்டு ஜாம்ஸெட்ஜி லண்டன், பாரிஸ், பெர்லின் முதலிய நகரங்களுக்குச் சென்ருர். கட்டிட விஷயங்களை யெல்லாம் டாடாவின் புதல்வர்களான டொராப்ஜியும், ரடான்ஜியும் கவனித்துவந்தனர். வெளிநாடு சென்ற ஜாம்ஸெட்ஜியின் மனம் முழுவ

லும் ‘தாஜ் மஹால் ஹோடலி’ன்மேலே யிருந்த படியால், புதல்வர்கள் தங்கள் விருப்பம்போல் அதைக் கட்டமுடியவில்லை. ஜாம்ஸெட்ஜிக்குத் தம் மூத்த குமாரனின் ரஸிகத் தன்மையில் அவ்வளவு நம்பிக்கை யில்லை. தம் கருத்துப்படியே அதனை அமைக்கவேண்டு மென்பது அவருக்கு விருப்பம். எனினும், புதல்வனுடைய மனத்தையும் புண்ணுக்க அவர் விரும்பவில்லை. அவரிடம் நம்பிக்கை உண்டென்று காட்டுவதும் உண்மை யாகாது. ஆகையால், கட்டிடத்தைத் தம் மனப்போக்கின்படியே கட்டவேண்டு மென்று உத்தர வளித்துப் பின்னர், டோராப்ஜிக்கு அரியதொரு கடிதம் வரைந்தார்.

டாடாவுக்குப் புத்திர வாஞ்சை அதிகம். மேலும் டோராப்ஜிக்கு வர்த்தகத் திறமை அதிகம் இருந்ததனல், அவன்மேல் உள்ள அன்பு இன்னும் அதிகரித்தது. ‘தம் மகன் தானே’ என்று அதிகார தோரணையில் பேசமாட்டார். எழுதுங் கடிதங்களில் அன்பும் மரியாதையும் நிரம்பியிருக்கும். அத் தகைய கடிதங்களுள், தாஜ் மஹாலைப்பற்றி அவர் அயல்நாட்டிலிருந்து எழுதிய கடிதம் குறிப்பிடத்தக்கதாகும்.

இறுதியில் ஜாம்ஸெட்ஜியின் இஷ்டப்படியே கட்டிடங்கள் முடிந்தன. கட்டிடத்திற்கு வேண்டிய தரைப்படங்களெல்லாம் ஓர் இந்தியராலேயே

வரையப்பட்டன. இந்தியப் புராதன சிற்பக் கலையின் முறையில் 'தாஜ் மஹால் ஹோட்டல்' அமைக்கப்பட்டது. செல்வத்தில் மிக்கோரும் குறைந்தோரும் வசிக்குமாறு அறைகள் பல வகுக்கப்பட்டன. 1903-ம் ஆண்டில் அவ் விடுதி திறக்கப்பட்டது. அதன்பின் பல ஆண்டுகள்வரை அதிலிருந்து வருவாய் சிறிதும் பெறவில்லை. இது அவர் அறியாததொன்றன்று. இதனை அவர் மேற்கொண்டு முடித்ததற்குக் காரணம், அவருக்குப் பம்பாயின்கண் இருந்த பற்றும் தம் தாய்நாடு பெருமையுடன் விளங்கவேண்டுமென்ற ஆவலுமே ஆகும்.

'தாஜ் மஹால்' என்னும் பெயருக்கே ஒரு தனிச் சிறப்புண்டு. அதில் வசீகர சக்தியும் இருக்கிறது. அதுவே பொன்னின் ஒளி,! பூவின் வெறி,! தீஞ்சொற் கவியின்பம்,! கந்தர்வ உலகம்,! அழிவற்ற உயிரின் அழகிய உருவம்.!

தம் கருத்துக் கேற்றவண்ணம் அமைத்த அம் மாளிகைக்கு அப் பெயரிட்ட அப்பெரியாரின் அறிவின் திறத்தை என்னென்றுரைப்பது! 'இந்தியாவின் தலைவாயில்' என்னும் பம்பாய் நகரில், அவர் அமைத்த அவ் விடுதியின் பெருமையை விளக்கிக் கவி பாட ஒரு கம்பன் வேண்டும். தாஜ் மஹால் மாளிகை கடலோரத்தி லுள்ளது. சிறிய அழகிய ஸ்தூபங்களுக்கு இடையே பெருமையுடன் ஓங்கி நிற்கும் ஒரு பெரிய ஸ்தூபம் கண்ணொளியை மழுங்

கச் செய்யும். வெண்ணிறச் சுவர்கள் வானளாவி நிற்கின்றன. ஒருபுறம் உள்ள எல்லையற்ற நீலக் கடலில், விண்ணில் இயங்கும் முகில்போலக் கப்பல்கள் மிதக்கும். அங்குச் செம்படவரின் சிறிய படகுகளையும் காணலாம். ஓயாது மோதும் அலையின் இன்னிசை செவிக்கின்பம் தரும். இவ்வளவு இன்பகரமான தோற்றமளிக்கும் ஓர் அமைப்பு நாட்டிற்கே ஒப்பற்றதோர் உடைமையன்றோ!

வெளித்தோற்றத்தைவிட்டு உள்ளமைப்பைச் சற்றுக் கவனிப்போம். இரண்டேகால் ஏக்கர் நிலத்தில் கட்டப்பெற்ற கட்டிடத்தில் விசாலமானதொரு முற்றமுண்டு. அதில் கடற்காற்று உட்புகுந்து வீசியடிக்கப் போதுமான இடம் இருக்கின்றது. உள்ளேயே தபாலாபீஸ், மருத்துச்சாலை, மருந்துக்கடை முதலியனவெல்லாம் அமைக்கப்பட்டிருக்கின்றன. அங்கிருக்கும் பொருள்கள் அனைத்தும் புதுமாதிரியானவை. ஜாம்ஸெட்ஜி மேல்நாடு சென்றபோது, டஸ்ஸல்டார்ப் (Dussaldorf) என்னும் நகரில் கண்ட கண்காட்சிச் சாலையிலிருந்த புதிய பொருள்களெல்லாம் தாஜ் மஹால் ஹோடலை வந்தடைந்தன.

டாடா தாஜ் மஹாலைக் கட்டிக்கொண்டிருக்கும்போது, யூரானுக்கருகில் (Uran) பஞ்சூன் (Panjon) டாங்க்ரி (Dongri) என்ற சிறு தீவுகளை வாங்கினர்; தாஜ் மஹால் ஹோடலில் தங்குபவர்களுக்கு அவை பயன்படுமென்றே அவ்வாறு செய்தார்;

அங்கும் பல விடுதிகளைக் கட்ட எண்ணியிருந்தார். தாஜ் மஹாலில் வசிப்பவர், தம் நண்பர்களுடன் விருந்துண்டு வேடிக்கையா யிருப்பதற்கு அவை பயன்படலா மென்பது அவருடைய நோக்கம். அப் படி அங்குப் போக விரும்புபவர்கள், டாடா கம்பெ னிக்குச் சொந்தமான படகுகளில் கடலைக்கடந்து செல்ல ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

ஜாம்ஸெட்ஜியின் பேரும் புகழும் அழியாதிருப் பதற்கு தாஜ் மஹால் ஹோடல் ஒன்றே சாலும். இந்தியர்களும் ஐரோப்பியர்களும் ஒரே யிடத்தில் சந்தித்து வாழக்கூடியதும், செல்வத்தில் உயர்ந் தோரும் தாழ்ந்தோரும் வசிக்கக்கூடியதுமான ஓரிடம் மிக இன்றியமையாதது. லட்சக்கணக்கில் முன்பின் யோசியாமல் செலவுசெய்து இத்தகைய இடம் ஒன்றை அமைத்த தனிப்பெருமை டாடா வுக்கே உரியது எனின், அது மிகை யாகாது. இச் செயற்கருஞ் செயலைச் செய்து வெற்றிபெற்ற இவ் வள்ளலை, இந்திய மக்கள் அனைவரும் என்றும் மற வாது, நன்றி பாராட்டுங் கடப்பாடுடையராவர்.

## 7. போட்டியும் தோல்வியும்

ஜாம்ஸெட்ஜி இதுவரையில் தாமெடுத்த காரியம் யாவினும் வெற்றிபெற்ருர். இலாப மற்ற எத் துறையிலும், அவர் பெரும்பாலும் இறங்குவதில்லே. எனினும், இந்தியாவின் முன்னேற்றத்துக்கு இன்றி யமையாத காரியங்களில் அவர் இலாப நஷ்டக் கணக் குப் பார்ப்பதில்லே. அதற்குத் தக்க சான்று தாஜ் மஹால் ஒன்று. மற்ருென்று 1893-ம் ஆண்டில் நிகழ்ந்தது.

'சுதேசி' ஆலேயை நிறுவியபோது டாடாவுக்கு லங்காஷயருடன் போட்டியிடும் வாய்ப்பு நேர்ந்தது. இவ் வாலேயில் உயர்ந்த 'நம்பர்' நூல் நூற்கப்பட் டது. லங்காஷயரும் உயர்ந்த 'நம்பர்' நூல் நூற்றது. கீழைத் தேசங்களில் முன்னர் லங்காஷயர் நூலே விற்பனே யாயிற்று. ஆனல், டாடா இவ் வாலேயை நிறுவியபின்னர் இவ் வாலேயின் நூலும் அவ்விடங் களில் நன்கு விற்பனேயாயிற்று. இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பண்டங்களுக்கு விதித்த கப்பற்கூலி தாங்க முடியாத ஒரு சுமையாயிருந்தது. அதனேக் குறைக்காவிடின் லங்காஷயருடன் போட்டியிடுவது அரிது என்றும், தம் பண்டங்களேச் சுமந்து செல்லப் பிறநாட்டுக் கப்பல்களேயே எதிர் பார்ப்பது பேதைமை என்றும் டாடா உணர்ந்தார்;

ஆகையால், இந்தியக் கப்பற் கம்பெனியொன்று ஏற்படுத்துவதைப்பற்றி ஆலோசித்தவண்ணம் இருந்தார்.

இந்தியா தொன்றுதொட்டுப் பிறநாட்டுடன் கடல்வாணிபம் செய்துவரும் நாடு. முற்காலத்தில் இங்குச் சிறந்த துறைமுகங்கள் பலவிருந்தன. அப்பொழுது இந்தியக் கப்பல்கள் இந்திய நாட்டு வர்த்தகத்தை வளர்த்துச் செல்வம் பெருகச் செய்தன. ஆனல், சில நூற்ருண்டுகளாக அவை இல்லாமற் போயின. மேல்நாட்டு வியாபாரிகள் அதுவே தக்க சமயம் என்று அறிந்து, இந்திய வர்த்தகத்தைக் கைப்பற்றிக் கொண்டார்கள். மறுபடியும் நம் தாய்நாடு பண்டைப் பெருமையை அடைய வேண்டுமென்று விரும்பிய ஜாம்ஸெட்ஜி, இந்தியக் கப்பற்ருெழிலுக்குப் புத்துயிர் அளிக்க உறுதிகொண்டார். நம் நாட்டின் எளிய நிலையை அறிந்த அயல்நாட்டு வாணிகர் அநியாயமான வழிகளில் பொருளீட்டுவதைக் கண்ட டாடாவின் உள்ளம் கொதித்தது. அன்றியும், அப்பொழுது ஈடும் எடுப்பும் இன்றியிருந்த 'பெனின்ஸுலார் அண்டு ஓரியண்டல்' (Peninsular and oriental) என்ற கப்பற் கம்பெனியார் அதிகக் கூலி வாங்கியதற்காக டாடா மிக வெகுண்டார்.

'சுதேசி'யில் சரியாய் வேலை செய்யத் தொடங்கிய சிறிது காலத்திற்கெல்லாம் டாடா ஜப்பானுக்

குச் சென்றார். "பி அண்டு ஓ" கம்பெனியின் அக்கிர மத்தை எதிர்ப்பதற் கென்றே டாடா ஜப்பானுக்குப் புறப்பட்டார். டோக்கியோ (Tokio) நகரை அடைந்த ஜாம்ஸெட்ஜி 'நிப்பன், யூஸென் கெய்ஷா கம்பெனி' யின் (Nippon Ussen Kaisa Company) டைரக்டர்-களைக் கண்டு ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார். அவ் வொப்பந்தத்தில், ஜப்பானியக் கப்பல்கள் இந்தியப் பருத்தியை மலிவாக எடுத்துச்செல்ல வேண்டு மென் றும், டாடா தம் சொந்த நீராவிக் கப்பல்களைச் சீனு முதலிய நாடுகளுக்கு ஓட்டவேண்டு மென்றும், ஒரு வருக் கொருவர் உதவியா யிருந்து "பி அண்டு ஒ" கம்பெனியின் அநியாயத்தை ஒழிக்க வேண்டும் என் றும் குறிக்கப்பட்டிருந்தது.

ஒப்பந்தம் எழுதி முடிந்த்பின் டாடா, கானடா வுக்குச் (Canada) சென்றார். அங்கிருந்து அவர் அமெரிக்காவை அடைந்தபோழ்து, சிகாகோவில் (Chicago) கண்காட்சி ஒன்று நடந்துகொண்டிருந் தது. ஜாம்ஸெட்ஜி அதனைக் காணுகையில் வழக்கம் போல் புதிதா யிருந்தவற்றையெல்லாம் ஆவலுடனே பார்வையிட்டார். அமெரிக்காவிலிருந்து அவர் நேராக இங்கிலாந்துக்குப் பிரயாணமானார். அவ்வ மயம் பெரிய கம்பெனிக்காரர்களுடன் போட்டியிடுவ தற்கு வேண்டிய உபாயங்களைப் பற்றி ஆலோசிக்க அவருக்கு அவகாசம் கிடைத்தது. லண்டனை அடைந் தவுடன் "அன்னி பாரோ" (Annie Barrow) என்ற ஆங்கிலக் கப்பலை நடத்தும் உரிமையை அவர் பெற்

ஞர். அதற்காக அவர் மாதமொன்றுக்கு 1050 பவுன் வீதம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டு மகிழ்ந்த மனத்துடன் மற்றைய ஏற்பாடுகளையும் செய்யத் தொடங்கினுர். அவர் தம் எண்ணம் தம் குமாரர்களுக்கு எழுதிய கடிதத்திலிருந்து வெளியாகும். "........அதற்கு 'டாடா லைன்' (Tata Line) என்று பெயரிடலாமென்று எண்ணுகிறேன். அதனுல், நமக்குச் சக்தியிருக்கும்வரை தலைமுறை த்தலைமுறையாக நம் குடும்பமே அதை எப்பொழுதும் நடத்தவேண்டிவரும். ...........நமது கம்பெனி குடும்பம் இவற்றின் நன்மைக்குமட்டுமன்றி, பண்டைய வாணிபத்தை யிழந்து இழிந்த நிலையிலிருக்கும் நம் இந்தியநாட்டின் நன்மையையும் பம்பாய் நகரிலுள்ள ஆலைத்தொழிலின் முன்னேற்றத்தையும் கருதியே இதனை மேற்கொண்டுள்ளேன்..........." என்று அவர் எழுதினுர்.

தம் ஊக்கத்தில், ஒவ்வொரு சிறிய செய்தியையும்-பற்றி டாடா பம்பாய்க்கு எழுதிக்கொண்டேயிருந்தார்; ஓய்வு நேரங்களில், கப்பலுக்கு வேண்டிய நிலக்கரியின் விலையைப்பற்றியும் இந்தியாவுக்கு மீளுங்கால் கப்பலுக்கு வேண்டிய பொருட்பொதிகள் கிடைக்குமா வென்பதைப்பற்றியும், ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தார்; வர்த்தகக் கப்பல் ஒருநாள்-கூட வேலையின்றித் தங்கக்கூடா தென்று கருதி, ஓராண்டிற்கு இத்துணைமுறை கப்பல் கடலில் ஓட வேண்டுமென்று அறுதியிட்டார்; கப்பல் வர்த்தகர் கப்பற்கூலியைக் குறைக்க வேண்டிய ஏற்பாடுகள்

செய்தார். இலட்சம் பருத்திப்பொதிகளையும் (Bales) இரண்டாயிரம் பெட்டிகள் ஓபியத்தையும் கப்பல் தடையின்றிச் சுமந்து செல்லக் கிடைத்தால், தமது வர்த்தகத்திற்கு நஷ்ட மேற்படாததோடு, எதிரிகளின் அநியாயமான உயர்ந்த கூலியும் குறைக்கப் படுமென்று தமது கடிதமொன்றில் தெரிவித்தார்.

சில மாதங்களுக்கெல்லாம் டாடாவுக்குச் சொந்தமான 'அன்னி பாரோ' 'லிண்டிஸ் பார்ன்' (Lindis Farne) என்னு மிரு கப்பல்களும், இரண்டு ஜப்பானியக் கலங்களும் ஓடத்தொடங்கின. ஒவ்வொன்றும் மாதமொருமுறை ஜப்பானிலிருந்து நிலக்கரி, கண்ணாடிச் சாமான்கள், தீப்பெட்டிகள், விளக்குக்கள முதலிய பண்டங்களை ஏற்றிக்கொண்டு இந்தியாவுக்கு வரவேண்டும்; இந்தியாவிலிருந்து திரும்பும்போது பருத்தி, நூல், முதலியவற்றை ஜப்பானுக்கு ஏற்றிச் செல்ல வேண்டும் என்று ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இந்தியப் பத்திரிகைகளெல்லாம், நீண்ட நாளாய் ஒப்பும் உயர்வு மின்றித் தனிக்காட்டரசாய்க் கப்பலோட்டிக் கணக்கின்றிக் கப்பற் கூலி வாங்கிக் கொள்ளையடித்துவந்த கம்பெனிகளுக்குப் போட்டியாய் அத்தொழிலில் ஈடுபட்ட டாடாவின் துணிவினையும், நாட்டுப் பற்றினையும் பாராட்டிப் புகழ்ந்தன.

நாற்பது கனஅடி கொண்ட டன் ஒன்றுக்குப் "பி அண்டு ஓ" கம்பெனியார் பத்தொன்பது ரூபாய்

கூலி வாங்கிவந்தனர். புதிய கம்பெனியார் அதே அளவுக்குப் பன்னிரண்டு ரூபாய் வசூலித்தனர். பருத்தி, நூல், ஓபியம் முதலியவற்றிற்குச் சத்தம் இருபத்தொன்பது முதல் நாற்பத்தேழு சத வீதம் குறைக்கப்பட்டது. உடனே "பி அண்டு ஒ" கம்பெனியார் கப்பற் கூலியைப் பத்தொன்பது ரூபாயிலிருந்து ஒன்றரை ரூபாயாகக் குறைத்தனர்! சிற்சில சமயங்களில் கூலியே இல்லாமல் சுமைகளை ஏற்றிச் செல்லவும் சம்மதித்தனர்!! இப்படிக் குறைந்த கூலிக்கோ, கூலியே யில்லாமலோ பண்டங்களை ஏற்றிச் செல்ல வேண்டுமாயின், இந்த நன்மையை விரும்பும் வர்த்தகர் அனைவரும், புதிய கம்பெனியின் கலங்களில் எப் பண்டத்தையும் ஏற்றி அனுப்புவதில்லை என்று, ஒப்பந்தம் எழுதிக்கொடுக்கவேண்டும்.

"பி அண்டு ஒ" ஒரு பெரிய கம்பெனி; பெருஞ் செல்வம் படைத்தது. புதிய கப்பற்கம்பெனி ஒன்று நிறுவப்பட்டால் தங்கள் இலாபத்திற்குக் குறைவு உண்டாகுமென்று அக் கம்பெனியார் அறிவர். அதனால், புதிய கம்பெனி நிலைப்பதற்குமுன் அதனை எங்ஙனமாவது அழித்துவிடுவதற்கு வேண்டிய முறைகளைப் பின்பற்றினர். அவர்கள் செய்த இச் சூழ்ச்சியினால் டாடா அளவற்ற நஷ்ட மடைந்தார். அதனால் அவருக்குக் கோபம் பொங்கியது. மாதந் தோறும் பதினாயிரக்கணக்கில் செலவு செய்துவந்த புதிய தொழிலை, நியாயமற்ற முறைகளால் முறியடிப்பதாக அவருக்குத் தோன்றியது. டாடா இந்திய

மந்திரிக்குத் தம் குறைகளை விண்ணப்பம் செய்து-கொண்டார்; துண்டுப் பிரசுரங்கள்மூலம் தம் கட்சியின் நியாயத்தைப் பொதுமக்கள் அறியும்படி செய்தார்.

இந்தியா கைத்தொழிலில் முன்னேற்றமடைய வேண்டுமென்று எங்கும் கிளர்ச்சி யுண்டாயிற்று. ஆங்கிலேயருள்ளும் பலர் இதனை ஆதரித்தனர். எனினும், புதிதாய் இந்தியரால் தொடங்கப்பெற்ற இச் சிறிய முயற்சி இங்ஙனம் தோல்வியுற்றுவந்தது. தம் தொழில் வளர்ச்சிக்கு அரசியலார் ஏதாவது உதவவேண்டுமென்று டாடா அவர்களைக் வற்புறுத்தி வேண்டினர். தங்கள் நாட்டுக் கம்பெனிக்கு விரோதமாக டாடா கொடிய பிரசாரம் செய்வதாக ஆங்கிலேயருட் சிலர் பிறழ வுணர்ந்தனர். ஆனால் ஜாம்ஸெட்ஜி "இந்தக் கம்பெனியுடன் பற்பல ஆங்கிலக் கம்பெனிகளும், பிறநாட்டுக் கம்பெனிகளும் கப்பற்றொழில் நடத்துகின்றன. "பி அண்டு ஓ" போட்டிபோட்டு அவைகளை அழிக்கவில்லை; ஆனால் நெருங்கிய உறவு கொண்டாடுகிறது. இந்திய நாட்டினின்றும் பெரும்பொரு ளீட்டி, இந்தியர்களின் நன்மையையே நாடுவதாக இயம்பும் இவர்களுக்கு ஒரு சிறிய இந்தியக் கம்பெனியிடம் இவ்வளவு பகையும் பொறாமையும் இருக்கக் காரணம் என்ன?" என்று உண்மையை எடுத்துக்கூறி விளக்கியுள்ளார்.

"பி அண்டு ஓ" கம்பெனியார் நியாயமான வழி-யில் போட்டி போடவில்லை என்று டாடா குறை

கூறினர்; "போட்டியிருக்கும்வரை அவர்கள் இலாபமே கருதாது கப்பற்கூலியைக் குறைப்பார்கள்; அக் கம்பெனிகள் கவிழ்ந்தபின்னர், மறுபடியும் முன் போல உயர்த்திவிடுவார்கள்" என்றும் உரைத்து-வந்தார். உலகில் மற்றக் கம்பெனியார் எல்லாம் கப்பற்கூலியைச் சரிபாதியாகக் குறைத்திருப்பினும் "பி அண்டு ஓ" குறைக்கவேயில்லை. "தங்கள் இஷ்டம்போல் இலாபம் சம்பாதிக்கும்பொருட்டுப் போட்டியிடும் கம்பெனியைத் தங்கள் வழியினின்றும் விலக்குகிறார்கள்" என்று ஜாம்ஸெட்ஜி குறை கூறினர். ஆங்கில அரசாங்கத்தார் தம் விஷயத்தில் அலட்சியமாக இருப்பதைக் கண்டு டாடா மனம் நொந்தார்; தம் கருத்தனைத்தையும் இந்திய மந்திரிக்குத் தெரிவித்து அவரைத் தமக்கு உதவி செய்யும்படி வேண்டிக்கொண்டார்.

இந்தியப் பருத்திவியாபாரிகளெல்லாம் ஒற்றுமையுடன், அவருக்கு உதவி செய்திருந்தால், டாடா தோல்வி யடைந்திரார். 'ஜப்பானியப் பருத்தி வாங்குபவர் சங்கம்' (The Japanese Cotton Buyers' Association) தான் முன்னமே டாடாவுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை ஒருசிறிதும் மீறவேயில்லை. ஆனால், இந்திய வர்த்தகர் ஒவ்வொருவராக டாடாவை விட்டுவிலகினது மன்றி, ஜாம்ஸெட்ஜி, தம் நலங்கருதியே இவ்வளவு பாடுபடுகிறார் என்று பல பொய்ச் செய்திகளையும் பரப்பினர். பத்திரிகைகளிலும் இக் கருத்துக்கொண்ட கையெழுத்தில்லாக் கடி

தங்கள் பலவரையப்பெற்று வெளிவந்தன. இவற்ருல் இவ்வுத்தமர் உள்ளம் உலேந்தார். நஷ்டத்தை ஒரு சிறிதும் பொருட்படுத்தாமல் அத் தொழிலே இடை விடாது நடத்திக் கொண்டிருக்கலா மென்று டாடா முதலில் எண்ணினர். ஆனல், தொடர்ந்து நஷ்ட மேற்படு மென்று தோன்றுந் தொழிலே நிறுத்திவிட வேண்டும் என்பதே அவருடைய வியாபாரத் தத்துவம். ஆகையால், ஒருவருஷத்திற்குள் லண்டனிலிருந்து வாங்கிவந்த கப்பல்களேத் திருப்பி அனுப்பி விட்டார். 'டாடா லேன்' மறைந்துபோயிற்று. ஆனல், டாடாவின் பெருமுயற்சியின் பயனை நிப்பன் யூஸென் கெய்ஷா கம்பெனியார் இலாப மடைந்தனர்.

டாடாவின் எதிரிகளா யிருந்த "பி அண்டு ஓ" கம்பெனியாரே அவரிடம் மிக்க மரியாதை காட்டி-வந்தனர். அவரது பரந்த நோக்கத்தையும் சிறந்த நாட்டுப் பற்றினேயும், வாணிப அறிவினேயும் பகைவரும் பாராட்டவேண்டுமன்ருே! இந்த விவாதம் நடந்து பத்தாண்டு கழிவதற்குள் டாடா அக் கம்பெனியாரிடம் முன்போல் நட்புக்கொண்டார்; மாறுபாடுகள் எல்லாம் மாயமாய் மறைந்தன.

## 8. பட்டுத்தொழில்

பருத்தித் தொழிலில் இடைவிடாது உழைத்துவந்த டாடா, பட்டுத் தொழிலைப்பற்றி நினைத்தது பெரிதும் வியக்கத்தக்கது. அவர் பல்லாண்டுகளாய்ச் செய்த ஆராய்ச்சியின் பயனாய், இந்தியாவில் பட்டுத் தொழில் நடத்துவதற்கு வேண்டிய வாய்ப்புக்கள் இருப்பதை அறிந்தார். பட்டுத் தொழிலால் நம் நாட்டிற்கு அதிக நன்மை உண்டாகு மென்றும், பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான், சீனா முதலிய நாடுகளைப்போல் இந்தியாவிலும் அத் தொழில் வளர்ச்சியடையு மென்றும் அவர் நம்பியிருந்தார்.

டாடா மேல்நாடுகளிற் பிரயாணம் செய்த நாட்களில், பிரான்ஸ் இதாலி என்னு மிவ்விரு நாடுகளிலும் பட்டுப் பூச்சியை எவ்வாறு போற்றி வளர்த்து-வந்தனர் என்பதை நன்றாய்க் கவனித்திருந்தார். இந்தியக் குடியானவர் ஓர் ஆண்டில் பல மாதங்கள் வேலையற் றிருக்கின்றனர். வேலை யில்லா அக் காலத்தில் ஏதேனும் ஓர் உதவித்தொழில் அவர்களுக்கு இன்றியமையாதது. ஊதிய மளிக்கும் குடிசைத் தொழிலொன்றை அவர்களுக்குக் கற்பித்தால் அவர்கள் கூலியும் பெறுவர். நாட்டிற் செல்வமும் பெருகும்; வறுமையும் ஓரளவு ஒழியும். தாம் கண்ட நாடுகளில் பட்டுத்தொழில் இலாபகரமான வொரு

குடிசைத்தொழிலாய் நடத்தப்பட்டு வந்தது. அங்ஙனமே இந்தியாவிலும் நடத்திப் பார்க்கலாமென்று டாடா நினைத்தார்.

1893-ஆம் ஆண்டில் டாடா ஜப்பானுக்குப் போயிருந்தபொழுது அந் நாட்டினர் பட்டுத்தொழிலைப் புதிய முறையில் மிக்க திறமையுடன் நடத்தி வந்ததைக் கண்டார். பட்டுப்பூச்சியை வளர்ப்பதிலும், அதற்கு உணவான 'மல்பெரி' மரங்களைப் பயிரிடுவதிலும், ஜப்பானியர் மிகுந்த தேர்ச்சி பெற்றிருந்தனர். ஜப்பானில், பட்டுத்தொழில் ஒரு குடிசைத் தொழிலே. பெரும்பாலும் குடியானவர்களுடைய மனைவிமாரும் மக்களுமே அத்தொழிலில் ஈடுபட்டிருந்ததனால், அந்நாட்டின் சராசரி வருமானம் அதிகரித்தது. நாளடைவில், ஜப்பான் உலகில் விற்பனையாகும் பட்டில் முக்காற் பங்கினுக்குமேல் உற்பத்தி செய்யுந் திறமையைப் பெற்றது. டாடா ஜப்பானியரிடம் எப்பொழுதும் மிக்க மதிப்பு வைத்திருந்தார். அவர்கள் கீழ்நாட்டினராயினும் மேல் நாட்டுத் தொழில்முறைகளுட் சிறந்தவற்றைக் கற்று, அவற்றில் மிக்க தேர்ச்சியும் பெற்றிருந்தமை அவருக்கு அளவற்ற வியப்பினை விளைத்தது. நிலங்களைப் பண்படுத்தி, நன்கு பயிரிட்டு, மிக்க விளைவைப் பெறுவதில் ஜப்பானியர் கைதேர்ந்தவர். ஆகையால் டாடா அவர்களுடைய முறையை நுட்பமாய்க் கவனித்தார். அவர்கள் பட்டுப்பூச்சிகளை வளர்த்துப் பாதுகாக்கும் முறைகளைத் தம் நாட்டினரும் பின்-

பற்றவேண்டுமென்ற எண்ணத்துடன் ஜாம்ஸெட்ஜி இந்தியாவுக்குப் புறப்பட்டார்.

டாடா, தாய்நாட்டினை அடைந்தவுடன், நம் நாட்டிலும் அப் பட்டுத்தொழிலை நடத்த இயலுமா என்பதைச் சோதித் தறியும்பொருட்டு, மைசூரில் ஒரு பண்ணையை நிறுவ எண்ணங் கொண்டார். அப்பொழுது மைசூர் ஸம்ஸ்தானத்திற்குத் திவானாகத் திகழ்ந்தவர் ஸர். சேஷாத்திரி ஐயர் என்னும் அறிஞர். நாட்டின் முன்னேற்றத்திற்கான எத்திட்டத்தையும் அவர் ஆதரிப்பார். ஆதலின், அவர் டாடாவுக்கு வேண்டிய உதவிபுரியப் பின்வாங்கவில்லை. அதனால் டாடாவின் எண்ணம் எளிதில் நிறைவேறிற்று. பட்டுப்பூச்சியின் வளர்ச்சிக்குத் தட்பமும் வெப்பமும் மிதமாகவே இருத்தல் வேண்டும். பங்களூரைச் சுற்றிலுமுள்ள நிலப்பகுதிகள், ஜப்பானைப் போல் நடுத்தரமான தட்பவெட்பநிலையைப் பெற்றவை. அதனால், அவ்விடங்கள் பட்டுப்பூச்சியின் வளர்ச்சிக்கு ஏற்றவையே. திப்பு சுல்தான் காலத்துக்கு முன்பே அந் நாட்டுப் பட்டு புகழ்பெற்றது. அவ் விடங்களில் ஒருவிதப் பட்டுப்பூச்சிகள் வளர்க்கப்பட்டுவந்தன. ஆதலால், அங்கே அவற்றைச் சரியாய்ப் போற்றி வளர்த்துப் பெருக்குவது மிக எளிது.

டாடா அமைத்த சிறுபண்ணையில் இந்தியர் பலர் பட்டுத்தொழிலைக் கற்றுக்கொண்டனர். 'மல்பெரி' மரத்தைப் பயிர் செய்யும் விதமும், பட்டுப்

பூச்சிகளை வளர்க்கும் வகையும், அவற்றினுக் குண்டாகும் நோய்களைத் தீர்க்கும் வழியும், மற்றும் இன்றியமையாதனவான முறைகள் பலவும் கற்பிக்கப் பெற்றனர்; பட்டினைத் தொகுப்பது, பிரிப்பது, சுற்றுவது, அதை விற்பனைக்குச் சித்தஞ் செய்வது முதலிய வேலைகளிற் பழகிவந்தனர். அப் பண்ணையை மேற்பார்வையிட்டு நன்கு நடத்துமாறு ஜப்பானிய அறிஞர் இருவர் அமர்த்தப்பட்டனர். அவர்களிருவரும் முன்னர்ச் சீனவில் ஆர். டி. டாடாவிடம் வேலை பார்த்தவர்கள்; மைசூர்ப்பண்ணைக்கு வந்த பின்னும் முன்போலவே தங்கள் வேலையில் ஊக்கத்துடன் உழைத்துவந்தனர். பட்டுநூலைச்சுற்றும் எந்திரங்களும் பாவோட்டும் எந்திரங்களும் ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. அவையெல்லாம் உறுதியாகவும் மலிவாகவும் இருந்தன. ஆட்சு (Odzu) என்னும் அந் நிபுணரின் மேற்பார்வையில் கூலியாட்களெல்லாரும் சரியாய் வேலை செய்ததனல், மைசூர்ப் பண்ணையில் சில வாரங்களுக்குள் அத் தொழில் நல்ல முன்னேற்றம் பெற்றது.

எல்லா வேலைகளும் ஜப்பானிய முறையில் நடைபெற்றன. இந்தியத் தொழிலாளிகள் திறமையோடு வேலை செய்தனர். அதனல் பழங் கைத்தொழிலொன்று புத்துயிர் பெற்றது. வேலை கற்றுக் கொள்ள வந்தவர்களிடம் சம்பளம் பெருமல் மூன்று மாதங்களில் வேலை கற்பிக்கப்பட்டது. இம் மூன்று மாதங்களுக்குள் 'மல்பெரி' பயிரிடுதல், பட்டுப்பூச்சி

வளர்த்தல், நோயினை யறிதல், பூச்சியின் கூடு களிலிருந்து பட்டுப் பெறுதல், நூல் சுற்றல், கட்டுதல் எல்லாம் மனத்திற் பதியும்படி கற்பிக்கப் பட்டன.

டாடாவின் பண்ணை தொடக்கத்திலேயே பல னளித்தது. அதனால், அவர் அடைந்த மகிழ்ச்சிக் களவே யில்லை. 1899-ம் ஆண்டில் அவர் மைசூருக்கு வந்தபோது, தம் பண்ணைக்கு இன்னும் அதிகமான நிலம் வாங்கி 'மல்பெரி' மரங்களைப் பயிர்செய்ய வேண்டுமென்று எண்ணினர். ஆனால், அச் சமயம் மைசூர் அரசாங்கத்தார் அதற்கிசையவில்லை. டாடாவின் பண்ணையி லுற்பத்திசெய்தபட்டு ஐரோப் பாவுக்கு அனுப்பப்பட்டது. அங்கு அத் தொழிலறி ஞர் அதனை ஆராய்ச்சிசெய்து அப் பட்டின் குணத் தைப் பாராட்டி, இந்தியாவில் அதுவரை உற்பத்தி யான பட்டு அனைத்தினும் அதுவே உயர்ந்ததென்று தெரிவித்தனர். இதனை யறிந்த இந்திய அரசாங் கத்தாரும் டாடாவினுடன் கலந்தாராய்ந்து, அம் முறையைப் பின்பற்றிச் சில பண்ணைகளை அமைத் தனர்.

" இந்தியர்களைப் பல்வேறு தொழிற்கலைகளிலும் பயிர்த்தொழிலிலும் புதுமுறையில் நன்கு பயிற்று-விக்க வேண்டும். அதுவே அரசாங்கத்தின் முதற் கடமை. ஏதோ என்னா லியன்றவரை இத் தொழி லுக்கு என்றென்றும் யான் உதவி செய்யக் காத்

திருக்கிறேன்'' என்று அரசாங்கத்தாருக்கு டாடா கடிதம் எழுதினர்.

இந்தியத் தாயின் தவப் புதல்வரான ஜாம்ஸெட்ஜி நம் நாடு செய்த தவக்குறையின் பயனாய், 1904-ம் ஆண்டில் மண்ணுலகினை நீத்தார். அவர் புத்திரர் முக்கியமான வேறு சில வேலைகளில் ஈடுபட்டிருந்தமையால், மைசூர்ப் பண்ணையை எவருக்கேனும் விற்றுவிட உறுதிகொண்டனர். மைசூர் அரசாங்கத்தின் உதவி யில்லாமையால், அப் பண்ணை மிக்க பயனை அளிக்கவில்லை. அந் நாட்டின் நன்மையைக் கருதியே அப் பண்ணை அமைக்கப்பட்டதெனினும், அவ் வரசியலார் அதை எடுத்துக்கொள்ள மறுத்தனர். பிறகு, டோராப்ஜி அப் பண்ணையை வாங்கிக்கொள்ளுமாறு இந்திய அரசாங்கத்தை வேண்டிக்கொண்டார். இந்திய அரசாங்கத்தாரும், தாம் அம் முறையைப் பின்பற்றிப் பல பண்ணைகளை நடத்திவருவதனுல், தமக்கு அது வேண்டா என்று கூறி வாங்க மறுத்துவிட்டனர். எனினும், அவர்கள் டாடாவினுடைய முயற்சியை மெச்சி, அப் பண்ணையைப்பற்றிய விவரங்களனைத்தையும் அச்சிட்டு வெளியிட்டனர்.

சில ஆண்டுகளுக்குப் பின்னர், அப் பண்ணையை 'மோட்சப்படை' (Salvation Army) என்ற கிறிஸ்தவ சங்கத்தினர் எடுத்துக் கொண்டனர். அவர்களுக்கு முன்னமேயே பட்டுத் தொழிலில் பயிற்சி

அதிகம் உண்டு. நம் இந்திய சமூகத்தில் உள்ள தாழ்த்தப்பட்டோரையும் நாகரிகமற்ற முரட்டு ஜாதியினரையும் அவர்கள் கிறிஸ்தவர்களாக்கி வந்தனர்; அவ்வாறு புதிதாய்த் தம் மதத்தைச் சார்ந்த அவ் வெளியவர்களுக்கெனப் பல பள்ளிகளை நிறுவி, அங்குப் பட்டுத்தொழிலையும் கற்பித்துவந்தனர். அவர்கள் தம் முயற்சியினால் இப் பண்ணையை ஒழுங்குபடுத்தினர்.

பின்னர், மோரடாபாத் (Morodabad) அலிகார் (Aligarh), பரெய்லி (Bareilly) முதலிய பல நகரங்களிலும் அதைப் போன்ற பல பண்ணைகள் நிறுவப்பட்டன. ஆனால், அவ் வனைத்தினும் சிறந்து விளங்கியது மைசூர்ப் பண்ணையே.

டாடாவின் முயற்சியால் இந்தியப் பட்டுத் தொழில் பெற்ற மேன்மை எடுத்துக்கூறுந் தன்மையதன்று. முதலில் பயனற்றதென்று கைவிடப்பட்ட ஒரு கைத்தொழிலைத் துரைத்தனத்தாரே ஏற்றுக் கொண்டு நடத்தினரெனின், அதன் உயர்வினுக்கு வேறு என்ன சான்று வேண்டும்? எங்கும் 'மல்பெரி' மரங்கள் பயிரிடப்பெற்றன. பட்டுப்பூச்சிகளை வளர்க்கும் முறைகளைப்பற்றிய வெளியீடுகள் தோன்றியவண்ணமிருந்தன. கண்காட்சிச் சாலைகளில் பட்டுத்தொழில்முறைகள் காண்பிக்கப்பட்டன. வருங் காலத்தில் பிரான்ஸ், இதாலி, ஜப்பான், சீனம் முதலிய நாடுகளைப் போல், நம் நாட்டுப் பட்டுத்

தொழிலும் முதலிடம் பெறுமாயின், அத் தொழில் வளர்ச்சிக்கு அரும்பாடு பட்ட ஜாம்ஸெட்ஜி டாடாவை நம் நாட்டு மக்கள் அனைவரும் வாயார வாழ்த்துவர் என்பது உறுதி.



விஞ்ஞானக்கலை ஆராய்ச்சிக் கழகம்

## 9. இந்திய விஞ்ஞானக்கலை ஆராய்ச்சிக்கழகம்

## (The Indian Institute of Science)

ஜாம்ஸெட்ஜி டாடாவுக்குப் பெருமை அளித்த அவருடைய திட்டங்களுள், பங்களூரில் உள்ள இந்திய விஞ்ஞானக்கலை யாராய்ச்சிக்கழகமே தலை-சிறந்தது என்னலாம். 1889-ம் ஆண்டில் அவர் உள்ளத்தில் உதித்த அத்திட்டம் அவர் ஆயுட் காலத்திலேயே முழுதும் நிறைவேருமற் போனது பெரிதும் வருந்தத் தக்கது.

மெகாலே பிரபு இந்தியக் கலாசாலைகளில் ஆங்கில மொழியைக் கற்பிக்கச் செய்து, அம் மொழியை அரசியல்மொழி யாக்கினுர். இந்தியர் உத்தியோகத்தின் பொருட்டே ஆங்கிலங் கற்றனர். உத்தியோக மோகம் அதிகரிக்கவே, ஆங்கில மோகமும் அதிகரித்தது. இந்திய மொழிகளெல்லாம் இழிந்தவை என்ற எண்ணம் யாண்டும் பரவிற்று. கல்லூரி-யில் கற்பதும், உயர்ந்த வகுப்பில் தேர்ச்சி பெறுவதும், பின்னர் உத்தியோகத்தில் அமர்ந்து உயர்ந்த ஊதியம் பெறுவதுமே இந்திய மாணக்கர்க்குக் குறிக்கோள். அவர்கள் அறிவுக்கெனக் கல்வி கற்கவில்லை. அவர்களுக்கு மேனுட்டு மொழிகளில் மோக மிருந்தது. விஞ்ஞானக் கலைகளில் உண்மைப் பற்று

உண்டாகவில்லை. இந் நிலைமையை அறிந்த ஆங்கிலேயரும் வருந்தினர். இந்தியப் பல்கலைக்கழகங்கள் மாணாக்கரைப் பரீட்சிப்பதையே தங்கள் தலைசிறந்த கடமையாகக் கொண்டிருப்பதைப் பேராசிரியர் ராம்சே (Prof. Ramsay) போன்ற பேரறிஞர் பலர் விரும்பவில்லை.

டாடா வர்த்தகத் துறையில் ஈடுபட்டிருந்த-போதிலும், நாட்டுக் கலைவளர்ச்சியை மறந்திலர். அவரைப் பேரறிஞர் என்னலாம். அவர், தமக்குச் சிறிதளவு ஓய்வுநேரம் கிடைப்பினும், அதனையும் வீணாக்காது ஏதேனும் படித்துக் கொண்டிருப்பார்; தாம் அறிந்தவற்றை எத்துறையிலாவது பயன்படச் செய்வார்; தம் செல்வத்துக்கு வாணிகமே சிறந்த காரண மாயினும், கல்வியே அதற்கு முதற்காரணம் என்பதை நன்கு அறிந்திருந்தார்; தமக்கு உதவியா யிருந்த கல்வியறிவினை, பிறர்க்கும் பயன்படுத்த எண்ணி, அதனைப் பரப்புவதற்குத் தீவிரமாக முயன்றார். அம் முயற்சியின் விளைவே இந்திய விஞ்ஞா-னக்கலை யாராய்ச்சிக்கழக மாகும்.

1889 - ம் ஆண்டில் பம்மாய்க் கவர்னராய் இருந்த ரீயீ ப்பிரபு, அவ்வாண்டுப் பம்பாய்ப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் பேசுங்காலை, இந்தியக் கல்லூரிகளின் பிற்போக்கைக் குறிப்பிட்டார்; உண்மையான கல்வியறிவைப் புகட்டும் கல்லூரிகள் இன்றியமையாதவை என்றும், மேனாட்டு அறிஞர்

பலரை வரவழைத்துக் கலையறிவைப் பரப்பவேண்டும் என்றும் கூறினர். அச் சொற்பொழிவு டாடாவின் மனத்தைக் கவர்ந்தது. அதன்முன்னமேயே, இந்தியக் கலைவளர்ச்சிக்குத் தம்மால் ஆவன செய்யவேண்டும் என்று டாடா கருதியிருந்தார். ரீயி பிரபுவின் சொற்கள் உடனே அப் பணியில் இறங்கும்படி அவரைத் தூண்டின.

1892-ம் ஆண்டு தொடங்கி, அவர் இந்திய இளைஞர் சிலரை உயர்தரப் படிப்புக்காக இங்கிலாந்துக்கு அனுப்பி, அவர்கள் செலவுக்கு வேண்டிய பொருளை அளித்துதவினர். ஆனல், அவர் எவர்க்கும் பொருளை இனமாகக் கொடுப்பதில்லை. படிப்புக்கும் பிற செலவுகளுக்கும் அளித்த தொகையை அவர்கள் பொருளீட்டுங் காலத்து அவர்களிடமிருந்து திரும்பப் பெற்றுக் கொள்வது வழக்கம். தாம் பெற்ற அதனை மீண்டும் வேறு சிலருக்குக் கொடுத்துதவுவார். இங்ஙனம், கல்விக்கெனப் பணம் கொடுப்பதும், அதனைப் பின்னர் மீண்டும் பெறுவதுமாய் இருந்ததனல், அதற்கென அவர் ஒதுக்கிவைத்திருந்த நிதி குறையாம லிருந்தது.

இங்ஙனம் அவருதவியால் படித்த ஏழை இளைஞர் பின்னர்ப் பெரும்பதவிகளை ஏற்றனர். அவ் விளைஞர், இந்தியரும் பெரும்பதவிகளை வகிக்கும் வன்மை வாய்ந்தவர் என்று நிரூபிக்குங் காலங்களில், டாடா மட்டற்ற மகிழ்ச்சி யடைவார்.

அவர் இவ்வண்ணம் சிலரையே இங்கிலாந்துக்கும் பிற மேல்நாடுகளுக்கும் அனுப்புதல் கூடும். இந்தியாவிலேயே அவ்வாறு கலையறிவைப் பெருக்குங் கலாசாலை ஒன்றிருப்பின், இந்திய இளைஞர் ஏன் பிறநாடுகளுக்குச் செல்ல வேண்டும்? அதனால், டாடா கலை அறிவு வளர்ச்சிக்கென்று, தம் செல்வத்தில் முப்பதிலட்சம் அளிப்பதாக விளம்பரம் செய்தார். அவர் நன்கொடையைக் கேட்டு மக்கள் வியப்புற்றனர். ஏனெனில், கல்வி வளர்ச்சிக்காக அதுவரை எப் பிரபுவும் அத்துணை பெரிய தொகையினை அளித்ததில்லை. பத்திரிகைகளெல்லாம் அவரைப் பத்தி பத்தியாகப் பாராட்டிப் புகழ்ந்தன. இதில் என்ன வியப்பு?

அப் பெருந்தொகையை எவ்வாறு செலவிடுவது, எவ்விதமான கலைக்கூடத்தை ஏற்படுத்துவது முதலியவற்றைப்பற்றி, ஜாம்ஸெட்ஜி, புர்ஜோர்ஜி பாத்ஷா (Burjorji Badsha) என்னும் தம் நண்பருடன் கலந்து ஆலோசித்தார். பாத்ஷா இங்கிலாந்தில் உயர்தரக் கல்வி பயின்றவர்; சிறந்த அறிவாளி. அவர் அங்கிருந்து தாய்நாட்டுக்கு வந்தபின்னர், கராச்சிக் கலாசாலை ஒன்றனில் ஆசிரியராக இருந்தார். அங்கிருந்து விலகி, பூனாவில் கோபால கிருஷ்ண கோகலே நிறுவிய 'பெர்கூஸன்' கல்லூரியில் ஆசிரியராய் அமரவேண்டும் என்று எண்ணியிருந்தார்! ஆனால், டாடாவின் வேண்டுகோட் கிணங்கி, கோகலேயிடம் விடைபெற்று,

மேனாட்டுச் சர்வகலாசாலைகளைப் பார்வையிட்டு வரச் சென்றார்.

பாத்ஷா, ஏறக்குறைய ஒன்றரை ஆண்டு இங்கிலாந்து, பிரான்ஸ், ஜர்மனி, பெல்ஜியம் முதலிய கைத்தொழில் முன்னேற்றமடைந்த நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்தார்; போகுமிடங்களில் உள்ள அறிஞர்களைக் கண்டு உரையாடி அவர்கள் கூறியவற்றையெல்லாம் குறித்துக்கொண்டார்; இந்தியாவுக்குத் திரும்பிவந்ததும், தாம்கண்டவற்றையும் கேட்டவற்றையும் தொடர்ச்சியாக எழுதி, டாடாவிடம் கொடுத்தார். பம்பாய்ப் பல்கலைக்கழகம் போன்ற பழைய கழகமொன்றன்கீழ் ஒரு கல்லூரி அமைத்து, ஆங்குப் பட்டம் பெற்றவர்களின் மேற்படிப்புக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்பதே அவருடைய அறிக்கையின் முடிவாகும். ஆனால், ஒரு தனிப் பல்கலைக்கழகத்தையோ ஆராய்ச்சிக் கழகம்ஒன்றனையோ அமைத்தல் தக்கது எனவும், பட்டம் பெற்றவர்களின் பலவித சாஸ்திர ஆராய்ச்சிக்கு வேண்டிய துணைக் கருவிகளையும் அமைத்தல் வேண்டும் எனவும் இறுதியில் முடிவு செய்தனர்.

1898-ம் ஆண்டில் டாடாவின் கல்வித் திட்டமும் அறச்செயலும் பத்திரிகைகளில் வெளியாயின. அப்பொழுது பம்பாய்க் கவர்னராய் இருந்த ஸான்ட்ஹர்ஸ்ட் பிரபு (Lord Sandhurst) டாடாவைப்

பாராட்டினர்; தாம் கவர்னராக இருக்கும்போதே அது அமைக்கப்படவேண்டும் என்றும் தெரிவித்தார். கவர்னரின் கருத்தை அறிந்த பத்திரிகைகள் பல அத் திட்டத்துக்கு அரசியலாரும் பொருளுதவி செய்யவேண்டுமென எழுதின. ஆனல், பார்ஸிகளுட் சிலர் அத் திட்டத்தை வெறுத்தனர். ஏனெனில், டாடா அளித்த பொருள் முழுதும் தங்கள் சாதியாரின் முன்னேற்றத்தின்பொருட்டே பயன்பட வேண்டும் என்பது அவர்கள் விருப்பம். டாடா அவர்களைக் கண்டித்துக் கல்வியில் சாதி, சமய வேற்றுமைகளைப் புகுத்துவது அறியாமை என்று தக்க விடை யளித்தார்.

அதே ஆண்டினில் ‘இந்திய சாம்ராஜ்ய சர்வ கலாசாலை’ (The Imperial University of India) என்ற பெயருடன் ஒரு கல்வித் திட்டம் வகுக்கப் பட்டு, மத்திய அரசாங்கத்துக்கு அனுப்பப் பெற்றது. டிசம்பர்-மீ கர்ஸன் பிரபு (Lord Curzon) வைஸிராய்ப் பதவியை ஏற்றுக்கொள்ளப் பம்பாய் வந்திறங்கினர். இரண்டு நாட்களுக்குப் பின்னர், அவரை டாடாவின் நண்பர்கள் பலர் கண்டனர். கர்ஸான் பிரபு அவர்களை மரியாதையாய் வரவேற்று, டாடாவின் வள்ளன்மையை மிகப் பாராட்டினர். ஆனல், அப்பொழுதுதான் அவர் இந்தியாவுக்கு வந்ததனல், டாடாவின் திட்டத்தைப்பற்றிச் சரியான விடையளிக்க முடியவில்லை. அதனல் டாடாவின் நண்பருட் சிலர் ஏமாற்ற மடைந்தனர். ஆனல்,

டாடாவுக்கு மாத்திரம் அதிருப்தி ஏற்படவில்லை. "கர்ஸான் பிரபு இந்தியாவுக்குப் புதிதாய் இப்பொழுதுதான் வந்திருக்கிறார். நன்றாய் ஆழ்ந்து ஆராய்ச்சி செய்த பின்னரே அவர் சரியான விடை அளிக்க முடியும்" என்று டாடா தம் நண்பர்களுக்குத் தெரிவித்தார்.

நிற்க, டாடா அச் சமயம் தென்னிந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்துகொண்டிருந்தார்; மங்களூர், தலைச்சேரி முதலிய விடங்களுக்குச் சென்றார்; மலையாள நாட்டின் இயற்கை யெழிலைக் கண்டு இன்புற்றார்; பின்னர், மாஹி யென்னுஞ் சிறிய பிரெஞ்சுப் பட்டினத்தை யடைந்தார். அங்கிருந்து அவரும் அவருடைய நண்பர் சிலரும் கள்ளிக்கோட்டைக்குச் சென்றனர். சுற்றிலுமுள்ள இயற்கை வனப்பி லீடுபட்ட டாடா அங்குச் சிலநாள் தங்கினார்; கள்ளிக்கோட்டையி லிருந்த சில சோலைகளைக் கண்டு களிப்படைந்தார்; சில சிறந்த தொழிற்சாலைகளையும் பார்வையிட்டார். அவர் ஒருகாலும் வீண்பொழுது போக்கினதில்லை. அங்கே பண்டங்கள் மலிவாய்க் கிடைக்கும்; தொழிலாளிகளும் எளிதாய்க் கிடைப்பர். அப்படியிருந்தும், சில பஞ்சாலைகள் வேலையின்றி யிருப்பதைக் கண்டு டாடா மிகவும் மனம் வருந்தினார். பின்பு, கொச்சி சம்ஸ்தானத்திற்குப்போய், அங்கிருந்து, இயற்கையன்னையின் அழகு பெருகி வழியுந் திருவாங்கூரினை யடைந்தார். இறுதியில், டாடாவும் அவருடைய நண்பர்களும் பங்களூரை யடைந்தனர்.

அப்பொழுது மைசூர் திவானக விருந்த ஸர். சேஷாத்திரி ஐயரவர்கள் டாடாவுக்கு வேண்டிய வசதிகளை அளித்து உபசாரம் செய்தார். திவான் டாடாவுக்கு நெருங்கிய நண்பர்களுள் ஒருவர்; அவருடைய திட்டங்களனைத்தையும் ஆதரித்தார். அவரைக் கண்டுபேச ஜாம்ஸெட்ஜிக்கு அது நல்ல வாய்ப்பா யிருந்தது.

தம் ஆராய்ச்சிக்கழகத்தை நிறுவக்கூடிய இடம் யாது என்று டாடா ஆலோசித்துக்கொண் டிருந்தார். முதலில் பம்பாய் நகரமே சரியான இட மென்று அவருக்குத் தோன்றிற்று. ஆனல் அந் நகரில் மக்கள் நெருக்கம் அதிகம். அத் தீவில் அதற்குத் தேவையான முந்நூறு ஏக்கர் நிலம் கிடைக்காது. அது கடற்கரையி லிருப்பதால், ஆராய்ச்சிகள் செவ்வனே நடைபெறமாட்டா. இக் காரணங்களால் பம்பாய் நகரம் தகுதியற்ற தாயிற்று. ஆயினும், பம்பாய்க்குச் சிறிது தூரத்தி லுள்ள டிராம்பே என்னு மிடத்தில், அதற்கு வேண்டிய நிலப்பகுதி யிருந்தது. அது அவருக்குச் சொந்தம். எனினும், அங்குப் போக்குவரவுக் குரிய வசதிகள் இல்லை. பம்பாய் நகருக்கு வெளியே ஆராய்ச்சிக்கழகம் நிறுவப்படுமாயின், எதிர்பார்த்தபடி நகராண்மைக் கழகத்தாரிட மிருந்து பொருளுதவி பெற இயலாது. ஆகையால், தகுதி வாய்ந்த எந்த இடமும் டாடாவுக்கு அகப்பட வில்லை, அவர் உள்ளம். பெரும் புயலில் நடுக்கடலில் அகப்பட்ட கலமெனக் கலங்கியது.

ஸர். சேஷாத்திரி ஐயர் டாடாவின் நோக்கங்களை நன்கு அறிந்தவர். அப்பொழுது மைசூர் அரசாங்கத்தார் பங்களூரிலேயே முந்நூறு ஏக்கர் நிலமும், அக் கழகக் கட்டிடத்திற்காக ஐந்து லட்சம் ரூபாயும், ஆண்டுதோறும் லட்சம் ரூபாயும் அளிப்பதாக வாக்களித்தனர். இதனைக் கேள்வியுற்ற பம்பாய் வாசிகளுட் சிலர் 'பங்களூர்' ஆராய்ச்சிக்கு வசதியான இடமன்று; அங்கே பெரிய தொழிற்சாலைகள் இல்லை. போதிய பொருளுதவி செய்யப் பிரபுக்களுமில்லை' என்று குறைகூறினர்.

டாடா பங்களூரே இக் கழகத்துக்குத் தக்க இடம் என்ற முடிவுக்கு வருமுன்னர், எல்லோருடைய கருத்துக்களையும் அறிய விரும்பினர். பெரும்பாலோர், பம்பாய் நகரமே சிறந்ததென்று பகர்ந்தனர். கல்கத்தா, பூனா, தியோலி (Deoli), நாகபுரி போன்ற இடங்களை வேறு சிலர் விரும்பினர். ஆனால் பங்களூரில் அக் கழகமிருக்கவேண்டுமென்று சொன்னவர் மிகச் சிலரே யாவர். "ஆராய்ச்சிச் சாலையே வேண்டாம்: நூல் நிலையங்களைப் பலவிடங்களில் நிறுவுங்கள்" என்று இன்னுஞ் சிலர் இயம்பினர். அவற்றையெல்லாம் டாடா பொருட்படுத்தவில்லை. மைசூர் அரசாங்கத்தின் உதவியை அவர் நன்றியுடன் ஏற்றுக்கொண்டார்; பங்களூரின் தட்பவெப்ப நிலை ஆராய்ச்சிக்குத் தகுதியான இடமென்று எண்ணி மகிழ்ந்தார்.

1899-ம் ஆண்டு அக்டோபர்-மீ கர்ஸான் பிரபு டாடாவை ஸிம்லாவுக்கு வரவழைத்தார். அப்பொழுது பல மாகாணங்களிலிருந்தும் கல்வியிலாகா வதிகாரிகளும் ராஜப்பிரதிநிதியின் சட்ட அமைச்சரும் (Legal adviser) அங்கு வந்திருந்தனர்; அக் கூட்டத்தில், டாடா எண்ணியிருந்தது போன்ற ஆராய்ச்சிச்சாலை நாட்டின் நன்மைக்கு இன்றியமையாததே என்ற தீர்மானமொன்றனை நிறைவேற்றினர். இதற்கு வேண்டிய பொருளைத் திரட்டும்பொருட்டு ஒரு குழுவும் வகுத்தனர். அதன் பயனாய் ஆராய்ச்சிச் சாலை மிக விரைவில் நிறுவப்படுமென்று எல்லோரும் எண்ணலாயினர். வர்த்தக மன்னரும் மகிழ்ச்சியோடு தம் மனைக் கேகினர். ஆனல், தமதெண்ணம் தம் வாழ்நாளில் நிறைவேருது என்பதை அவர் சிறிதும் அறியார்!

ஸிம்லாவில் நடந்த கூட்டத்தில் 'இந்திய ஆராய்ச்சிப் பல்கலைக் கழகம்' (The Indian University of Research) என்ற பெயர் பெரிதும் பொருத்தமான தென்றும், அதற்குப் பங்களூரே தக்க இடமென்றும் தீர்மானித்தனர். அரசாங்கத்தின் முழு ஆதரவையும் பெற்ற அக் கல்விக்கழகத்திற்கு, பம்பாயி லுள்ள செல்வர்கள் பொருளுதவி செய்ய வேண்டுமென்று, அந் நகரி லுள்ள முக்கியமான பத்திரிகை யொன்று வேண்டிக்கொண்டது. பொருளுதவி பம்பாயிலிருந்து கிடைத்தால், ஆராய்ச்சிச்சாலை அந் நகரிலேயே நிறுவப்படுமென்று எல்லோரும்

எண்ணியிருந்தனர். அப்பொழுது பம்பாய் நகராண்மைக் கழகம் ஆண்டுதோறும் முப்பதினாயிரம் ரூபாய் அளிப்பதாக வாக்களித்தது. காபில்தாஸ் வல்லுபா பென்ற பம்பாய் நகரவாஸி யொருவர் ஸால்ஸெட்டி (Salsette) யென்ற தீவில் முந்நூறு ஏக்கர் நிலத்தை இனாமாகக் கொடுப்பதாக வாக்களித்தார். அவ்வமயம், ஸர் சேஷாத்திரி ஐயரவர்களும் டாடாவைப் பம்பாயில் கண்டு, அவர்தம் திட்டத்திற்கு இன்றியமையாத செய்திகளைப்பற்றிப் பேசிப்போனார்.

1900-ம் ஆண்டு கோடையில் டாடா ஐரோப்பாவுக்குப் போனார்; பாரிஸ்மாநகரத்தில் நடந்த பெரிய கண்காட்சி யொன்றனைக் கண்டு, பின்னர் லண்டனுக்குச் சென்றார்; லண்டனில் இருந்தபோது ஜார்ஜ் ஹாமில்டன் பிரபுவைக் (Lord George Hamilton) கண்டார்; வெளிநாட்டிலிருக்கும்போது தம் ஆராய்ச்சிக் கழகத்துக்கு வேண்டிய நிதியை எங்ஙனம் திரட்டுவதென்று எண்ணமிட்டவண்ணமிருந்தார். அப்பொழுது அவருக்கு ஒரு யுக்தி தோன்றிற்று. 'எம்ப்ரெஸ் மில்'லின் நிர்வாக அங்கத்தினராயிருந்ததற்காக டாடா எவ்விதச் சம்பளத்தையும் எடுத்துக்கொண்டதில்லை. ஆனால், அவருக்குச் சம்பளம் எடுத்துக்கொள்ள உரிமை யுண்டு. அதனால் இனிமேல் 'எம்ப்ரெஸ் மில்'லில் கிடைக்கும் லாபத்தில் ஐந்து சதவீதம் தாம் எடுத்துக்கொண்டு அதனை ஆராய்ச்சிச்சாலையின் நிதியாகச் சேர்க்கலாமென்றெண்ணினார். டாடா இங்ஙனம் இலாபத்தில் ஒரு

சிறு பகுதியை எடுத்து ஆராய்ச்சிச்சாலைக்குச் சேர்ப்பதில் பிற பங்காளிகட்குச் சம்மதமில்லை. இதனைக் கேட்ட ஜாம்ஸெட்ஜி கறுத்தார். பின்னர், பிறர் வருத்தத்தைப் போக்க அதனையும் வேண்டாமென்று வெறுத்தார்.

ஜாம்ஸெட்ஜி லண்டனிலிருந்தபோது ஆசிரியரான வில்லியம் ராம்ஸே (Prof. William Ramsay) என்னும் பேரறிஞரைச் சந்தித்தார்; அவரிடம் தம்முடைய திட்டத்தை நன்கு விளக்கிக் கூறினர்; தாற்காலிகக் கமிட்டியாரின் விருப்பத்திற் கிணங்க அவ்வாசிரியரை இந்தியாவுக்கு வந்து ஆராய்ச்சிச் சாலையைப் பற்றிய பரிசீலனையை யேற்றுக்கொள்ளும்படி வேண்டினர். அவ் வேண்டுகோளுக் கிணங்கி 'ராம்ஸேயும்' 1900-ஆம் ஆண்டின் இறுதியில் பம்பாய்க்கு வந்தார். அவர் இந்தியாவில் இரண்டு மாதங்கள் தங்கிப் பற்பல விடங்களை நேரிற் சென்று கண்டு, அங்குள்ள பல பெரியார்களுடைய கருத்துக்களையும் அறிந்துகொண்டார். அதன் பயனாக, அவர் சில முக்கியமான தீர்மானங்களைச் செய்துகொண்டார்.

அவ் வாராய்ச்சிச்சாலையில் கற்றுத் தேர்ச்சி பெறும் இளைஞர்கட்கு வேலை கிடைக்காதென்பது கர்ஸான் பிரபுவின் கருத்து. ஆசிரியர் ராம்ஸேயும் அதனை ஒத்துக்கொண்டார். ஆனல், இந்தியாவின் பழைய தொழில்களைப் புதுப்பித்துப் புதிய தொழில்

களையுந் தோற்றுவித்தால், அப்பொழுது அவ் விளை- ஞர்கட்குப் போதுமான வேலை கிடைக்குமென்று ராம்ஸே எண்ணினர். ஆகையால், விஞ்ஞான ஆராய்ச்சிச்சாலை முக்கியமானதென்று கூறி, எங்கே அதனை அமைப்பதென்பதைத் தீர்மானிக் கும்பொருட்டுப் பங்களூர் கல்கத்தா முதலிய நகரங்- களைப் பார்வையிட்டார். கடைசியில் அவருக்குப் பிடித்தது பங்களூரே. பங்களூரிலே ஆராய்ச்சிச் சாலையை ஸ்தாபிக்கவேண்டுமென்பதற்கு 'மைசூர் ராஜ்யம் பல சுரங்கங்களைத் தன்னகத்துக் கொண் டது. அச் சுரங்கங்களில் உலோகம் நிறைய வுண்டு. அங்குச் சுத்தமான இரும்பும் கிடைக்கும். கோலார் தங்கச் சுரங்கமும் மைசூரின் எல்லையி லிருக்கின்றது. இந்தியாவி லுள்ள எல்லாத் தொழில்களிலும் அச் சுரங்கத் தொழிலே மிகவும் பெரியதென்று எண்ணு கிறேன்; அன்றியும், பங்களூரின் சீதோஷ்ணநிலை இந்தியர்க்கும் ஐரோப்பியர்க்கும் ஏற்றது. காவிரி நீர்வீழ்ச்சியின் துணையால் மின்சாரத்தை உற்பத்தி செய்து, அதனுதவியால் பற்பல தொழிற்சாலைகளை நடத்தலாம்' என்று அவர் பல காரணங்கள் காட்டி- னர். 'எஞ்சினீயரிங் டெக்னலஜி', (Engineering Technology) 'இண்டஸ்ட்ரியல் பாக்டீரியாலஜி', (Industrial Bacteriology) பௌதிகம் (Physics) ஆகிய மூன்றினுக்கும் ஆசிரியர்களையும், எந்திரங் களை ஓட்டுவதற்குப் பயிற்சி பெற்று அவற்றின் நுட் பங்களையறிந்தாரையும் நியமிக்கவேண்டுமென்றும்,

அதற்கு 'இந்திய விஞ்ஞானக்கலை ஆராய்ச்சிக்கழகம்' என்று பெயர்வைத்தல் மிகப் பொருத்தமாயிருக்குமென்றும் கூறினர்.

இராஜப்பிரதிநிதி கர்ஸான் பிரபு இத் திட்டத்தில் போதிய ஊக்கம் காட்டவில்லை. இதனல் சிலருக்கே பயனுண்டாகலாமே யன்றி நாட்டிற்கு நன்மை யுண்டாகா தென்று அவர் கூறிவந்தார். இதன் பயனக வேலை செய்தவர்களுக்கும் ஊக்கம் தளர்ந்தது. ஆனல், டாடா தாமெடுத்த காரியம் சரியான தாகையால், யார் என்ன சொன்னபோதிலும், அதனைப் பொருட்படுத்தாமல், அதில் வெற்றி பெறுவதிலேயே கருத்தைச் செலுத்தினர்.

ஸர் சேஷாத்திரி ஐயரின் காலத்திற்குப்பின், இராசப்பிரதிநிதியின் உத்தரவுக்கிணங்கி, மைசூர் அரசாங்கத்தார், தாம் முன்னமே ஆண்டுதோறும் கொடுப்பதாக வாக்களித்த லட்சம் ரூபாயை, முப்பதினயிரம் ரூபாயாகக் குறைத்தனர். இந்திய அரசாங்கத்தாரும் எத்தகைய ஊக்கமும் காட்டவில்லை. இவற்றை யெல்லாம் கண்ட டாடா சிறிது மனம் வருந்தினர். தம் பொழுதெல்லாம் அக் கழகத்தை நிறுவும் முயற்சியிலேயே செலவிடமுடியவில்லை. அவருக்குப் போதிய அவகாசமிருந்தால் எப்படியாயினும் எடுத்த காரியத்தை முடித்தேவிடுவார். ஆனல், அப்பொழுது அவருக்கு இருந்த வேலைத் தொல்லைகள் பல. எஃகுத் தொழிற்சாலை, தாஜ்

மஹால் ஹோடல், நீர் மின்சாரத் திட்டம் இவை எல்லாவற்றிலும் அவர் அப்பொழுது அழுந்திக் கிடந்தார்; அவற்றிற்காகச் சில கருவிகள் வாங்க ஐரோப்பாவுக்குச் சென்றூர். 1902-ம் ஆண்டு மே மாதம் அவர் இங்கிலாந்துக்குச் சென்றிருந்தார். அப்பொழுது லண்டனில் ஸர் வில்லியம் ராம்ஸே அளித்த விருந்திலுக்கு வந்திருந்த இந்தியா ஆபீஸைச் சார்ந்த ரிட்சி (Ritchie) என்பவரிடம் தம் திட்டத்தைப்பற்றிக் கலந்தாலோசித்தார். அவர் வேண்டுகோளின்படி டாடா தமது ஆராய்ச்சிச்சாலைத் திட்டத்தைச் சிறிதுகாலம் தள்ளிப்போட வேண்டியதாயிற்று.

ஜாம்ஸெட்ஜியின் வாழ்நாளில் ஒரு முடிவும் ஏற்படவில்லை. அவர்புதல்வர்கள் தந்தையின் மனத்துக் கிசைந்த இத்திட்டத்தைத் தாங்கள் ஆதரிப்பதாக ஒப்புக்கொண்டனர். கடைசியில் 1906-ம் ஆண்டு டாக்டர் மாரிஸ் ட்ராவெர்ஸ் (Dr. Morris Travers) என்பவர் முதல் டைரக்டராக நியமிக்கப்பட்டார். 1911-ம் ஆண்டு மைசூர் அரசர் கட்டிடத்தின் அஸ்திவாரக் கல்லை நாட்டினர். அதே ஆண்டு ஜூலைமீ 24வ முதல் இந்திய விஞ்ஞானக்கலை ஆராய்ச்சிக் கழக வேலை தொடங்கப் பெற்றது.

ஜாம்ஸெட்ஜி டாடாவுக்கு முக்கியமான நோக்கங்கள் மூன்று. அவை இந்தியாவின் புராதனமான கைத்தொழில்களை உயிர்ப்பித்தல்; புதிய தொழில்களைத் தோற்றுவித்தல்; கூரிய அறிவு வாய்ந்த

இளைஞர்களிடம் கல்வியறிவும் கலையறிவும் பெருகும்படி செய்வித்தல் என்பன. இம்மூன்றுவது நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவே, அவர் பங்களூரிலிருக்கும் இக் கழகத்தை நிறுவினர்.

## 10. இரும்பும் எஃகும்

முன்னேற்ற முறுந் தொழில்கள் அனைத்தினுக்கும் அடிப்படையானது இரும்புத் தொழிலே. உலகின்கண் போர் நிகழுங்காலத்தும் அமைதி நிலவுங் காலத்தும், இரும்பினைப்போல் மக்களுக்குப் பெரிதும் பயன்படும் உலோகம் வேறொன்றுமில்லை. போருக்கு வேண்டிய பீரங்கிப்படைமுதல் ஆகாய விமானப்படைவரை உள்ள கருவிகளும், வாழ்வுக்கு வேண்டிய கலப்பைமுதல் கப்பல்வரை உள்ள பொருள்களும் இரும்பினாலானவையே.

மண்ணிலிருந்து வெட்டியெடுக்கப்படும் தாதுப் பொருள்களுள் இரும்பு மிகவும் முக்கியமானது. அது வெட்ட வெட்டக் குறையாது. எவ்வளவு ஆழம் வெட்டியெடுத்தாலும், அச்சுரங்கங்களில் இன்னும் பல்லாயிரமாண்டுகளுக்கு வேண்டிய இரும்பு அகப்பட்டுக்கொண்டேயிருக்கும். ஏனெனில், பூமியின் நூற்றில் நாற்பத்தைந்து பங்கு அவ்வுலோகமாம்.

புதிய தொழில் வளர்ச்சிக்கு இரும்பு எத்துணை இன்றியமையாததென்று இயம்ப வேண்டுவதில்லை. இங்கிலாந்து, அமெரிக்கா, ஜர்மனி இம் மூன்றும் தொழில் வளர்ச்சிபெற்ற நாடுகளுள் முன்னணியில் நிற்பவை. அவற்றில் இரும்புத்தொழிலே உயிர்த் தொழில் எனின் மிகையாகாது. அத் தொழிலை நம்

நாட்டிலும் வளர்க்கவேண்டு மென்ற எண்ணம் இளமையிலிருந்தே டாடாவின் மனத்தில் தோன்றி வளர்ந்துவந்தது. இந்தியாவில் இரும்புத்தொழிலை இலாபம் தரும் முறையில் நடத்துவது இயல்வ-தொன்றன்று என்று பலர் எண்ணியிருந்தனர். ஆனால், ஜாம்ஸெட்ஜியின் கருத்து மாறுபட்டது. அதனால், அவர் இந் நாட்டில் இரும்புக்கனிகள் இருக்கு மிடங்களைத் துருவித்துருவி ஆராய்ந்த வண்ண மிருந்தார். 1882-ம் ஆண்டு டாடா, நாகபுரி 'எம்ப்ரெஸ்' ஆலையை நடத்துவதில் ஈடுபட்டிருக்கும்-பொழுது, ஓர் அறிக்கையைப் பார்க்க நேர்ந்தது. அது 'ரிட்டர் வான்ஷ்வார்ஸ்' (Ritter Von-Schwarz) என்னும் ஜர்மானிய அறிஞர் 'சந்தா' ஜில்லாவில் ஏற்படுத்தக்கூடிய இரும்புத்தொழிலைப்-பற்றி எழுதி வெளியிட்டது. டாடா அவ் வறிக்கையைப் படித்தபின்னர் அத் தொழிலைப்பற்றியே அல்லும் பகலும் எண்ணிவந்தார். அதனைப்பற்றி பத்தி-ரிகைகளில் வெளியிடப்பெறுங் கட்டுரைகளை அவர் ஆவலுடன் ஆழ்ந்து படிப்பார்.

ஏறத்தாழ ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்னரே இந்தியக் கருங்கைக் கொல்லருக்கு இரும்பை உருக்கி வார்த்துப் பொருள்கள் பல செய்யத் தெரியும். வேல், வாள், ஈட்டி போன்ற பல போர்க்கருவிகளையும் அவர்கள் செய்த துண்டு. இரும்பு காய்ச்சுவதைப்பற்றிய செய்திகள் வேதத்திலும் காணப்படுகின்றன. எனின், இந்தியாவில் அத் தொழிலின்

தொன்மை நன்கு புலனாகும். 'வூட்ஸ்' (Wootz) என்ற ஒருவகை எஃகு ஆதிகாலத்திலேயே இந்தியாவில் உருக்கப்பட்டு வந்தது. அது அக்காலத்து ஐரோப்பாவிலும் பிரசித்தமா யிருந்ததாம். பின்னர், பிறதேசங்களிலிருந்து இறக்குமதியாகும் இரும்புச் சாமான்களுடன் விலையில் போட்டியிட இயலாமையானும், இந்தியர் புத்தம்புதிய செட்டான முறைகளைக் கையாளாமையானும், இந் நாட்டில் அத் தொழில் நாளடைவில் நலிவடைந்து மறைந்துவிட்டது. எத் தொழிலையும் பழைய வழியிலேயே செய்துகொண்டிருந்தால் அது வளராது. வளர்ச்சியில்லையேல் வளமில்லை. நாட்டுச் செல்வவளங் குன்றின், மக்கள் வாழ்க்கையும் குன்றிவிடும்.

இந்தியாவில் மீண்டும் புதிய முறையில் இரும்புத் தொழிலை நடத்துவதற்கு இயலாதவாறு பல இடையூறுக ளிருந்தன. இந்திய அரசாங்கத்தார் சுரங்கத் தொழிலுக்கென வகுத்திருந்த சட்டங்கள் மிகவும் கடினமானவை. அவை இருந்தவரை சுரங்கத் தொழிலை எவராலும் இலாபகரமாக நடத்த முடியவில்லை. இங்கு, இருப்புப் பாதைகளெல்லாம் பெரும்பாலும் போர்வீரர்களை இங்குமங்கும் விரைவாக ஏற்றிச் செல்வதற்கே யன்றி, வாணிபப் பண்டங்களை ஏற்றிச் செல்வதற்கென அமைக்கப்பட்டன அல்ல. அக் காலத்திய இந்திய அரசாங்கத்தார் இந்திய வர்த்தகர்களிடம் தீராத அவநம்பிக்கை கொண்டிருந்தனர்.

1899-ம் ஆண்டில் கர்ஸான் பிரபுவின் காலத்தில், இந்தியத் தொழில் வளர்ச்சிக்குப் பெருந் தடையாயிருந்த அச் சுரங்கச் சட்டங்களெல்லாம் நீக்கப்கப்பட்டன. அச் செயல் இந்தியத் தொழில் வளர்ச்சிக்குப் பேருதவி செய்தது. அதற்குக் காரணமானவர்களுள் முக்கியமானவர் டாடாவே என்பதில் ஐயமில்லை. அதே ஆண்டில் நாணய மாற்றுச் சிக்கல்களெல்லாம் தீர்க்கப்பட்டன. பாங்கிகளில் அமைதி ஏற்பட்டது. டாடா, தீண்டுவாரின்றிக் கிடந்த சுரங்கப் பொருள்களையெல்லாம் பயன்படுத்தி இந்தியாவின் சுரங்கத் தொழிலைப் பெருக்க வேண்டுமென்ற எண்ணத்தைக் கைவிடவேயில்லை; 1899-ம் ஆண்டில் சுரங்கச் சட்டத்தில் ஏற்பட்ட மாறுதலையறிந்தவுடன், காத்திருந்த காலம் கிட்டிற்று என அறிந்து, கருதியது முடிக்க உறுதிகொண்டார். டாடாவுக்கும் இந்திய மந்திரியாயிருந்த ஜியார்ஜ் ஹாமில்டன் பிரபுவுக்கும் (Lord George Hamilton) நெருங்கிய நட்பு உண்டு. அவர் நம் நாட்டின் தொழில் வளர்ச்சிக்காக அளவற்ற உதவிகள் செய்திருக்கின்றார். அவற்றை நாம் எந்நாளும் மறக்கக்கூடாது. டாடா ஒருகால் இங்கிலாந்துக்குச் சென்றிருந்தபோது ஜியார்ஜ் ஹாமில்டனைக் கண்டு இந்திய வர்த்தகர்களின் குறைகளைப்பற்றி அவரிடம் முறையிட்டார்; நாட்டிற்கு இன்றியமையாத இரும்பு, எஃகுத் தொழில்களைப் பெருக்குவதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்யாதது வருந்தத்தக்கதென்றும்,

அவரிடம் கூறினர். அவ் வுண்மையுரைகளைக் கேட்ட இந்திய மந்திரி, வர்த்தகர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து உதவுவதாக வாக்களித்தார்.

அவ் வாண்டில் டாடா இந்தியாவுக்குத் திரும்பி வந்ததும், சந்தா (Chanda) ஜில்லாவிலுள்ள இரும்பை வெட்டிப் பயன்படுத்துவதற்கு வேண்டிய அனுமதியை அரசியலாரிடமிருந்து பெற்றார். அவ் வனுமதி பெற்றபின்னும், பல நாள்வரை எந்தவேலை-யும் ஒழுங்காய்த் தொடங்கப்படவில்லை. இதைக் கண்ட பலருக்கு ஆத்திர முண்டாயிற்று. ஆனால், ஜாம்ஸெட்ஜி அவர்களைச் சிறிதும் பொருட்படுத்த வில்லை; மெல்ல நடந்தாலும் நன்கு நடத்தவேண்டு மென்ற உறுதியுடன், இரும்புத் தொழிலைப் பற்றிய நுட்பங்களையெல்லாம் ஆராய்ச்சி செய்துகொண்டே யிருந்தார்.

ஜாம்ஸெட்ஜி தம் ஐரோப்பியப் பிரயாணத்தை முடித்துவிட்டு, 1902-ம் வருஷம் செப்டம்பர்-மீ அமெரிக்காவுக்குச் சென்றார். அமெரிக்காவி லிருக் கும்போது அத் தேசத்தில் உள்ள முக்கியமான இரும்புத் தொழிற்சாலைகளை யெல்லாம் பார்வை யிட்டார். மேனடுகளில் உள்ள பர்மிங்ஹாம் (Birmingham), சட்டனூகா (Chattanooga) க்ளீவ்லண்ட் (Cleveland) முதலிய முக்கிய 'இரும்பு நகரங்களு'க் கெல்லாம் சென்றார். க்ளீவ்லாண்டில் பெரிய இரும் புத் தொழிற்சாலைகள் பல இருந்தன. அவ் வூரில்

செனேட்டர் ஹன்னு (Senator Hanna) என்னும் பெரியார், அவரை மகிழ்ச்சியுடன் வரவேற்ருர். இரும்புத் தொழிலில் ஈடுபட்ட அறிஞர் சிலரைக் கண்டு உரையாடும் வாய்ப்பும் அவருக்குக் கிடைத்தது. டாடா, இந்தியாவில் தாம் ஏற்படுத்த எண்ணியிருக்குந் தொழிற்சாலைகளைப்பற்றி அவர்களிடம் கூறி, அவர்கள் சொல்லியவற்றையெல்லாம் செவ்வனே கேட்டு, அவற்றை மனத்தில் நன்கு இருத்திக் கொண்டார். அவர் சென்ற இடந்தோறும் அனைவரும் அவரை மிக்க அன்புடனும், மரியாதையுடனும் வரவேற்று அவருக்குப் பல விருந்துகளையும் அளித்தனர். அவர்தம் உலையா ஊக்கத்தையும், அகன்ற அறிவினையும் போற்ருத அமெரிக்கரிலர்.

இறுதியில் டாடா, பென்ஸில்வேனியாவில் (Pensylvania) உள்ள பிட்ஸ்பர்க் (Pittsburg) என்னும் நகரை யடைந்தார். நிலக்கரிச் சுரங்கங்களுக்கு இடையில் அந் நகரிருக்கின்றது. உலகில் வரம்பில்லாத இரும்புக் குன்றுகளை யுடைய ஸுபீரியர் ஏரிப்பிரதேசம் (Lake Superior Region) அந் நகருக் கருகி லுள்ளது. கார்னகி (Carnagie) என்னும் நிதிக்கிழவனுடைய தொழிற்சாலைகள் பிட்ஸ்-பர்கி லுள்ளன. அவையெல்லாம் டாடா பார்வையிட்டார். ஜூலியன் கென்னடி, ஸாஹ்லின் அண்டு கம்பெனி (Julian Kennedy, Sahlin & Co.,) என்னும் எஞ்சினீயரிங் கம்பெனியின் தலைவரான ஜூலியன் கென்னடியை அந் நகரில்தான் டாடா

கண்டார். பிற்காலத்தில் டாடாவின் இரும்புத் தொழிற்சாலையை அழகுற அமைத்தவர் அவரே யாவர். கென்னடியிடம் டாடா தம் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். பேராற்றலும், முதிர்ந்த அறிவும் வாய்ந்த கென்னடி டாடாவிடம் "நீங்கள் கணக்கற்ற முதற்பொருள்கொண்டு இத் தொழிலைத் தொடங்கவேண்டும். முதலில் இலாபத்தை எதிர்-பார்க்கக் கூடாது. ஆராய்ச்சியிலும், முன்னேற்பாடுகளிலும் நிரம்பப் பொருட்செலவு செய்வதற்கு-முன், 'இரும்பு எங்கே, எவ்வளவு கிடைக்கும்? அதனை உருக்குவதற்கு நிலக்கரி அருகில் உள்ளதா? போக்குவரவுச் சாதனங்கள் உள்வா?' என்று தீர விசாரித்துத் தெரிந்துகொள்ளவேண்டும். சிறிதும் அவசரப் படலாகாது. இச் செய்திகள் உங்கட்குக் கிடைத்து நீங்களும் வேண்டிய பொருளும் செலவு செய்யச் சித்தமாயிருப்பின், 'நியூயார்க்' (New-York) நகரி லுள்ள 'சார்லஸ் பேஜ் பெரின் (Charles Page Perin) என்பவரை உங்களுக்கு வேண்டிய உதவிகள் செய்யச் சொல்வேன்" என்று அறிவுரை கூறினர்.

கென்னடி கூறிய அறிவுரை டாடா மனத்தில் பசுமரத்தாணிபோல் நன்கு பதிந்தது. அவர் பெரி-னையும், ஸி. எம், வெல்ட் (C. M. Weld) என்ற மற்றொரு எஞ்சினீயரையும் தம்மிடம் வேலைக் கமர்த்திக் கொண்டு, பின்னவரைப் பம்பாய்க் கனுப்பினர்; தாம் இந்தியாவை யடைந்ததும், இரும்புத் தொழிற்

சாலையை ஏற்படுத்தும் திட்டத்தைத் தம் மூத்த குமாரரான டோராப்ஜியிடம் ஒப்படைத்தார்; எனினும், அத் திட்டத்திற்குத் தம்மாலான முழு உதவியையும் செய்துவந்தார்; வேலைக்கு ஆட்களை அமர்த்தி, அடிக்கடி வேலையின் போக்கைக் கவனித்து வேண்டிய அறிவுரைகளைக் கூறிவந்தார்.

இரும்புக்கனிகள் இருக்குமிடங்களைத் தேடிக் கொண்டு டோராப்ஜியும், அவர் உறவினரான ஷாபூர்ஜி சகலத்வாலாவும், எஞ்சினீயர் வெல்டும், பழந்தேர் பறவைபோல், ஊரூராய்ச் சுற்றினர். வேகும் வெயிலில் இரும்பு கிடைக்கு மிடங்களைப் பார்வையிட்டு, ஆங்காங்கு நிலத்தைத் தோண்டிக் குடைந்து பார்த்து, எவ்வளவு இரும்பு கிடைக்குமென்று அளவிட்டுக்கொண்டே போயினர். போனவிடமெல்லாம் எஞ்சினீயர் வெல்ட் மிக்க ஊக்கத்துடன் ஆராய்ச்சி செய்தார். அவர் அவசரப்படுவதேயில்லை. சுரங்கச் சட்டங்கள் மாறியபின் முதலாளிகள் பலர் சுரங்கத் தொழிலில், முக்கியமாக இரும்புத் தொழிலில், ஈடுபட எண்ணினர். அவர்களெல்லாம் டோராப்ஜியும் அவர் தம் ஆட்களும் சென்றவிடமெல்லாம் கூடவே போய் உளவறியும்படி, தம் ஆட்களை மறைவாக அனுப்பினர்.

சந்தா ஜில்லாவில் வேண்டிய உருக்கிரும்பு (Iron Ore) அகப்பட்டது. ஆனல் இரும்பைக் காய்ச்சுவதற்கு வேண்டிய நிலக்கரி அதனருகில்

அகப்படவில்லை. வெல்டு செய்த ஆராய்ச்சியிலிருந்து, லோஹரா (Lohara) என்னுமிடத்தி லுள்ள இரும்பும் மிகக் குறைந்த அளவினையுடையதெனத் தெரியவந்தது. இறுதியில், இந்தியாவில் இரும்பு, எஃகுத் தொழிற்சாலைகளை நிறுவுவது இயலாதென்று டோராப்ஜி தம் தந்தையிடம் வருத்தத்துடன் தெரிவித்தார். ஜாம்ஸெட்ஜியும் அச் செய்தியை அரசாங்கத்தாருக்கு அறிவித்தார்; தாம் விரும்பிய தொழில் வெற்றி பெறவில்லையென்று பெரிதும் ஏங்கினர்.

டோராப்ஜி டாடா, உத்தியோகஸ்த ரொருவரைக் காண நாகபுரிக்குச் சென்றிருந்தார். அச்சமயம் அவ் வுத்தியோகஸ்தர் எங்கேயோ வெளியே போயிருந்தார். அதனல், டோராப்ஜி எதிரேயிருந்த பொருட்காட்சிச்சாலையைப் பார்வையிடச் சென்றார். அங்கே மத்திய மாகாணப் படமொன் றிருந்தது. அப் படத்தில் உலோகங்கள் கிடைக்கு மிடங்கள் வர்ணங்களால் தீட்டப்பட்டிருந்தன. அவற்றுள் ட்ரூக் ஜில்லாவில் (Drug District) ரெய்ப்பூருக் கருகில் ஏராளமான இரும்பிருப்பதாகத் தெரிந்தது. உடனே டோராப்ஜி இச் செய்தியை வெல்டினிடம் தெரிவித்தார். இருவரும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கித் திளைத்தனர்; இழந்த நம்பிக்கையை மீண்டும் பெற்றனர்.

இருவரும் மீண்டும் இரும்பைத் தேடிப் புறப்பட்டனர். வெல்டு, டோண்டி லோஹரா முதலிய

இடங்களைப் பார்வையிட்டுப் பின்னர், தல்லி - ராஜ்ஹாரா (Dhalli - Rajhara) மலையை யடைந்தார். அம்மலையில் அடிவைத்து ஏறும்போதெல்லாம் கிணீர் கிணீரென்ற ஒலி கேட்டது. அவர் ஒரு பெரிய இரும்புக் குன்றின்மேல் நடப்பதாக உணர்ந்தார்; பசியால் வாடி வருந்தும் வறிஞன் ஒருவன் மூவா மருந்தைப் பெற்றதுபோ லானார்; உடனே, நாகபுரிக்கு விரைந்தோடி அம் மலையி லுள்ள இரும்பை எடுத்துப் பயன்படுத்த அரசியலார் அனுமதியைக் கேட்டார். அதுவும் கிடைத்தது. பின்னர் மீண்டும் அம் மலைக்குச் சென்று பல துளைகளிட்டு அங்கிருக்கும் இரும்பின் அளவையும், அங்கு உள்ளது உயர்ந்த உருக்கிரும்பே என்பதையும் ஆராய்ந்துணர்ந்தார்; அறுபத்தைந்தரை சதவீதம் தூய இரும்பு கிடைக்குமென்றும் அறிந்தார். இத் தொழிற்கு வேண்டிய பிற பொருள்களும் பக்கத்திலேயே இருந்தன. ஆகையால் தல்லி - ராஜ்ஹாரா மலையி லிருந்த இரும்பைக் கொண்டுவந்து பதம்பூர் என்ற இடத்தில் தொழிற்சாலையைத் தொடங்குவதென்ற முடிவுக்கு வந்தார். டாடா அவ் வாராய்ச்சிக்காக அதுவரை செலவு செய்த பொருள் நான்கு லட்சம் ரூபாய்க்கு மேலிருக்கும்.

•

பதம்பூரையும் விட்டுவிட வேண்டிய மற்றொரு நிகழ்ச்சி நேர்ந்தது. மௌர்பஞ்ச் (Mourbhunj) சம்ஸ்தானத்திலிருந்து 'டாடா ஸன்ஸ் அண்ட் கம்பெனி'க்கு ஒரு கடிதம் வந்தது. அச் சம்ஸ்தானத்தில்

மேன்மையான உருக்கிரும்பு அதிகமாக இருப்பதைக் கண்டுபிடித் திருப்பதாகவும் அதைப் பார்வையிட அக் கம்பெனியின் நிபுணர்களுள் ஒருவரையனுப்பி உதவவேண்டுமென்றும் அக் கடிதத்தில் கண்டிருந்தது. தல்லி - ராஜ்ஹாராவில்தான் அதிகமான உருக்கிரும்பு இருந்த தென்று அக் கம்பெனியார் எண்ணியிருந்தனர். அதைப்போலவே மௌர்பஞ்ச் சம்ஸ்தானத்திலும் அகப்படுவதாக அறிந்தும், அவர்கள் ஆச்சரியமும் கவலையும் அடைந்தனர்; தாம் முயன்று தேடிய காலத்தில் தமக்கு அகப்படாது இப்பொழுது கிடைத்துள்ளதே என்று வியந்தனர்; வேறு யாரேனும் அவ்விடத்தைப் பற்றிக்கொண்டு போட்டியாகத் தொழிலை நடத்தினல், தமது கம்பெனிக்கு நஷ்ட முண்டாகுமே என்று கவன்றனர். ஆதலின், அவ்விடத்தையும் பார்வையிட்டு, நன்ருய் இருந்தால் தாமே எடுத்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்துடன் டோராப்ஜி டாடா, பெரின், வெல்டு, சகலத்துவாலா ஆகிய நால்வரும் மௌர்பஞ்ச் சம்ஸ்தானத்தை யடைந்தனர்.

மௌர்பஞ்ச் மஹாராஜா, அவர்களை மிக்க மரியாதையுடன் வரவேற்ருர். சிறிது நேரம் அளவளாவிக் கொண்டிருந்தபின், பெரினும், வெல்டும் அவ்விடத்தை ஆராய்ச்சி செய்யப் புறப்பட்டனர். அவர்களுடன் பி. என். போஸ் என்ற அறிஞரும் சென்ருர். கடல்மட்டத்துக்குமேல் மூவாயிர அடி உயரம் ஓங்கிநிற்கும் "குருமெய்ஸனி" மலையில் அளவிட

முடியாத உருக்கிரும்பு நிறைந்து கிடந்தது. அவ் விரும்பும் முதல்தரமானது. வெட்டியெடுக்கவேண்டிய அவசியமும் இல்லாமல் இரும்புக் கட்டிகள் அங்குமிங்கும் சிதறுண்டு கிடந்தன. அவர்கள் அவற்றைக்கண்டு, பெரும்புதையலைக் கண்டெடுத்த நித்திய தரித்திரனைப் போல், பேருவகை பூத்தனர். அம்மலையும் கடலுக் கருகிலேயே யிருந்தது. அம் மலையை அடுத்தே அனேக நிலக்கரிச் சுரங்கங்களுமிருந்தன. மௌர்பஞ்ச் மஹாராஜா அவர்களுக்கு வேண்டிய உதவி புரிந்தார். முதலில் சில ஆண்டுகளுக்கு, அவர்கள் எடுத்துக்கொள்ளும் இரும்பினுக்கு யாதொரு வரியும் கொடுக்கவேண்டாமென்றார். பிற்காலத்திலும், அவர் அதிகவரி விதிக்கவில்லை. இறுதியில், டாடா கம்பெனியார், இருபது சதுரமைல் பரப்புள்ள நிலத்தை இரும்புத் தொழிலுக்கென்று குத்தகைக்கு வாங்கிக் கொண்டனர்.

எல்லா முன்னேற்பாடுகளும் முடிந்தபின்னர், 1907-ம் ஆண்டில் டோராப்ஜி அக் கம்பெனிக்கு மூலதனம் சேர்ப்பதற்காக லண்டனுக்குச் சென்றார். அங்குச் சென்று பயனில்லை யாதலின், வேண்டிய மூலதனத்தை இந் நாட்டிலே பங்குகள்மூலம் சேர்ப்பதென்று தீர்மானித்தார். அப்பொழுது இந்தியாவில் சுதேசி இயக்கம் மும்முரமாக நடைபெற்றுவந்தது, கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோலாயிற்று. இந்தியத்தொழில்வளர்ச்சிக்கென ஏற்படுத்தப்படும் இரும்பு எஃகுத் தொழிற்சாலையில்

பங்கு எடுத்துக்கொள்ள நான் நான் எனப் பலர் முன்வந்தனர். மூன்று வாரத்துக்குள் கட்டிடத்திற்கு வேண்டிய முழுத்தொகையும் - இரண்டுகோடி ரூபாயும் - சேர்ந்துவிட்டது. கம்பெனியார் 1908-ம் ஆண்டில் 'சக்சி' (Sakchi) என்ற இடத்தில் கட்டிடங்களை கட்டத் தொடங்கினர்; அவ் வூருக்குப் போய்வருவதற்கு வேண்டிய இருப்புப்பாதையும் அமைத்தனர்.

சக்சி ஒரு காட்டுப் பிரதேசம். அதைச்சுற்றி வசித்தவர்கள் அநாகரிக மக்கள்; எனினும், வேலை செய்யத் தகுதியானவர். எங்கும் குன்றுகள் ஓங்கி நின்றன. அவ்விடத்தைச் சுற்றி இயற்கை வனப்பு மிகுந்திருந்தது. அங்கே "சுவர்ண ரேகா" என்னும் ஆறு வளைந்து வளைந்து அழகுடன் ஓடிற்று. அவ்வாற்றுநீர் தொழிற்சாலையின் வேலைக்குப் பயன்பட்டது. 1909-ம் ஆண்டுத் தொடக்கத்தில் கட்டிட அஸ்திவாரம் போடப்பட்டது. 1911-ம் ஆண்டு டிசம்பர் மாதம் இரண்டாம் தெய்தி கட்டிட வேலையை முடித்து, முதன்முதல் இரும்பைக்காய்ச்சி வார்த்துத் தொழிலைத் தொடங்கினர். அங்கு அமைக்கப்பட்ட பலநிலை மாடங்கள் அடங்கிய அழகிய தெருக்களும், நீராவிக் கப்பல்கள் போன்று எப்பொழுதும் புகை விடும் கூண்டுகள் நிறைந்த ஆலைகளும், தோட்டங்களும், மின்சார விளக்குக்களால் ஒளிபெற்று விளங்கின. வீடுகளிலெல்லாம் மின்சார விசிறிகள் சுழன்றன. வீதிகள் ஒழுங்காகவும், தூயனவாயு மிருந்தன. காடாய்க் கிடந்த சக்சி தந்தி, தபாற்சாலைகள், தாண,

நீதிமன்றம், மருத்துவக்கூடம், கடைவீதி, இவற்ருல், நாளடைவில் நாகரிகம் முற்றிய நகர மாயிற்று. "ஜாம்ஷெட்பூர்" என்ற பெயருடன் விளங்கும் அந் நகரில் எண்பதிஞயிரம் மக்களுக்குமேல் வசிக்கின்றனர். தொழிற்சாலைகளில் தொண்டுபுரியும் தொழிலாளிகளின் நலங் கருதிக் கலைக்கூடம், இன்பக்களரி, மருத்துக்கூடம், பூங்காவனம் முதலிய வசதிகள் அமைத்து உதவப்பெற்றன.

இத் தொழிற்சாலைகள் ஒழுங்காய் வேலை செய்யத் தொடங்குமுன், ஜாம்ஸெட்ஜி இவ்வுலகை நீத்தார். எனினும், இவற்றிற்காக இரவும் பகலும் எண்ணி யெண்ணித் திட்டம் வகுத்து, இலாபத்தை எதிர்பாராது மீண்டும் மீண்டும் இலட்சக்கணக்கில் பொருளைச் செலவிட்டு, ஆங்கில அரசாங்கத்தாரும் இந்திய மக்களும் இரும்புத்தொழிலின் இன்றியமையாமையை அறியுமாறு செய்து, பொறுப்பும் தகுதியும் வாய்ந்த அறிஞர்களைப் பொறுக்கியெடுத்து வேலைக்கு அமர்த்தி, முதன்முதல் செய்யவேண்டிய முக்கியமான வேலைகளையெல்லாம் செய்து அடிகோலியவர் அவரே ஆவர். ஆகையால், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் இந்தியாவை இரும்பு வர்த்தகத்தில் இரண்டாவதாகவும், உலகிலேயே முக்கியமான தேசங்களுள் ஒன்ருகவும் செய்து, அழியாப் புகழை அடைந்த அவ்வீரர் பெயர் உலகில் என்றும் நின்று நிலவுவதாக.

## 11. நீர் மின்சாரத் திட்டம்

## (Hydro Electric Scheme)

ஆண்டு அறுபது நிரம்பப்பெற்ற பின்னரும் ஜாம் ஸெட்ஜிக்கு ஊக்கமும் மனவலிமையும் ஒரு சிறிதும் குன்றவில்லை. அவர் எப்பொழுதும் ஏதாவது ஆராய்ச்சியி லாழ்ந்த மனத்தினராய்ப் புதிய திட்டங்களை யமைப்பதில் கண்ணுங்கருத்துமாக இருந்துவந்தார்; ஓய்வு ஒழிவின்றி வேலைசெய்து வந்தார்; உடல் தளர்வதைக்குறித்துச் சிறிதும் கவல்வதில்லை. அவர் அக் காலத்தில் அமைத்த திட்டங்களுள் நீர் மின்சாரத் திட்டம் பெரிதும் குறிப்பிடத் தக்கது.

1897-ம் ஆண்டு ராபர்ட் மில்லர் என்ற பம்பாய் வியாபாரி யொருவர் 'தூத் சாகர்' நீர்வீழ்ச்சியைப் பயன்படுத்தும் உரிமையைப் பெற்றபின், டாடாவின் உதவியை நாடினார். இருவரும் டேவிட் கோஸ்லிங் (David Gosling) என்ற எஞ்சினீயரைக் கலந்தாலோசித்தனர். கோஸ்லிங் மேற்குத் தொடர்ச்சி மலையில் பம்பாய்க் கருகி லுள்ள லோனவ்லா (Lonavla) என்ற மலைக்கிராமத்துக்கு ஆண்டுதோறும் கோடைக்காலத்தில் போவது வழக்கம். அதைச் சுற்றிலு முள்ள மலைப்பிரதேசத்தை அவர் நன்கு அறிந்திருந்தார். அதிக மழை பொழியும் இடங்களுள்

அது ஒன்று. அம் மழைநீரைத் தேக்க வசதியு மிருந்தது. அவற்றையெல்லா மறிந்த எஞ்சினீயர் கோஸ்லிங், லோனவ்லாவுக்கு அருகிலேயே தண்ணீரைத் தேக்கி, நீர் மின்சாரத்தை யுண்டாக்கலா மென்று தீர்மானித்தார்; அக் கருத்தை அவ்விருவருக்கும் அறிவித்தார்.

நீர் மின்சாரத் திட்டம் டாடாவுக்கு மிக்க உற்சாகத்தை அளித்தது. மின்சாரசக்தியினால் தம் ஆலை எந்திரங்களை இயக்கவேண்டு மென்று அவர் பலமுறை எண்ணிய துண்டு. தாஜ்மஹால் ஹோடலில் உள்ள மின்சார விளக்கு, விசிறி, அடுப்பு முதலியவற்றிற்கு வேண்டிய மின்சாரம், நிலக்கரி உதவி-கொண்டு யந்திரத்தை ஓட்டிப் பெறப்பட்டது. பம்-பாய்க் கருகில் நிலக்கரி கிடையாது. வங்காளத்திலிருந்தே தருவிக்கவேண்டும். அதுவும் அதிக விலையுள்ளது. மேலும், நிலக்கரியை உபயோகிப்பதால் உண்டாகும் புகையினால், பொது மக்களுக்கும் தொழிலாளர்களுக்கும் பல தொல்லைகள் விளைந்தன. மேலும், புகையினால் நகரி னழகே கெட்டது. ஆகையால், நிலக்கரிக்கு ஈடாக நீர் மின்சார சக்-தியை யுபயோகித்தல் நலம் என்று டாடா நினைத்தார். கோஸ்லிங் கூறியவாறு லோனவ்லாவில் நீரைத் தேக்கி, அந் நீரிலிருந்து மின்சாரத்தை உண்-டாக்குந் திட்டத்தை ஜாம்ஸெட்ஜி முழுமனத்துடன் ஆதரித்தார். டாடா, மில்லர், கோஸ்லிங் மூவரும் சேர்ந்து அத் திட்டத்தைத் தொடங்கினர்.

அடிப்படையான ஏற்பாடுகள் நிறைவேறிய பின்னர், டாடா அரசாங்கத்தாரிடம் அனுமதி வேண்டினர்; பிற வேலைகளைத் தொடங்குவதற்கு-முன் லண்டனுக்குச் சென்று, இந்திய மந்திரி ஜார்ஜ் ஹாமில்டனைக் கண்டு, அவரிடம் தமது நீர் மின்சாரத் திட்டத்தைப்பற்றி நன்ருய் விளக்கிக் கூறி, அவருடைய வாழ்த்தும் ஆதரவும் பெற்றுப் பம்பாய்க்குத் திரும்பிவந்தார்.

இந்திய அரசாங்கத்தார், எந்த வேலையி லீடுபட்டாலும், லண்டனி லுள்ள இந்திய மந்திரியின் அனுமதி பெற்றே முடிவு செய்யவேண்டும். இந்திய அரசாங்கத்தார், ஏதேனும் ஒன்றனுக்கு அனுமதி கொடுத்தபோதிலும், அதைத் தடுப்பதற்கு இந்திய மந்திரிக்கு அதிகாரம் இருந்தது. ஆகவே, நேரே ஜார்ஜ் ஹாமில்டன் அனுமதியையும் ஆசியையும் பெற்றது, அவருக்கு மிக்க அனுகூலமாயிற்று. ஹாமில்டன் பிரபு தம் கருத்தைப் பம்பாய்க் கவர்னர் நார்த்காட்டு பிரபுவுக்குத் (Lord Northcote) தெரிவிக்க, அவரும் ஜாம்ஸெட்ஜியின் திட்டத்தை ஆதரித்தார்.

•

'பயனீர்' (Pioneer) என்ற வேருெரு கம்பெனியாரும் மின்சார உற்பத்தியில் ஈடுபட்டிருந்ததால், டாடா, தாம் செய்யவேண்டிய வேலைகளை விரைந்து செய்யத் தொடங்கினர்; அரசாங்கத்திற்கோ நகராண்மைக்கழகத்திற்கோ வேண்டிய

மின்சாரத்தைக் கொடுக்கப் "பயனீர்" போன்ற எந்தக் கம்பெனிக்கும் தனியுரிமை கொடுக்கக்கூடா தென்று போராடி வெற்றிபெற்ருர். மின்சார உற்பத்திக்காக ஏற்படுத்திய அக் கம்பெனியில் பங்காளிகளாக இன்னும் சிலரும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். வேலே தொடங்கப் பெற்றது. ஆனல் டாடா, விஞ்ஞானக்கலே ஆராய்ச்சிக்கழகம், இரும்பு எஃகுத் தொழிற்சாலே இவை இரண்டும் போலவே, இத் திட்டமும் முடிவுபெறும்வரையில் உயிருட னிருந்து கண்டு களிக்கும் பேறு பெறவில்லே. அவற்றை நிறைவேற்றுங் கடமை டொராப்ஜியைச் சார்ந்தது.

மேற்குத்தொடர்ச்சிமலேயில் அழகிய பல பள்ளத்தாக்குக்களினிடையே நீர் தேங்குமிடம் அமைக்கப் பெற்றிருக்கிறது. அங்கே மூன்று தனி நீர்நிலேகள் தடுக்கப்பட்டிருக்கின்றன. முதலாவது நீர்நிலே லோனவ்லாவில் கடல்மட்டத்திற்கு இரண்டாயிர அடி உயரத்தி லிருக்கிறது. மழைத்தண்ணீர் முழுதும் அங்கே தேக்குவதற்காக 3800 அடி நீளமுள்ள அணேயொன்று கட்டப்பட்டிருக்கிறது. அதற்கு மூன்று மைலுக் கப்பால் வடகிழக்கில் கோடைக்காலத்திற்கு வேண்டிய நீரைச்சேகரிக்கும் வால்வான் (Walwhan) என்னும் ஏரி ஒன்று உளது. அஃது இரண்டு மலேத்தொடர்ச்சிக்கு இடையில் 4500 அடி நீளமும் 70 அடி உயரமு முள்ள அணேயா லானது; 1500 ஏக்கர் பரப்பும் 65 அடி ஆழமு முள்ளது. வடகிழக்கு மூலேயி லிருக்கும் மூன்ருவது

நீர்நிலை, ஷிராவதா என்னும் (Shirawata) ஏரியாகும். அதன் பரப்பு ஐந்து சதுரமைல். அந்த ஏரியின் அணை பிரசித்திபெற்ற அசுவான் (Aswan) அணையினும் பெரியது; 7670 அடி நீளமும் 93 அடி உயரமு முள்ளது. ஷிராவதா ஏரியினின்றும் பெருகுந் தண்ணீர் வால்வான் ஏரியிற் கலக்கும். அங்கிருந்து குழாய்களின் வழியே செயற்கை நீர்வீழ்ச்சிகள் உண்டாக்கி, மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது.

இவ் வணைகள் எல்லாம் ஒரே காலத்தில் கட்டப்பட்டன அல்ல. லோனவ்லா அணை 1911-ம் ஆண்டிலும், வால்வான் அணை 1912-ம் ஆண்டிலும், ஷிராவதா அணை 1920-ம் ஆண்டிலும் கட்டி முடிவடைந்தன. தண்ணீர் மலைமேலிருக்கும் சமபூமியிலிருந்து நீர்ப்பாலங்களின் (Aqueduct) வழியாகவும், கண்வாய்களின் வழியாகவும் பாய்ந்து சுரங்கங்களையடைகிறது. அங்கிருந்து கீழே யிருக்கும் நீர்தாங்கியில் அது விழுகின்றது; அங்கே பெரிய குழாய்களில் புகுந்து 1734 அடி குதித்து, மலையடிவாரத்தி லுள்ள மின்சார உற்பத்திச் சாலையில் உள்ள எந்திரங்களை ஓட்டி மின்சார சக்தியை உண்டாக்க உதவுகின்றது.

அம் மின்சாரம் அங்கிருந்து நாற்பத்துமூன்று மைலுக்கப்பாலுள்ள பரேல் (Parel) என்னுமிடத்துக்குக் கம்பிமூலம் அனுப்பப்படுகிறது. உயர்ந்துநிற்கும் எஃகுக் கிடுகுகளால் தாங்கப்

பட்ட கம்பிகளின் வழியாய், நீரையும் நிலத்தையும் கடந்துவரும் இம் மின்சாரத்தின் பெருமையை என்னென்றுரைப்பது! இவ்விதம் அனுப்பப்பெறும் மின்சாரம் ஆண்டொன்றுக்கு 50,000 குதிரைவலி கொண்டது. பம்பாய் ஆலை முதலாளிகள் சிலர் இதனை வாங்கிக் கொள்வதாகக் கூறினர். நீர் மின்சாரக் கம்பெனியார் ஆண்டுதோறும் 30,000 குதிரைவலி கொண்ட மின்சார சக்தியைக் கொடுப்பதாக அவர்களுடன் ஒப்பந்தம் செய்துகொண்டனர்; எஞ்சியதைப் பல தொழிற்சாலைகளுக்கு விற்க ஏற்பாடு செய்தனர்.

இத்தனை ஏற்பாடுகளுக்குப் பின்னர், கம்பெனிக்குப் பணமுடை ஏற்பட்டது. செலவுக்கு வேண்டிய முதல் இல்லை. அப் பொருளை லண்டனில் சேர்க்க ஏற்பாடுகள் செய்யப்பெற்றன. அப்பொழுது பம்பாய்க் கவர்னராய் இருந்த ஸிடன்ஹாம் பிரபு (Lord Sydenham) ஷோலாப்பூரில் பிரசங்கம் செய்யுங்கால், 'நீர் மின்சாரக் கம்பெனியை இந்தியரே நடத்துவதுதான் மேன்மையைத் தருவதாகும்' என்று கூறினர். அச் சொற்களைச் செவியுற்ற செல்வர் சிலர், நாட்டுப்பற்றின் மேலீட்டால், வேண்டிய முதலைக் கொடுக்க முன்வந்தனர். 1910-ம் ஆண்டில் 'டாடா ஹைட்ரோ எலெக்டிரிக் சப்ளை கம்பெனி லிமிடெட்' என்னுங் கம்பெனி அரசாங்கத்தில் பதிவுசெய்யப் பெற்றது. அதன் மூலதனம் இரண்டு

கோடி ரூபாய். அது ஆயிரம் ரூபாய் கொண்ட 20,000 பங்குகளைக் கொண்டது.

அக் கட்டிட வேலைக்கு அஸ்திவாரம் போடும் போது, டொராப்ஜி, அவ்விடத்தில் மின்சார உற்பத்திக்கு அனுகூலமாக உள்ளவற்றை விளக்கிக் கூறினர். "இங்கு மிக்க மழை பெய்யும். அதனல் நிரம்பத் தண்ணீர் கிடைக்கும். நீர் அதிர்ச்சிக்கு வேண்டிய உயரம் இருக்கிறது. இயற்கையாக அமைந்த பள்ளத்தாக்குக்கள் பல உள. உற்பத்தி செய்யும் மின்சாரத்தை நெடுந்தூரம் அனுப்பவேண்டுவ தில்லை. பக்கத்திலேயே அதை வாங்குபவர் பலர் உளர். இத்துணை வசதிகளைப் பெற்றுள்ள இத் திட்டம் இலாபம் தருவதில் ஐயம் சிறிதும் இல்லை" என்று அவர் கூறி அதனை ஆதரிக்குமாறு அனைவரையும் வேண்டினர்.

1905-ம் ஆண்டில் பம்பாய்க் கவர்னராயிருந்த வில்லிங்டன் பிரபு அக் கட்டிடங்களைத் திறந்து-வைத்த பொழுது, வர்த்தகரும் உத்தியோகஸ்தரும் முதலாளிகளும் குழுமியிருந்தனர். கண்கவரும் மலைக்காட்சியையும், மலைத்தொடரின்மேல் அமைந்திருந்த பெரிய ஏரிகளையும், நீண்டு உயர்ந்த அணைகளையுங் கண்டு அனைவரும் பேரானந்தம் அடைந்தனர். அவற்றைக்கண்டு மகிழும் பேறு பெருது மண்ணுலகினின்று மறைந்த ஜாம்ஸெட்ஜியை நினை-யாதவர் எவரும் இலர். கவர்னரும், தம் மனக்

கண்முன் நின்ற அவ் வள்ளலைப் பலபடப் புகழ்ந்து கூறினர்.

அளவற்ற மின்சார சக்தி அகப்படுவதனால், பம்பாய் ஆலைத்தொழில் அபிவிருத்தி அடைந்தது. அச் சக்தி மலிவாய்க் கிடைத்ததனால் புதிய தொழிற்சாலைகள் பல தோன்றின. சிறந்த பண்டங்கள் குறைந்த செலவில் உற்பத்தி செய்யப்பெற்றன.

அத்துணை அனுகூலங்களை அளிக்கும் இச் சக்தியை விரும்பாதார் யார்? பயன்படுத்துவோரின் தொகை பெருகியதனால், அக் கம்பெனியார் உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய ஏற்பாடுகள் செய்தனர். "ஆந்திர வாலி ஸ்கீம்" (Andhra Valley Scheme) என்று ஒரு புதிய திட்டம் தொடங்கப்பெற்றது. அதற்கு, 'லோனவ்லா'விலிருந்து 12 மைல் வடக்கே உள்ள பள்ளத்தாக்கைப் பயன்படுத்திக்கொள்ளத் தீர்மானித்தனர். அது இரண்டு மலைத்தொடருக்கு இடையில் உள்ளது. மலையடிவாரத்தில் ஒரு சிற்றாறு வளைந்து வளைந்து ஓடுகின்றது. மழைபெய்யுங் காலத்தில், அந் நீரைத் தேக்க 190 அடி உயரமும் 1800 அடி நீளமும் உள்ள அணையைக் கட்டினர். இத் திட்டம் ஒன்றே 60,000 குதிரைவலி கொண்ட மின்சாரத்தை உதவக் கூடியது.

ஜாம்ஷெட்ஜி, லோனவ்லாவில்மட்டுமே நீரின் உதவியால் மின்சாரம் உற்பத்தி செய்ய எண்ணி

யிருந்தார். பிற்காலத்தில் தமது சிறிய திட்டம் இவ்வளவு பெரியதாகும் என்று அவர் கருதியிரார். எனினும், அவர் நட்ட சிறு செடி, பெரு மரமாக வளர்ந்து பூத்துக் காய்த்துக் குலை குலையாய்ப் பழுத்துப் பயனளிக்கின்றது. பம்பாய் நகரமக்கள் அதனைத் துய்த்து இன்புறுகின்றனர்.

நதிகளும், ஏரிகளும், நீர்வீழ்ச்சிகளும் நிறைந்த நம் நாட்டில், அறிஞர் பிறரும் அவரைப்போல இன்னும் எத்துணையோ திட்டங்களை வகுத்து, அவ்வியற்கைச் சக்தியினல் கைத்தொழிலையும் வர்த்தகத்தையும் வளர்த்து, செல்வத்தைக் குவித்து இந்திய நாட்டை இந்திரலோகமாகச் செய்தலே அவருக்குச் செய்யுங் கைம்மாருகும்.

## 12. குடும்ப வாழ்க்கை

நஸ்ஸர்வான்ஜி டாடா 1886-ம் ஆண்டில் விண்ணுல கெய்தினரென்பது முன்னரே கூறப்பட்டது. அதன்பின்னர் அவருடைய ஒரே புதல்வரான ஜாம்ஸெட்ஜியே குடும்ப பாரத்தை ஏற்கும்படி யாயிற்று. 1887-ம் ஆண்டு தொடங்கி அவர் பம்பா யில் 'எஸ்பளனேட் ஹௌஸ்' என்னும் மாளிகையில் வதிந்துவந்தார். ஜாம்ஸெட்ஜியின் மனைவியாகிய ஹீராபாய், டாடாவின் இரண்டு சகோதரிகள், டாடாவின் புதல்வர்கள் இவர்களே வீட்டில் இருந்த-வர் ஆவர். ஆனல், உறவினர் பலர் வருவதும் போவது முண்டு.

ஜாம்ஸெட்ஜி பொதுவாழ்வில் அதிகமாக ஈடு பட்டிருந்தமையால், குடும்ப வாழ்வைப்பற்றிப் பல செய்திகளை இங்குக் கூறுவதற் கில்லை. அவர் பெரும்பாலும் வீட்டில் இரார்; காலையிலும் மாலை யிலும் மட்டும் வெளியே உலாவப் போவார்; மற்றப் போதெல்லாம் ஆலைகளைப் பார்வையிடுவதும், உத்தி யோகஸ்தர்களைக் கண்டு பேசுவதும், தொழில் வல் லாருடன் கலந்து ஆய்வதுமாகக் காலத்தைக் கழிப் பார்; இரவில் வீட்டுக்கு வந்தபோதிலும் எவருடனும் மிகையாகப் பேசவேமாட்டார்; வீடுவந்து உண்ட-பின் தம் புத்தகங்களை யெடுத்துக் கொண்டு படிக்கச்



எஸ்ப்ளனேட் அவுஸ்

செல்லுவார். அவர் கோபிக்கமாட்டா ரென்று தெரிந்தபோதிலும் அவரிடம் பேசுவதற்கு எவரும் துணிவதில்லை.

அவருடைய உறவினர் எல்லோரும் டாடாவிடம் அன்புடன் கலந்த அச்சத்துட னிருந்தனர். அவரிடம் அன்பும் மதிப்பும் கொள்ளாதவர் இல்லை. அன்பின் மிகுதியால் எல்லோரும் டாடாவை 'பாபுஜி' என்று அழைப்பது வழக்கமாம். அவர் தம் அறையிலுட்கார்ந்திருக்கும்போது அவரைப் பார்க்க விரும்பியவர்களெல்லாம் தடையின்றிப் பார்க்கலாம். ஆனால், அவர் வேலையைக் கெடுப்பதற்கு எவரும் துணிவதில்லை. நெடுநேரம் வெளியிலே காத்திருந்துவிட்டு உள்ளே போகத் துணிவின்றிச் சிலர் திரும்பிப் போய்விடுவதும் வழக்கமாம்.

ஜாம்ஸெட்ஜிக்கும் அவருடைய தந்தையாருக்கும் ஆண்டில் அதிக வேறுபாடு இல்லை. ஆகையால் அவர்கள் இரண்டு நண்பர்களைப்போல நடந்துகொண்டனரேயன்றித் தந்தை மகன் என்ற முறையைப் பாராட்டினது கிடையாது. அதுபோலவே ஜாம்ஸெட்ஜிக்கும் டொராப்ஜிக்கும் ஆண்டில் அதிகவித்தியாசம் இல்லை. டொராப்ஜி தமது தந்தையாரிடத்தில் மிக்க மதிப்புட னிருந்ததுபோல், தந்தையும் தம் மகனிடம் அதிக அன்புடன் நடந்துகொண்டார். ஜாம்ஸெட்ஜி தம் தந்தையாரின் கம்பெனியிலொரு பங்காளியா யிருந்தார். அது போலவே

டொராப்ஜியும் தம் தந்தையாரின் கம்பெனியில் பங்காளியா யிருந்தார். ஜாம்ஸெட்ஜி தம் மகனுக்கெழுதிய கடிதங்களையெல்லாம் நட்பு முறையிலேயே எழுதினர்.

டாடா குழந்தைகளிடத்தில் பிரியமா யிருப்பார். ஆனல், தம் ஆசையை அவர் வெளியில் காட்டிக்கொள்ளமாட்டார். அவர் குழந்தைகளைக் கொஞ்சுவது கிடையாது. தாம் பெரிய செல்வரா யிருந்தும் அனுவசியமான செலவை அவர் ஒப்பவேமாட்டார்; டொராப்ஜி கேம்பிரிட்ஜில் படிக்குங்கால் அவருக்குக் கணக்காகத்தான் பணம் அனுப்புவார்; டால் டமாரங்களிற் செலவு செய்வதற்குப் பணம் கொடுக்கமாட்டார். டொராப்ஜி சிறு குழந்தையா யிருக்கும்பொழுது ஒவ்வோர் இரவும் டாடா அவரைக் கூப்பிட்டு, அருகில் வைத்துக்கொண்டு, "இன்று காலையிலிருந்து நீ என்னென்ன வேலை செய்தாய்? எப்பொழுது விளையாடினுய்?" என்றெல்லாம் கேட்பாராம். குழந்தை தக்க விடை சொல்லாவிட்டால், தம் கைப்பிரம்பினுற் கடிதோச்சி மெள்ளவொரு செல்ல வளாசு வளாசுவராம். குழந்தை குறும்பு செய்தால் அவர் அதட்டவே மாட்டார்; தாமும் கூட நின்று வேடிக்கை பார்ப்பார். குழந்தையை ஓடி ஆடி விளையாடாமல் வைத்துக் கொள்வதில் அவருக்குப் பிரியமில்லை. ஒருகால் டொராப்ஜி கிணற்றோரத்தில் சாய்ந்தபடி தலைகீழாய் நின்று விளையாடினராம். அதைக் கண்டவரெல்லாம் மிகவும்

பயந்து ஆரவாரம் செய்தார்களாம். ஆனால், டாடா குழந்தையின் அருகில் சென்று, "குழந்தாய், அப்படியே சிறிது தூரம் நட, பார்ப்போம்" என்றாராம். குழந்தைகளை மனம் போன வாறு விளையாடும்படி செய்வது நன்மை தரக் கூடியதென்பது டாடாவின் நம்பிக்கை.

சிற்சில சமயங்களில் தம் சகோதரிகள் பிள்ளைகளுக்கு அவர் நிறையப் பணம் கொடுப்பார். அப்பொழுது அவரை யாராவது, "ஏன் குழந்தைகளுக்கு அளவுக்கு மிஞ்சிய பணம் கொடுக்கிறீர்கள்? அதனால் பிள்ளைகள் கெட்டுவிட மாட்டார்களா?" என்று கேட்டால், டாடா, "குழந்தைகளுக்குப் பணம் செலவுசெய்யும் வழி தெரியவேண்டும். எதற்குச் செலவழிப்பது, எதற்கு வேண்டா வென்பதை அவர்கள் பழக்கத்தா லறிவதே மேலானது. மேலும், குழந்தைகள் பணம் செலவழிக்கும் முறையானது அவர்களுடைய குணத்தை நன்றாய் வெளியிடும்" என்று விடையளிப்பார். எல்லாக் குழந்தைகளுக்கும் டாடா தாராளமாகத் தின்பண்டங்கள் வாங்கிக் கொடுப்பார். ஆனால், அவைகள் தின்பண்டம் வேண்டு மென்று பிடிவாதம் செய்தால், வாங்கிக் கொடுக்கவேமாட்டார்.

ஜாம்ஸெட்ஜிக்கு நிலம் வாங்கி வீடு கட்டுவதில் மிக்க விருப்ப முண்டு. தாம் கட்டிய வீடுகளையெல்லாம் கண்டு அவர் பெருமையடைவார். மாதிரான், நவ்சாரி,

உதகமண்டலம், பஞ்சகானி, பங்களூர் ஆகிய பல இடங்களிலும் டாடாவுக்கு நிலமுண்டு. அவைகளை யெல்லாம் அவர் அடிக்கடி பார்வையிடுவார். ஆங்காங்கே அழகிய பல தோட்டங்களை யமைப்பதில் அவருக்கு ஆசை அதிகம். ஆண்டுதோறும் டிசம்பர் மாதம் அவர் தம் குடும்பத்தாருடன் தம் பிறப்பிடமாகிய நவ்சாரிக்குப் போய்த் தங்குவது வழக்கம். அங்கே டாடா சில நண்பர்களையும் வரும்படி யழைப்பார். அங்கே அவர் விடியற்காலையி லெழுந்து தம் தோட்டத்தைப் பார்வையிடுவார். அடிக்கடி சீர்திருத்தங்களைச் செய்வதிலும், தமது வீட்டை அழகு பெறச் செய்வதிலும் அவருக்கு விருப்பம் மிகுதி. நவ்சாரியில் டாடா ஒரு விலங்குக் காட்சிச்சாலையை அமைத்துக்கொடுத்தார். நவ்சாரியிலுள்ளவர்கள் மாலை வேளையில் காற்று வாங்கிப் பொழுதுபோக்குவதற்காக ஒரு சிறிய மலர்வனத்தையும் ஏற்படுத்தினர். டிசம்பர் மாதக் கடைசியில் டாடா தமது குடும்பத்துடன் பம்பாய்க்குத் திரும்பு முன், நவ்சாரியிலுள்ள சிறுவர்களைப் பந்தய விளையாட்டுக்களில் ஈடுபடுத்தி, பரிசுகள் பல வழங்குவார்.

பொதுவாக ஜாம்ஸெட்ஜி கூட்டங்களுக்குப் போவதில்லை. வேடிக்கையாகப் பேசி விளையாடிப் பொழுதுபோக்குமிடங்களில் டாடாவைப் பார்க்கவே முடியாது. அவருக்கு வரம்பில்லாச் சொத்துக்கள் இருந்தபோதிலும் அவைகளையெல்லாம் அவர் தம் நன்மைக்காகப் பயன் படுத்தினதில்லை. சுத்த

மான வெள்ளையாடை, பார்ஸிக்குல்லாய், அதற்கு-மேல் சிறிது விலைகொடுத்துக் கொண்டதொரு தலைப் பாகை, இவைகளே டாடாவின் உடைகள். தாழ் விலே பெருமையும் வாழ்விலே தாழ்மையும் வேண்டு மென்பது டாடா கொண்ட அரிய கொள்கையாகும். அவருக்கு உண்மையில் சுகத்தையும் சந்தோஷத் தையும் கொடுத்தது அவருடைய வேலையே. தமது பெரிய திட்டங்களைப்பற்றி அவர் ஆராயுங்கால் அவருக்குச் சிறிதும் மெய்வருத்தம் ஏற்படுவதில்லை. பசி, துயில் இவற்றையும் அவர் உணரமாட்டார். எவ்வளவுக் கெவ்வளவு நற்காரியத்திற்காகப் பொரு ளுதவி செய்கின்றாரோ, அவ்வளவுக் கவ்வளவு அவருக்கு மனவமைதி ஏற்படும். பொருளீட்டிக் குன்றெனக் குவித்தலும், வரையா வள்ளன்மையும் அவருக்கு மனக்களிப்பைக் கொடுத்தன.

ஓய்வென்றால், ஜாம்ஸெட்ஜிக்கு மனக்கசப் பேற்படும். அவர் ஒருநாள்கூட ஓய்வெடுத்துக் கொள்ளமாட்டார். எப்பொழுதாவது விடுமுறை வந்துவிட்டால், தொழிலாளிகளும் மற்றவர்களு மில்லாதபோதும் ஜாம்ஸெட்ஜி தம் தொழிற் சாலைக்குப் போய்த் தனியே யிருந்து வேலை செய்த-வண்ண மிருப்பார். வெளிநாடுகளில் பிரயாணம் செய்ய நேர்ந்தபோது, அவர் தந்தனப்பாட்டு, ரஞ்ச னக்கூத்து முதலியவற்றைக் கருதி எவ்விடமும் போனதில்லை; அப்பொழுதும் கண்காட்சிச் சாலை-களையோ பொருட்காட்சிச் சாலைகளையோ

பார்வையிடுவதும், புதிய பொருள்களை வாங்குவதுமே அவருக்கு வழக்கம். அவர் வண்டியிலும், கப்பலிலும் பிரயாணம் செய்யும்போது தமது வர்த்தகத்தைப் பற்றியே ஏதாவது ஆலோசனை செய்வதும், கடிதங்க ளெழுதுவதுமா யிருப்பார்; அதிகாலையில் வீட்டி-லுள்ள வேலைக்காரர்கள் எழுந்திருக்குமுன் தாம் எழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு தோட்டத்திற்கு உலாவச் செல்வார்; அங்கிருந்து கடவுளின் வடிவாகிய கடலைக் கண்டு அதன் ஓர மாய்ச்சிறிது நேரம் நடப்பார். இயற்கையின் வனப் பிலீடுபட்டுத் தம் தூய ஆடைகளுடனும், வெண்மை யான தாடியுடனும் இரு கைகளையும் உயரத்தூக்கி டாடா தமது உச்சமான குரலிற் பாடும்போது கண்டால், அவர் ஒரு சந்நியாசிபோல் காணப் படுவார். கடலோரமாகச் சிறிது தூரம் நடந்த-பின்பு, வீட்டுக்கு வந்து வண்டியி லேறிக்கொண்டு அவர் தம் நண்பர்களைக் காணச் செல்வார். அப் பொழுது அவருடைய நண்பர்களுட் சிலர் படுக்கையி லிருந்துகூட எழுந்திருக்கமாட்டார்கள். காணவேண் டியவர்களைக் கண்டபின், டாடா வீட்டையடைந்து காலையுண்டிகொண்டு, தமதறைக்குப்போய் எழுதவேண்டியவற்றை எழுதிமுடித்துப் படிக்க வேண்டியவற்றைப் படிப்பார்; ஏறக்குறைய பன்னி ரண்டு மணிக்கு ஆபீசுக்குப் போய் மாலை ஆறுமணி-வரையில் அங்கேயே யிருப்பார்; வேலை முடிந்த-பின் தமது வண்டியை ஓட்டிக்கொண்டு எங்கே

யாவது ஒருமணி நேரத்தைக் கழித்தபின் வீடு திரும்புவார்; வீட்டில் அமைதியுடன் சுவையுள்ள உண்டிகளைப்பசியார உண்டுநேரே தம் அறைக்குச் சென்று ஏதாவது புத்தகத்தைப் படித்துக்-கொண்டே யிருப்பார். அவர் படுக்கைக்குப் போகும் பொழுது வெகுநேரமாய்விடும். இப்படியே அவருடைய நாட்களுட் பெரும்பகுதிகள் கழிந்தன. முதுமைப் பருவத்திலும் ஜாம்ஸெட்ஜி இவ்வண்ணமே உழைத்துவந்தார்.

பெரிய மனிதரின் சரிதங்களைப் படிப்பதில் டாடாவுக்குப் பெரிதும் விருப்பம். அவ் வகையில் அவர் படிக்காத புத்தகங்க ளில்லை. படித்தவற்றை யெல்லாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளும்படியான ஆற்றலை அவர் படைத்திருந்தார். நவீன விஷயங்கள் முதலாகச் சிறுகதைகள்முதல் செடிகொடி சாத்திரம் ஈறாக எவற்றையும் அவர் சுவையுடன் படிப்பார். உண்மையில் இன்பமான கவிகளை அவர் உரக்கப் படித்து ஆனந்திப்பார். தாய்மொழி யினிடத்தில் அவருக்கு வரம்பிலா அன்பு உண்டு. அதனையடுத்து அவருக்கு விருப்பமான மொழி ஆங்கிலமே. ஆங்கிலமொழியில் டாடாவுக்கு மிக்க வன்மை யுண்டு. அவர் ஆங்கில நடை மிகத் தெளிவாக விருக்கும். தங்கு தடையின்றி அம் மொழியிற் பேசும் வன்மையும் அவருக் குண்டு.

ஒருசமயம் ஸர் ஜியார்ஜ் கிங் (Sir George King) என்னும் தாவரசாஸ்திர அறிஞர் (Botanist)

டாடாவைக் காணவந்தார். அப்பொழுது டாடா-வுக்கு உடல் நல மில்லாமல் நோயுடன் படுத்திருந்தார். ஸர் ஜியார்ஜ் ஏறக்குறைய ஒரு மணி நேரம் ஜாம்ஸெட்ஜியுடன் பேசிக்கொண்டிருந்தார். இருவரும் செடிகொடிகளைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தனர். பேசி முடிந்தபின், ஸர் ஜியார்ஜ், டொராப்ஜியைக் கண்டு, “நான் எந்த சாஸ்திரத்தில் அதிகத் தேர்ச்சி பெற்றிருக்கிறேனென்று நினைத்தேனே, அதிலே தங்களுடைய தகப்பனாரின் அறிவைக் கண்டு ஆச்சரிய மடைந்தேன். அவரிடமிருந்து பல விஷயங்களைத் தெரிந்து கொண்டேன்” என்றார்.

மற்றொரு சமயம் ஜாம்ஸெட்ஜி வியன்னாவுக்குப் போயிருந்தார். ஆலைகளிலிருந் தனுப்பப்படும் நூல்களைக் கட்டுவதற்கு அங்கிருந்துதான் டாடா காகிதம் வாங்குவது வழக்கம். டாடாவும் அவருடைய புதல்வரும் வியன்னாவி லிருக்கும்போது காகிதம் செய்பவரொருவர் தமது காகிதத்தை வாங்கும்படி செய்வதற்காக டாடாவைக் கண்டு பேசினார். வந்தவர், தம் சரக்கின் விலையை ஏற்றமாகச் சொன்னார்; “எனக்கு லாபமே வேண்டா. முதலுக்கே கொடுக்கிறேன்” என்றெல்லாம் சொல்லிக்கொண்டே போனார். டாடாவுக்குக் காகிதம் செய்யும் முறையெல்லாம் நன்றாய்த் தெரியும். ஆகையால், அவர் அதற்கு எவ்வளவு செலவாகு மென்று திட்டம் போட்டு, அவர் சொன்ன விலை மிகவும் அதிகமான

தென்று விளக்கிக்காட்டவே, கடிதவாணிகர் திகைத்துப்போய் விடையளிக்கத் தெரியாமல் திரும்பிப் போய்விட்டார்.

இவ்விரண்டு நிகழ்ச்சிகளும் டாடாவின் பேரறிவைக் காட்டப் போதுமானவை. தாம் படிக்கும் விஷயங்களிலெல்லாம் டாடா ஆழ்ந்த அறிவைப் பெற்றது பெரிதும் வியக்கத்தக்கதே யாகும். கற்றனைத் தூறும் அறிவன்றோ?

## 13. இறுதிக்காலம்

எத்தனையோ நற்குணங்களைப் படைத்த ஜாம்-ஸெட்ஜியிடம் ஒரு சிறிய தீக்குண முண்டு. தித்திப்பான உணவுக ளென்ருல் அவர்க்குப் போன உயிர் திரும்பிவரும். அவ் வுணவுகள் கிடைத்தால் சிறிதும் வஞ்சனையின்றி வாய்மடை செறிப்பார்; வைத்தியர் 'வேண்டா' என்ருலும் கேட்கவேமாட்டார். அதனுல் அவருக்கு அடிக்கடி அஜீர்ண நோய் உண்டாகும். நோய் தீர்க்கப் பல புத்தகங்களையும் வாங்குவார். அவற்றிற் கூறியாங்கு மருந்துகளையேனும் வாங்கி யுண்பாரா? உண்ணுர். மருத்துவரும் உறவினரும் அவரை விழிப்புட னிருக்கச் சொன்னுல், அவருக்குச் சினம் பொங்கும். "நீங்கள் ஏன் வீணிற் கவல்கின்றீர்கள்? நான் கற்களையும் விழுங்கிச் சீரணித்துக் கொள்வேன்" என ஒருசிறு குழந்தைபோல அவர் விடையளிப்பார். அதற்குமேல் அவர்கள் என்ன சொல்வ தென்று தெரியாமல் பேசாமலிருந்து விடுவார்கள். டாடாவுக்குத் தீராத அஜீர்ண நோய் ஏற்பட்டபடியால், அடைந்த தொல்லைகள் கணக்கில. எங்கேனும் சிறிது தூரம் நடந்தாலும், அவர்க்குப் பெருமூச்சு வாங்கும்; களைப்பு மேலிடும்.

ஐம்பதாவது ஆண்டும் பிறந்தது. நோயின் தொல்லைகள் பெருகின. குன்ருஉடல்வன்மை

இருந்தமையின் நோயின் துன்பங்களை அவர் சிறிதும் பொருட்படுத்தவில்லை. அறுபதாம் ஆண்டில் அவர்க்கு நோய் மேலும் மேலும் பெருகியவண்ணமாயிருந்தது. இருதயம் பழுதுற்றது. வலிமை குன்றியது. அவர் மேன் மாடப் படிகளையும் ஏறிச் செல்ல முடியாதவ ராயினர். வண்டியிலிருந்து இறங்குவதும் அவருக்கு அரிய செயலாயிற்று. அவர் படுந் துன்பங் கண்டு எவரேனும் துணைக்கு வந்தால் டாடாவுக்குச் சினம் மண்டும். அவர் "எனக்கென்ன கேடு? எனக்கேன் உதவி? நான் சௌக்கியமா யிருக்கிறேன்" என்று சொல்லிவிடுவார். கல்லுங் கரையுமாறு கஷ்டப்பட்டு நடப்பார்.

உறவினரின் பேச்சைக் கேட்டிருப்பாராயின், டாடா இன்னுஞ் சிலகாலம் உயிரோடிருந்திருக்கலாம். பிறருதவியை அவர் ஏற்றுக்கொண்டிருந்தால், அவர்தம் நோயும் விரைவிற் குணமடைந்திருக்கும். ஆனல், அந்த ஒரு விஷயத்தில் அவர் பிடிவாதங்கொண்டு உடம்பைக் கெடுத்துக்கொண்டார். அவர்தம் அறுபத்தைந்தாம் ஆண்டில் நோய் முற்றியது. அப்பொழுதும் டாடா மீதூண் கொள்ளுதலை நிறுத்தவில்லை. உறவினர் மன்ருடினர்; கெஞ்சினர். வைத்தியர்கள் தம்மால் ஆனமட்டும் கண்டித்தனர்; நயத்திற் கூறினர்; அச்சுறுத்தினர். டாடா அசையவேயில்லை. அதனல், நோய் முற்றி, மருந்தாலும் மந்திரத்தாலும் தீராத நிலைக்கு வந்துவிட்டது. உறக்கம் ஒழிந்தது. மூச்சு விடும்-

போது மார்பில் வலிகண்டது. மூச்சுத் திணறியது. வயிற்றில் வலி யுண்டாயிற்று. இத்தகைய பேரச்ச நிலையிலும் வைத்தியர்கள் நம்பிக்கை யிழக்கவில்லை. அவர், மேலும் சில ஆண்டுகளாவது உயிர்வாழ்வார் என்றெண்ணினர். ஆனல், டாடா தம் வாயைக் கட்டினலல்லவா நோய் தீரும்?

ஜாம்ஸெட்ஜி எப்போதும் வேலை செய்து-கொண்டிருப்பவர். அவருக்கு ஓய்வு எடுத்துக்-கொள்வதென்றால் வேப்பிலைக் கஷாயம் குடிப்பது போன்றிருக்கும். வைத்தியர் ஓய்வெடுத்துக்கொள்ள வேண்டுமென்று எவ்வளவோ சொல்லியும், டாடா அதைச் சிறிதும் கேட்கவில்லை. வைத்தியர்கள் தம்மால் எவ்வளவு முடியுமோ அவ்வளவும் செய்து பார்த்தனர். இருதய நோய்க்கு வாய்ப்புடைய ஒரு நகரம் ஜர்மனியி லுண்டு. அதன் பெயர் "பாத் நௌஹீம்" (Badnauheim) என்பது. இறுதியில் வைத்தியர்கள் 'டாடா அந் நகர்க்கே அழைத்துச் செல்லப்படவேண்டு'மென முடிவுகட்டினர். டாடா, வைத்தியர்கள் முடிபுகளைக் கேட்க மறுத்தார். "நான் பாத்நௌஹீம் போகமாட்டேன்; போகவே மாட்டேன்; பாரஸீகக்குடாவுக்குச் செல்லப்போகிறேன்" என விடையளித்தார்.

டாடாவின் நெருங்கிய சுற்றத்தினரான ரடன்ஜி தாதாபாய் முடிவில் கிழவரை ஏமாற்ற ஒரு சூழ்ச்சி செய்தார். "எனக்கும் உடம்பு நலமில்லை. நான்

எகிப்து செல்லப்போகிறேன். நீங்களும் கூடவருதல் நல்லது. இன்னும் இரண்டுவாரங்களில் திரும்பிவிடலாம்'' என்று கூறி அவர் அழைக்க, அவ் வழைப்பினுக் கிணங்கி டாடா தாமும் வருவதாக ஒப்புக்கொண்டார்; ஆனால், தம்முடன் ஒரு வைத்தியரை யழைத்துச்செல்ல, அவர் கண்டிப்பாய் மறுத்துவிட்டார். "என் வீணில் நீங்கள் இந்த ஆரவாரஞ் செய்கின்றீர்கள்? எனக்கென்ன வந்துவிட்டது?'' என்று அவர் அடிக்கடி சொல்வார். அச் சமயம் ஸர் டொராப்ஜியும் அவர் மனைவியும் எகிப்திலிருந்தனர். ஜாம்ஸெட்ஜியின் வருகையையறிந்த டொராப்ஜி, சூயஸ் கால்வாயில் வந்து எதிர்கொண்டழைத்தார். எல்லோரும் சிறிது நேரம் பேசியபின், டாடாவுக்குத் தெரியாமல் ரடான்ஜி இந்தியாவுக்குச் திரும்பிவிட்டார். ஏனைய மூவரும் கெய்ரோவுக்குச் (Cairo) சென்றனர். அங்கே சில நாட்கள் தங்கியபின், டாடாவுக்குச் சிறிது குணமுண்டாயிற்று. கெய்ரோவில் ஒரு மாத மிருந்தபின்னர்ப் புகழ்பெற்ற வியன்னு வைத்தியரிடம் சிகிச்சை செய்துகொள்ளும்பொருட்டு டொராப்ஜி தம் தகப்பனுரை ஸான்ரீமோ (San Remo) என்னு மிடத்திற்கு அழைத்துச் சென்ருர். அப்போது ஏப்ரல் மாதத்தின் தொடக்கம்.

1902-ஆம் ஆண்டு தொடங்கியே ஜாம்ஸெட்ஜியின் வாழ்க்கைத்துணையாகிய ஹீராபாய் உடல் நலங் குன்றிவந்தார். 1904-ஆம் ஆண்டுடாடா எகிப்துக்குப் பிரயாணமாகுமுன், ஹீராபாய் இதோ அதோ

என்னுமாறு கவலைக் கிடமான நிலைமையி லிருந்தார். அவர் புறப்படுஞ் சமயத்தில் சிறிது குணமடைந்தது போலக் காணப்பட்டது. ஆனால் ஜாம்ஸெட்ஜீ தம் புதல்வனுடனும் மருமகளுடனும் கெய்ரோ நகரை விட்டு அலெக்ஸான்டிரியா (Alexandria) வழியாய் நேபில்ஸ் (Naples) சென்றவுடன் ஹீராபாய் உயிர்நீத்தனர். குன்றாத பதிபக்தியும், தெய்வ பக்தியும், அன்பும், அருளும் நிறைந்த ஹீராபாயின் நினைவுக்காகச் செலவுசெய்யும்பொருட்டு 35,000 ரூபாய் தனியே எடுத்துவைக்கும்படி டாடா உத்தர விட்டார்.

ஜாம்ஸெட்ஜீயின் உடல்நிலை வரவரக் கேவல மாகிவந்தது. அவர்தம் கால்களில் வீக்கமும் கண்டது. ஸான்ரீமோவை அடைந்தவுடன் நாத்னகல் (Nothnagal) என்னும் ஆற்றல் வாய்ந்த மருத்துவர் டாடாவின் உடல்நிலையைப் பரீட்சைசெய்து பார்த்தார். அங்கே போனபின்பும், அந்த மெலிந்த நிலையிலும் டாடா சும்மா இருக்கவில்லை. அத் தேயப் பழக்கவழக்கங்களையும் ஏழைகளின் வாழ்க்கையைப்பற்றிய விஷயங்களையும் நேரிற் கண்டறிவதற்கென்று அவர் தம் ஆட்களு ளொருவனை யழைத்துக்கொண்டு ஊர்சுற்றத் தொடங்கினர். அவ்வூர்க் கடைத்தெருவி லிருந்த சுவையுள்ள உணவுகளையும், இனிய பழங்களையும் வாங்கிவந்து வயிறார வுண்டார். டாடா வாயைக் கட்டாததால் வைத்தியர்களுக்குத் தொல்லைகள் பலவாயின.

பின்னர் அவரை அங்கிருந்து வியன்னவுக்கு அழைத்துச் சென்றனர். மே மாதத்தில் ஜாம்ஸெட்ஜி தம் குடும்பவைத்தியருடன் பாத்நௌஹீம் என்னுமிடத்திற்குச் சென்ருர். டாடாவின் உடல்வன்மை வரவரக் குறைந்து வந்தது. அவர் பிழைப்பதரிதென்று அனைவர்க்கும் நன்ருய் விளங்கிற்று. அந்நாட்களிற்கூட ஜாம்ஸெட்ஜியின் அறிவாற்றலும் நாவன்மையும் குறையவேயில்லை. தம் வாழ்க்கையின் இலட்சியங்களைப்பற்றி அவர் அடிக்கடி தம் சுற்றத்தினரான ரடான்ஜியிடம் விரித்துப் பேசுவது வழக்கம். தம் எண்ணம் முழுதும் நிறைவேறவில்லை யென்றும், அவைகளை நிறைவேற்றுவது தம் புதல்வர்களின் கடமையாகுமென்றும் அவர் கூறினர்.

இறுதிக்காலம் நெருங்கியது. காலன் கையுங் கயிறுமாக வந்துவிட்டான். ஜாம்ஸெட்ஜிக்குச் சிறிதும் வருத்தம் ஏற்படவேயில்லை. ஒருமனிதனல் அவனது சிறிய ஆயுட்பகுதியில் எவ்வளவு நன்மையடைய முடியுமோ, அவ்வளவையும் டாடா அடைந்திருந்தார். வருங்காலத்தைப்பற்றி எந்த நாளிலும் அவர் கவலைகொண்டவரல்லர். குளவி புழுவைக் கொட்டிக் கொட்டித் தன்மயமாக்குவது போலவே, தம் புதல்வர்களையும் டாடா தம்மைப்போலவே பழக்கிவிட்டார். தாம் முடிக்காது விட்டுச்சென்ற திட்டங்களைத் தம் புதல்வர்கள் முடித்துவிடுவார்கள் என்னும் நம்பிக்கை ஜாம்ஸெட்ஜிக்கு உண்டு.

மே மாதம் 17-ந் தேதியன்று டாடாவின் உடல்நிலை பெரும்பேரச்சத்திற் கிடமாயிற்று. அப்போது அவர் தம் புதல்வர்கள் அவரருகி லில்லை. டாடா, அடிக்கடி "டொராப், டொராப், நீ எங்கிருக்கின்றாய்? ஏன் என்னருகில் வரக்கூடாது?" எனப் புலம்புவார். அப்போதுதான் டொராப்ஜி தம் மனைவியுடன் வியன்னாவிலிருந்து வந்துகொண்டிருந்தார். ஆவியோ நிலையிற் கலங்கியது. அறிவு போவதும் வருவதுமாக இருந்தது. 18-ந் தேதி டாடா, தம் மகன் டொராப்ஜியையும் மருமகளையும் கண்ணிற்கண்டு மனமகிழ்ந்தார். அவர்தமை ஆவலுடன் அருகிலழைத்து "நீங்கள் எங்கே போயிருந்தீர்கள்?" என அன்புடன் வினவினார். அன்புக்கும் உண்டோ அடைக்குந்தாழ்?

1904-ம் ஆண்டு மே மாதம் ஜாம்ஸெட்ஜி நஸ்ஸர்வான்ஜி டாடா பூதவுடலை நீத்துப் புகழுடம் பெய்தினர். அப் பெருந் துன்பச் செய்தி கேட்டு வருந்தாத இந்திய ரில்லை. பம்பாய் நகரமே அன்று துயர்க் கடலில் ஆழ்ந்திருந்த தெனலாம். அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, ஜப்பான் முதலிய வெளிநாடுகளிலுள்ள டாடாவின் நண்பர்கள் பம்பாயி லிருந்த டாடா குடும்பத்தினருக்கு இரங்கற்செய்திகள் அனுப்பி, ஜாம்ஸெட்ஜியின் உயர்பண்புகளைப்பற்றிப் பாராட்டுரைகள் கூறினர். டாடாவின் உடலை இந்தியாவிற்குக் கொண்டுவர இயலாமற்போயிற்று. அதனால், அவரை இங்கிலாந்-

திலேயே மே மாதம் 24உ அடக்கம் செய்தனர். ஸொராஸ்டிரிய மதவிதிப்படி சடங்குகள் ஒழுங்காய் நிறைவேறின. புருக் வுட் (Brook Wood) என்னும் இடத்தில் மரங்களின் இடையே அழகிய ஞாபகச் சின்னமொன்று அவர்பெயரைத் தாங்கி நிற்கிறது.

•

## 14. நற்பண்புகள்

ஜாம்ஸெட்ஜி நுண்மாண் நுழைபுல முடையவர். அவர் செய்தவை எல்லாம் காலத்திற்குத் தகுந்த முற்போக்கான அரிய செயல்கள். அக் காலத்தவர் டாடாவின் செயல்களையெல்லாம் நன்ருய் அறிந்துகொள்ள முடியவில்லை. அவர் கருதிச் செய்த திட்டங்களின் பலன்கள் பிற்காலத்திலேயே பயனளிக்கக் கூடியனவா யிருந்தன. வஞ்சனை, பொய் யின்றி வாணிகத்தி லீடுபட்டுப் பெரும்பொருள் ஈட்டிய தனிப்பெருமை டாடாவுக்கே உரியது.

அழகில் தோயுந் தன்மையை அவர் பெற்றிருந்ததால், இயற்கைவனப்பிலும், உண்மையான கலையிலும் பேரவாக்கொண்டார். இன்பவாழ்வைத் தள்ளித் துன்பத்தை எதிர்கொண்டு அழைத்து, அதைத் தூள்தூளாக்கி வெற்றிபெறுவது எவர்க்கும் எளிதில் இயலும் பண்பன்று. அப் பண்பு டாடாவின் வாழ்க்கை முழுவதும் சிதறிக் கிடக்கக் காணலாம்.

ஜாம்ஸெட்ஜி இளகிய நெஞ்சினர்; பிறர்துன்பங் கண்டு இழுதென இளகும் நன்மன முடையவர். ஆகையால், அவர் தம் பொருளின் பெரும்பகுதியை வறியார்க் கீந்தார். வறியார்க்கொன் றீவதே ஈகையன்ருே? டாடா தம்மைப் போலவே பிறரும் நீதியோடும் நேர்மையோடும் தகவோடும் நடந்துகொள்ள வேண்டு மென்றெண்ணினர். ஆகையால், எவராவது

அவரிடம் பொய்சொல்லி ஏமாற்ற முயன்றால், அவருக்கு அடங்காச் சினமுண்டாகும்.

எல்லோருடனும் கலந்து அமைதியுடன் வாழ வேண்டுமென்ற எண்ணங் கொண்டவராயினும், தம் கொள்கைகளுக்கு விரோதமாக எவரேனும் பேசினல், அவரை இலேசில் விடமாட்டார். முற்கால நிகழ்ச்சியைக் கொண்டு பிற்காலத்தைத் தவறின்றிக் கணக்கிட்டறியும் ஆற்றலை அவர் படைத்திருந்தார். அதனலேயே அவர் வாணிகத்தில் வெற்றி பெற்றார்; அவரைப் பார்த்தவர் யாவரும் விரும்பும்படியான இனிய தோற்றமுடையவர்; ஒருவரையும் அறிந்தோ அறியாமலோ நிந்திக்கமாட்டார். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவோரிடம் அவர் உறவாடுவதில்லை.

டாடாவின் முடிபுகள் அசைக்க முடியாதன. 'அவைகள் நன்மை பயவா' என எவராலும் கூற முடியாது. அதனல், டாடாவிடம் யோசனை கேட்க வந்தவர்கள் கணக்கற்றவ ராவர். அவர் சொல்வதே தக்கதென்று எல்லோரும் ஒப்புக்கொள்ளுவார்கள்.

டாடா உடல்வன்மை பெற்றவர். ஓய்வு ஒழிவின்றி வேலைசெய்தபோதிலும் அவர் களைப்படைவதே யில்லை. ஜாம்ஸெட்ஜி கண்டிப்பானவர்; ஒரு காரியம் செய்ய எண்ணினல் அதனைச் செய்தே தீருவார்; கருத்து வேற்றுமை கண்டால் பிடிவாதம் பிடிக்கமாட்டார்; பிறர் சொல்வதைக் கூர்ந்து கவனித்துக் கேட்டுக்கொள்வார்; தாம் சொல்லியது

தவறென் றுணர்ந்தால் உடனே தம் அபிப்பிரா யத்தை மாற்றிக்கொள்வார்.

குடும்ப வாழ்க்கையி லீடுபட்டிருக்க அவருக்குப் போதிய நேரமில்லை. ஆயினும், அவருக்கு வீட்டி லிருந்த உறவினருடனும் மனைவிமக்களுடனும் வாழ் வதில் விருப்ப மதிகம். அயல்நாடு சென்றபொழுது அவருக்கு வீட்டுக்கு வரவேண்டு மென்னுமாசை உண்டாகும். வீட்டிற்கு வந்து தம் குழந்தைகளைக் கண்டவுடன் அவர் கரையற்ற மகிழ்ச்சி அடைவார்.

அவர் தற்புகழ்ச்சி செய்துகொள்வதில்லை. ஆனால், அவருக்குத் தன்னம்பிக்கை உண்டு. தம் ஆற்றலை நம்பி அவர் பெரிய பெரிய காரியங்களி லீடு படுவார். தம்மா லாகா தென்று எண்ணி எக் காரியத் திலும் டாடா பின்வாங்கமாட்டார். அவர் வெற்றி பெறாத துறையில் ஒருவரும் வெற்றிபெறமாட்டார் என உறுதியாய்க் கூறலாம். டாடா இவ்வுலகை விட்டுச் சென்றார். ஆனால், அவருடைய புகழை அன்றும் கண்டனர், இன்றும் காண்கின்றனம்; இனி யென்றுங் காண்போம்.

‘உழவுக்குந் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம் - வீணில்
உண்டு களித் திருப்போரை
நிந்தனை செய்வோம்.’

—பாரதி

108694